2553

விவேகபோதினி

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி 21 } சுக்கிலஹூ ஐப்பசிமீ :: 1929-ம் ஹூ அக்டோபர்மீ { பகுதி 10

விவேக போதினி

பொது ஜனங்களின் அறிவைப் பரவச் செய்து அவர்கள் க்ஷேமத்துக்காக சென்ற 21-ஆண்டுகளாக உழைத்துவரும் ஒரு மாதப் பத்திரிகை. பற்பல கவர்ன்மெண்டுகளும்; பள்ளிக்கூடங்கள், உபாத்தியாயர்கள், மாணவர்கள் உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும், முனிசிபாலிடிகளும்; பொதுமக்கள் உபயோகத்துக்காக பஞ்சாயத்துக்களும், "விவேக போதினி" யை வாங்கி ஆதரித்துவருகின்றன.

தபால் செலவுடன், சந்தா விபரம்

	உள் நாடு	வெளி நாடு
ஒரு வருஷத்துக்கு	ரூ. 3 8 0	ரூ. 4 8 0
தனிப் பிரதி	ரூ. 0 5 0	ரூ. 0 6 0
மாதிரிப் பிரதி	ரூ. 0 2 0	இனும்.

போஷகர்களுக்கு ரூ. நூறு

ஜீவிய சந்தா (ரு. 50) ரூபாய் ஐம்பது

சந்தாத் தொகை, விளம்பரக் கட்டணம் இவைகளை ஒரு ஏஜண்டினிடமும் கொடுக்கக்கூடாது. சகல தொகைகளும் எங்கள் காரியாலய மானேஜருக்கு அனுப்பிவிடல் வேண்டும். சந்தாதார்கள், குறைந்த விலைக்கு புத்தகங்கள் ஆர்டர் செய்கையில், தங்கள் சந்தா நெம்பரைக் குறிப்பிடவேண்டும்.

ஒப்பந்த விளம்பர விகிதம்

ஒரு வருஷத்துக்கு முழுப் பக்கத்துக்கு	ரூ. 125 0 0
ஒரு வருஷத்துக்கு அரைப்பக்கத்துக்கு	ரூ. 75 0 0
ஒரு வருஷத்துக்கு கால் பக்கத்துக்கு	ரூ. 45 0 0

வியாசம் எழுதுபவர்களுக்கு

வியவசாயம், கைத்தொழில், வியாபாரம் இவைகளைப்பற்றிய வியாசங்களும், அழகான சிறு கதைகளும் தேவை. அவைகள் எளிய தமிழ் நடையில், நல்ல காகிதத்தில் ஒரே பக்கத்தில் மையினால் எழுதியனுப்பப்படல் வேண்டும். ஒப்புக்கொள்ளப்பட்ட வியாசங்களுக்குத் தக்க சம்பாவனை செய்யப்படும். இப்பத்திரிகைக்கு அநேகம் பெண்பாலரும் விஷயதானம் செய்துவருவது கவனிக்கத்தக்கது.

சம்பாவனை செய்யப்பட்ட வியாசங்களை, மறுபடி புத்தக ரூபமாகப் பிரசுரிக்கும் பாத்தியதை, இப்பத்திரிகையின் பிரசுரகர்த்தர்களைச் சேர்ந்ததாகும்.

THE VIVEKA BODHINI

An Illustrated Tamil Monthly devoted to diffusion of knowledge and popular education, Published for the past **21** years. The Viveka Bodhini is subscribed for by the Governments, several Local Boards, Panachayats & Municipalities for the use of Teachers and others in the schools etc., under their control.

Rates of Subscription (Post Free)

	Inland Rs. A. P.	Foreign Rs. A. P.
Per annum	3 8 0	4 8 0
Single copy	0 5 0	0 6 0
Sample copy	0 2 0	Free.

For Patrons Rs. One Hundred

:: Life Subscription (Rs. 50.) Rs. Fifty ::

Rates of Advertisement

Full Page ...	Rs. **125 0 0**	per annum
Half Page ...	" **75 0 0**	per annum
Quarter Page ...	" **45 0 0**	per annum

The above rates are all net and subject to no discount whatever. Advertisement orders should be accompanied with advance.

Notice to Contributors

The Editor solicits contributions on all subjects relating especially to Science, Agriculture, Industry and Commerce and neatly written short stories. Articles should be written in simple colloquial Tamil and on one side of the paper only and in ink. Accepted articles will be paid for, on publication. It is distinctly understood that the Publishers may at their discretion publish in book form, Articles and Short Stories which have been paid for at the time of publication in the columns of the Bodhini.

No moneys should be paid to our agents. Concession rates on book orders are allowed only to *Subscribers who are not in arrears.* Subscribers when ordering for books at concession rates will kindly mention their Register Number. All remittances, letters &c., should be addressed to the Manager, Viveka Bodhini

விவேக போதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரமே புத்தகங்கள் குறைந்த விலைக்குக் கிடைக்கும்

முருகன் வழிபாடு
WORSHIP OF LORD MURUGA

கந்தரநுபூதி

[சதுர்வேதி - சிவத்தியாநாநந்த மஹர்ஷி]

பெண்ணாசை ஒழிக்க

மட்டூர் குழல் மங்கையர் மையல்வலைப்
பட்டூசல் படும் பரிசென் றொழிவேன்
தட்டூடறவேல் சயிலத் தெறியும்
நிட்டூர நிராகுல நிர்ப் பயனே.

இந்திரியங்களோடு இயைந்த மனத்தையும் மயக்கி போதம் தனம் கல்வி மூன்றையும் பொன்றுவிக்கும் தையலார் மையலை ஒழிக்க உதவும் மறை இது.

ஸ்துதி : தட்டு ஊடறவேல் சயிலத்து எறியும் நிட்டூர! நிர்ஆகுல! நிர்ப்பயனே!

தந்திரம் : கண்கவர் வனப்பிற் காரிகையர் உறுப் பின்பால் மனத்தைப் புகவிடாது மறித்தல்.

பிரயோகம் : வியாகூலமும் பயமும் கொள்ளா மனத்தோடு விதிவழி நோக்கிக் குவலய வாழ்க்கைக் கான மாதரிடத்தன்றி மற்றையோரிடத்து மனத்தைச் செலுத்தா தொழுகுதல்.

உரை : (கிரௌஞ்ச) மலையின் உள்ளே இடையூறு நேராதபடி வேற்படையை வீசிய நிஷ்டூரனே (உறுதி வாய்ந்தவனே!) நிர்வியாகூலனே (விசனமற்றவனே!) அச்சமற்றவனே! மணம் வீசும் கூந்தலுள்ள மாதரிடத்துள்ள மோகமென்னும் வலையிற் கட்டுப்பட்டு ஊசலாடும் மனப் பான்மையினின்றும் எக்காலத்து யான் நீங்கி நிற்பேன்? (நீங்கி நின்று நடுநிலையதாகிய உனதருளைப்பெறுவேன் என்றபடி.)

ஈண்டு ஒருண்மை உணரற்பாலது. ஊழ்கூட்டுவிக்கும் பெண்டிராது மூயக்கம் நமது பிரயாசையின்றியே இயைவது. அத்தகைய பெண்டிர் இவரோ அவரோ என நம் மனம் அலைவது கண்கூடு. அத்தகைய அலைவினால் உள்ளமும் புத்தியும் சிதறுண்டு அழிதல் ஸஹஜம். அப்பொழுது அருளுணர்வு 'தக்க இன்ன தகாதன இன்னன' என்பதை யுணர்த்தும். பஹிர்முகப்பட்டுக் கலந்து செல்லும் மனத்தைக், கண்ட கண்ட நெறியெல்லாம் செலுத்திச் சிதைவுறாதபடி 'அறிவு அதனை அடக்கி நடத்துவதற்கு, உன்முகப்பட்ட இறைவனது அருள் ஞானம் துணையாக நிற்பதென்பதை யுணர்த்துவார் 'ஊசல் படும்பரி சென்றொழிவேன்' என்றார். பரிசு என்பதற்குப் பதிலாகக் கூறப்படும் படர் என்னும் சொல் பாடாந்தரமாகாதென வுரைக்க. இம்மறை துடிக்கும் உள்ளத்துக்கும் உணர்த்தும் அறிவுக்கும் உள்ள தாரதம்மியத்தை உணர்த்த நின்றதாகும். அதனால் படர்ப் படுவதற்கொன்று மில்லையென அறிக.

நமனை விலக்க

கார்மா மிசைக் காலன்வரிற் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார்ப வலாரி தலாரியெனுஞ்
சூர்மா மடியத் தொடுவேலவனே.

கால ரூபமாக நம் மெதிரிற்பட்டு நிற்கும் யமஸ்வரூபத்தை எதிர் நில்லாதபடி யோட்ட உதவும் மறை இது.

ஸ்துதி : தார்மார்பா! வலாரி தலாரி எனும் சூர்மா மடியத் தொடுவேலவனே!

தந்திரம் : ஒருவித சூழ்நிலையை ஒழிக்க மற்றொரு வித சூழ்நிலையை மனங்கொள்ளுதல்.

பிரயோகம் : தந்திரத்திற்கூறிய மனப்பான்மையோடு புதிதாகக் கொண்ட சூழ்நிலையின் முழுப் பயனையும் அநுபவிப்பதாகக் காட்டுதல்.

உரை : மாலையணி மார்பனே! வலனது சத்துருவாகிய இந்திரனது லோகத்திற்குப் பகை என்னும் (சூரபத்மனாகிய மாமரம்) நடுக்கத்தைத்தரும் மிருகவுணர்ச்சிகள் ஒழிய ஞானசக்தியாகிய வேலை ஓச்சுபவனே! கரிய மிருகமாகிய எருமைக்கடாவின்மீது வருவதாகக் கருதப்படும் யமன் வருவதாக என் கண்ணுக்குப் படுமாயின், தோகைப் பரியாகிய உனது மயில்மீது உனது காட்சியை என்முன் நிறுத்துவாயாக. நிறுத்தி முன் காட்சியையும் அக் காட்சியால் வரும் பயத்தையும் ஒழிப்பாயாக.

மனமே ஸ்வர்க்கத்தை நரகமாகவும், நரகத்தை ஸ்வர்க்கமாகவும் ஆக்குவது. இம்மனம் ஒரு நிலைப்பட்டால் அதனைத் தாங்கும் சரீரம் மாறுநிலைப்பட்ட அநுபவங்களைத் துய்க்கும்போதும் அவ்வநுபவங்களால் வரும் துன்பத்தை யடைதல் முடியாது. இவ்வுண்மைக்குப் பல சான்றுகள் கூறலாமெனினும் ஒன்றே பகர்வோம். நீற்றறையில் உடலை வேவிக்குந் தணலிடை நின்ற பெரியார்,

"மாசில் வீணையும் மாலை மதியமும் வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்" ஆதிய குளிர்ந்த சூழ்நிலைகளை முறுகக்கருதி உடல் துயர் ஒழித்தது காண்க.

புத்தகாலய இயக்கம்

LIBRARY MOVEMENT

மனிதர்க்குக் கல்வி யறிவு இன்றியமையாததென்பது எல்லோரும் அறிந்த விஷயமே. ஒரு நாட்டார் மேம்பாடுபெற்று வாழ வேண்டுமானால், சுகமான வாழ்வு வாழ வேண்டுமானால், அந்நிய நாட்டாரால் மதிக்கப்படும்படியான வாழ்வு வாழவேண்டுமானால், அந்நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் தன்மதிப்புடையவரா யிருத்தல் அவசியம். அதற்கு வழி அவர்கள் தங்களிடத்திலுள்ள குற்றங் குறைகளைக் கண்டு தாங்களே அவைகளை நீக்கிக்கொள்ள முயற்சி செய்வதுதான். பண்டைக்காலத்தில் பெருஞ்சிறப்பும் தன் மதிப்பும் பிறர் மதிப்பும் பெற்றிருந்த நமது நாடு தற்காலத்தில் மிகவும் கேவலமான நிலையிலிருக்கிறது. அதற்குப் பலர் பல காரணங்கள் கூறலாம். எனினும், கல்வி யறிவில்லாமை என்பது அவற்றுள்ளொரு முக்கிய காரணமாகு மென்று எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் படுகிறது. மேல் நாடுகளில் கல்வி யறிவில்லாதவர் மிகவும் குறைந்திருக்க, நம் நாட்டிலோ கல்வி யறிவுள்ளவர்கள் அத்துணை யளவாகவே யிருக்கிறார்கள்.

இந்தக் கல்வி யறிவின்மை ஒரு பெரும் பேய். அதன் வயிற்றிற் பிறந்த குருட்டு நம்பிக்கையும், அநாசாரமும் ஆயிரக்கணக்கான கேட்டை விளைவித்து, நாட்டின் சீரையும் சிறப்பையுங் கெடுத்து, மதிப்பைக் குலைத்து, மதவளர்ச்சியைத் தடுத்து, உண்மை யறிவைத் தலையெடுக்க வொட்டாமலடித்து நம்மைத் தற்கால நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டன. இந்த அறியாமை நீங்கும் வரை, நம் நாட்டில் மதம் தலையெடுக்க வழியில்லை; உண்மையுணர்ச்சி வளர இடமில்லை; ஸ்வதந்திரம் அடைதல் துர்லபம்; கலைகள் வளரவும் நாம் எல்லா விதங்களிலும் மேம்பாடு பெறவும் மார்க்கமில்லை. ஒவ்வொருவரும் இந்த உண்மையை யுணரவேண்டும். ஒவ்வொருவருக்கும் கல்வி யறிவின் அவசியத்தைப் போதிக்க வேண்டும். எல்லோரையும் கல்வி கற்கச் செய்யவேண்டும்.

காரியமோ பெரியது. நமக்குக் கிடைத்திருக்கும் கருவியோ மிகச் சிறியது. படிப்பிலாகா நமது கைக்குள் வந்து விட்டால் மட்டும் கல்வி யறிவின்மை நாட்டை விட்டு நீங்கிவிடுமா? இந்திய ஜனங்கள் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் கிராம வாசிகளே. கிராமம் ஒன்றுக்குச் சராசரி 418 பேர்கள் இருப்பதாயும், அம்மாதிரியான 6,85,655 கிராமங்கள் இருப்பதாயும், 1921-ம் வருஷத்திய ஜனத்தொகைக் கணித ரிப்போர்ட்டுக் கூறுகிறது. இவற்றுள் பல கிராமங்கள், பதினைந் திருபது வீடுகளே கொண்ட சேரிகளாகவும் குக்கிராமங்களாகவும் இருக்கின்றன. எழுத்துப் படிப்பு வாசனையே இல்லாத எண்ணிறந்த ஜனங்கள் அக் கிராமங்களில் மிகுந்து கிடக்கிறார்கள். மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் கற்றுக்கொள்ள வேண்டிய இன்றியமையாத விஷயங்கள்கூட இவர்களுக்குத் தெரிவதில்லை. கற்றுக்கொடுப்பார் ஒருவருமில்லை. கற்றுக்கொடுக்க வழியுந் தெரியவில்லை; கற்றுக்கொடுக்க வேண்டுமென்ற ஆத்திரமும் இத்தனை காலமாக இல்லாதிருந்தது.

சென்ற சில வருஷங்களாக, கல்வி யறிவில்லாத பெரியவர்களுக்குக் கல்வி கற்பிக்க வேண்டி சிற்சில விடங்களில் பெரியார் பள்ளிக்கூடங்கள் (Adult Schools) ஏற்படுத்தப்பட்டு அவைகள் திருப்திகரமாகவும் மிகவும் பிரயோஜன முள்ளவைகளாகவும் நடந்து வருகின்றன. இம்மாதிரியான பல பள்ளிக்கூடங்கள் ஒவ்வொரு பெரிய நகரத்திலும் ஏற்படவேண்டும்; ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு பள்ளிக்கூடமாவது ஏற்படவேண்டும். இவ்வெண்ணங் கொண்டே தமிழ்க்கவிரத்தினமாகிய பாரதியார் இவ்வாறு பாடியுள்ளனர் போலும்:—

வீடுதோறுங் கலையின் விளக்கம்
    வீதிதோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலு முள்ளன வூர்கள்
    நகர்க ளெங்கும் பல பல பள்ளி
தேடுகல்வி யிலாததோ ரூரைத்
    தீயினுக் கிரையாக மடுத்தல்
கேடுதீர்க்கு மமுதமென் னன்னை
    கேண்மைகொள்ளவழி யிவைகண்டீர்.—

இம்மாதிரியாகப் பள்ளிக்கூடங்கள் எங்கும் ஏற்பட்டுத் திருப்திகரமாக வேலை செய்து வந்தாலுங்கூட, சிலர் அதன் பிறகும் கல்வி யறிவில்லாதவர்க ளாகவே யிருப்பார்கள். ஆனால் அவர்களின் தொகை வெகு சிறியதாக

கோல் ஆடக் குரங்கு ஆடும், அதுபோல மனம் ஆடும்.

வே யிருக்குமென்பது நிச்சயம். வயது முதிர்ச்சியாலோ, வேறு சில காரணங்களாலோ போதிக்கப்படும் கல்வியைக் கிரகித்துக்கொள்ளச் சக்தியற்றவர்களாய், எனவே எழுதப் படிக்கத் தெரியாதவர்களாய்ச் சிலர் இருப்பார்கள். அந்நிலைமையி லுள்ளவர்களுக்கு உபந்நியாசங்கள் மூலமாகவும், பிறர் படித்துக் காட்டுவதாலும் இன்றியமையாத விஷயங்களைப் போதிக்கலாம். நிபுணர்களைக் கொண்டு, பொருள்கள், சித்திரங்கள், நிழல் படங்கள் (Magic Lantern Slides) முதலியவற்றின் உதவியால் இவ் விஷயங்களைப்பற்றிய உபந்நியாசங்களைச் செய்விக்கச் செய்யலாம்.

சென்னைப் புத்தகாலயச் சங்கத் தலைவராகிய ஸ்ரீமான், கே. வி. கிருஷ்ணசாமி ஐயரவர்கள் இவ்வாறு எழுதுகிறார்:— "சென்னைப் புத்தகாலயச் சங்கம் மூன்று விதமான வேலைகளை மேற்கொண் டிருக்கிறது. அவற்றுள் முதன்மையானது— அதையே முக்கியமானதாக நான் கொள்வேன்—பொது ஜனங்களைப் பற்றியது; கல்வி யறிவில்லாத பெரியவர்களை (வயதானவர்களை)ப் பற்றியது, இவர்களுக்குக் கல்வி கற்றுக்கொடுக்கப்படா விட்டாலும் கேள்வி வாயிலாகவாவது போதிக்கப் படவேண்டும்."

அவர் மற்றோரிடத்தில் இவ்வாறு எழுதியுள்ளார்:—"நமது தேசத்தில் கல்வி யறிவின்மையின் அபாரத்தை யுத்தேசித்து, முதலிலேயே புத்தகசாலைகளை ஸ்தாபனம் செய்வதாவது அவைகளைக் கல்வியபிவிருத்திக்கு முதன்மைக் கருவியாக உபயோகிப்பதாவது முடியாது. ஆரம்ப முதற்கொண்டே கல்வி யறிவுள்ளவர்களின் ஞானாபி விருத்திக்கென்றே புத்தகசாலைகளை அமைப்பதோடு மட்டில் நம்முடைய வேலை முடிந்து விடுகிறதில்லை. கல்வி யறிவில்லாதவர்களுக்குக் கல்வி யறிவு போதிப்பதும் நமது கடமையே யாகும். அவர்களுக்கு எழுதப் படிக்கக் கற்பிக்காவிட்டாலும் வாய்மொழியாகப் போதிக்கவேண்டும். நமது முயற்சியில் இம்மாதிரியான வேலையே பெரும்பாகமாக விருப்பதால், இதையே நாம் முதன்மையாக அதிக கவனத்தோடு நடத்தவேண்டும். துரதிருஷ்டசாலிகளான கல்வியறிவில்லாத நம்முடைய சகோதரர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுப்பது கல்வி யறிவுடையவர்களாகிய நம்முடைய முதன்மையான கடமை. அத்தியாவசியமாய்த் தெரிந்துகொள்ள வேண்டியதை அவர்களுக்குப் போதிப்பதும், அதனால் அவர்களுடைய வாழ்க்கையை மேம்பாடு பெறச் செய்வதும், அவர்களது சமூகக் கடமைகளைச் சரிவர நடத்தத் தெரிவிப்பதும் ஆகிய விஷயங்களைப் போதிப்பதற்கு நாம் வழிதேடுவதே முதற் செய்கையாகும்."

உண்மையான சுய ஆட்சி அறிவு விருத்தியாக விருத்தியாக எல்லோருக்கும் கல்வி கற்பிக்கவேண்டிய அவசியம் பிரமாதமாகி விடுகிறது. அந்த உணர்ச்சி தடுக்க முடியாததாகவும் ஆகிவிடுகிறது. எல்லோரும் கல்வி கற்கச் சமமான உரிமை யுடையவர்களே; அவரவர்களுக்கு அவ்வறிவைப் போதிப்பதற்காக பொதுஜனக் கல்வி யபிவிருத்தி வழிகள் பலப் பல கண்டுபிடிக்கப்பட்டு கையாளப்பட்டு வந்திருக்கின்றன. பொதுப் புத்தகசாலை இவ்வழிக்கு மிகவும் உபயோகப்படக் கூடியதாகக் கருதப்பட்டு இப்பொழுது உபயோகிக்கப் பட்டும் வருகின்றது.

எவ்விதத்திலாவது விஷய அறிவைப் பரவச் செய்வோமானால் அவ்விஷயங்களை யறிந்து கொண்டவர்களுக்கு, அவ்விஷயங்களைப் பற்றிய எல்லா விவரங்களையும் தாங்கள் எப்படியாவது தெரிந்து கொண்டு விடவேண்டும் என்ற அவா நாளடைவில் ஏற்படும். எனவே, அவ்விஷயங்களைப் பற்றிய புத்தகங்களை வாசிக்க ஆரம்பிப்பார்கள். ஆகையால் அவ்விதப் புத்தகங்களைக் கொண்டுள்ள புத்தகாலயங்கள் நாடெங்கும் ஸ்தாபிக்கப் படவேண்டி யேற்படும்.

புத்தகாலயங்களை நாடெங்கும் ஸ்தாபித்து, ஒன்றோடொன்று பிணைத்து, ஒன்றுக்கொன்று வேண்டிய வுதவிபுரிந்து வரும்படிச் செய்து, எல்லோரும் அப் புத்தகாலயங்களால் முடிந்தமட்டும் நன்மை பெறும்படிச் செய்ய வேண்டி, சென்ற இரண்டு வருஷங்களாக ஒரு முயற்சி 'சென்னைப் புத்தகாலய இயக்கம்' எனும் பெயரால் இருந்துவருவது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இவ்வியக்கத்தில் பல கல்வி யாளர்களும் தேசாபிமானிகளும் ஈடுபட்டிருக்கின்றனர். புத்தகாலய இயக்

கத்தை ஜனங்களுக்குள் நன்ருய்ப் பரவச் செய்து புத்தக சாலைகள் மூலமாகக் கல்வியை விருத்தியாக்குவதும், பொது ஜனங்களுக்கு ஞானம் வளர்ப்பதற்கான நன்முயற்சிகளை யாதரித்துப் படிப்பை வளர்ப்பதுமே இந்தச் சங்கத்தின் நோக்கம்.

இந்த நோக்கங்களை வெளியிடவும் ஜனங்களின் உதவியைப் பெறவும், தங்கள் கோரிக்கைகளைக் காரியமாக மாற்றுவதற்கான அடிப்படையாகவும், வழிகாட்டி யாகவும், இச்சங்கத்தார் 'புத்தகாலய இயக்கம்' என்ற நூலொன்றை வெளியிட் டிருக்கிருர்கள். இப்புத்தகமானது இவ்விஷயத்தில் ஊக்கங்கொண்ட அபிமானிகள் பலர் இம் முயற்சி சம்பந்தமாக தங்கள் தங்களுக்குத் தோன்றிய விஷயங்களைப்பற்றி எழுதிய வியாஸங்களின் திரட்டு. அது ஒரே புத்தகமாயினும் ஐந்து பகுதிகள் கொண்டது. முதல் பகுதியில் ஆங்கில வியாஸங்களும், இரண்டாவது பகுதியில், தமிழ் வியாஸங்களும், மூன்ரும் பகுதியில் தெலுங்கு வியாஸங்களும், நான்காம் பகுதியில் கன்னட வியாஸங்களும், ஐந்தாம் பகுதியில் மலையாள (கேரள) வியாஸங்களும் தொகுத்து வைக்கப்பட் டிருக்கின்றன. சென்னைக் கவர்னர் வைக்கவுண்ட் கோஷன் எழுதிய ஸ்ரீமுகமும் (Message) ஸ்ரீமான் வி. எஸ். ஸ்ரீநிவாச சாஸ்திரியாரவர்கள் எழுதிய முன்னுரையும் பல பாஷைகளிலும் இவற்றின் மொழி பெயர்ப்புக்களும் கொண்டது. அன்றியும், இச்சங்கத்தார் அவ்வாங்கில வியாஸங்களுள்ளும் தமிழ் வியாஸங்களுள்ளும் முக்கியமானவைகளைத் திரட்டி ஒரு சிறிய புத்தகமும் வெளியிட்டிருக்கிருர்கள்.

இவ்வியாஸங்களெல்லாம் பொதுக் காரியங்களில் தலையிட்டுழைக்கும் முதியோர்களாலும், இவ்வியக்கத்தில் ஊக்கங்கொண்டு சிரத்தையோடும் காரிய சித்தியாகும் வரை விடா முயற்சியுடன் உழைத்து வரும் சங்கல்பத்தோடும் வேலை செய்துவரும் கனவான்களாலும், இவ்வியக்கத்தின் நோக்கம், கதி, விருத்தி, பலாபலன்கள் முதலியவைகளை மேல் நாடுகளுக்குச் சென்று விஸ்தாரமாய்ப் படித்துப்பார்த்தறிந்து வந்த கனம் எஸ். எர். ரங்கநாதம், ஸ்ரீமான் எ. இராமஸ்வாமி முதலியார் போன்ற நிபுணர்களாலும் எழுதப்பட்டவை. அற்ப பாஷைப் பயிற்சியுள்ளவர்கள் கூட எளிதில் உணர்ந்துகொள்ளும்படி எளிய தெள்ளிய நடையில் எழுதப்பட்டவை. எனினும் இப் புத்தகம் விஷயக் களஞ்சியம். இப்புத்தகத்தில் இவ்வியக்கத்தின் பல வேறு அம்சங்களும் நன்ருய் விவரித்துக் கூறப்பட்டிருக்கின்றன.

இப்புத்தகமானது இவ்வியக்கத்தில் விசேஷ அபிமானங்கொண்டு உழைத்து வருகிறவர்களுக்கு மென்மேலும் உழைக்கச் சக்தியையும் ஊக்கத்தையும் கொடுக்கக்கூடியது; இவ்வியக்கத்தினிடம் சிறிது அன்பு கொண்டவர்களுக்குத் தைரியங்கொடுத்து அவர்களது ஆதரவை உழைப்பவர்களுக்குப் பெற்றுத்தரவல்லது; இவ்வியக்கத்தில் சந்தேகங்கொண்டவர்களுக்கு இவ்வியக்கம் நன்மை பயக்குமோ அல்லது இது மேனுட்டுச் சரக்காய் நம் நாட்டிற்குக் கேடுவிளைவித்து விடுமோ வென்ற சந்தேகிகளுக்கு, அவர்கள் கொண்ட சந்தேகங்களை நீக்கி அவர்கள் மனத்தில் உற்சாகத்தையுண்டாக்கி அவர்களாலான உதவியைச் செய்யத் தூண்டக் கூடியது; இவ்வியக்கத்தில் வெறுப்புக் கொண்டவர்களுக்கு இவ்வியக்கத்தின் நோக்கங்களையும், இவ்வியக்கம் வேலை செய்யப்போகும் வழிகளையும், செய்து முடிக்கக்கூடிய காரியத்தின் நற்பலன்களையும் நன்ருக எடுத்துக்காட்டி தக்க காரணங்களால் அவர்களுடைய வெறுப்பை நீக்கிவிடக் கூடியது. எனவே இவ்வியக்கத்தில் உழைப்பவர்களுக்கு இத்துணை நாட்கள் ஏற்பட்டதுபோல் இனிமேல் இடையூறுகளேற்படா தென்பது நிச்சயம்.

ஆங்கில பாஷையிலும் தமிழ்ப் பாஷையிலும் உள்ள வியாஸங்களைப் போலவே, மற்ற மூன்று பாஷைகளிலுமுள்ள வியாஸங்களும் சிறப்பும், பொருள் மிகுதியும், விஷயப் பெருக்கும், நடை நயமும், சொல்லினிமையும் வாய்க்கப்பெற்று படிப்பவர்களுக்கு ஆனந்தத்தையும் மென்மேலும் படிக்க ஓர் அவாவையும் உண்டாக்குமென்றே கருதுகிறேம்.

இச் சங்கத்தார் இப் புத்தகத்தை வெளியிட்டிருப்பது 'ஆதர்சமாகவன்று, வழிகாட்டியாக' இம்மாதிரியாகப் பல வியாஸங்களும, பல வியாஸங்கள் கொண்ட பல நூல்களும் கூடிய சீக்கி

ரம் வெளிவர வேண்டியது அவசியமாகும். கிராம உத்தாரணத்திலும், கிராமக் கல்வியபி விருத்தியிலும் சிரத்தை யுள்ளவர்கள் இதுபோன்ற நூல்களை மிகவும் அன்பொடு ஏற்று ஆதரிப்பார்கள். ஏனெனில், அவர்கள் முதற் செய்ய வேண்டியது யாதெனில், கிராம வாசிகளினுடையவும், கிராமக் கல்வி, பள்ளிக்கூடங்கள் தினசரி வாழ்வு, தொழில், விவசாயம், ஜனங்களின் நடவடிக்கை முதலியவற்றினுடையவும் தற்கால நிலைமைகளையும் அவைகளை விருத்தி செய்யக்கூடிய வழிகளையும் ஊகித்துணர்ந்து எல்லோருக்கும் பயன் படும்படி வெளியிட வேண்டியதே. அவ்வாறான எந்த முயற்சியையும் இந்தியாவின் மிக்கக் கடினமானதும் அத்யாவசிய மானதுமாகிய கல்வியபிவிருத்திக்கு உறுதியானதும் ஊக்கந் தரத்தக்கதுமான ஓர் அடிப்படையாகும்.

இப்புத்தகம் ஜனங்களின் கல்வி யறிவை விருத்தி செய்ய விரும்பும் ஒவ்வொருவருக்கும் அதிக உபயோகப்படக் கூடியதாகவும் அவர்களுக்கு மேன்மேலும் ஊக்கத்தையும் சக்தியையும் கொடுக்க வல்லதாகவும் இருக்கும் என்பதிற் சையமில்லை. எனவே, நாட்டாரின் கல்வி யறிவு விருத்திக்காகப் பாடுபடும் ஒவ்வொருவரும் இப் புத்தகத்தை அவசியம் படித்தறிந்து, இதிலுள்ள விஷயங்களால் தங்களுக் கேற்படக்கூடிய சாதனங்களையும் சௌகரியங்களையும் தெரிந்துகொண்டு காரிய சித்தி பெறுதல் மிகவும் சுலபமாக இருக்கும். புத்தகசாலை இயக்கத்திற்காகப் பாடு படுவோர் பொருட்டு எழுதப்பட்ட இவ்வியாஸங்கள் உத்தேசித்த காரியத்தை நன்கு நிறைவேற்றுவதோடுகூட கல்வி யறிவைப் பரப்பும் விஷயத்தில் மனத்தைச் செலுத்தும்படி ஊக்கத்தையுண்டாக்கி புதுமாதிரியான வழிகளையும் கற்பிக்கும் என்பதில் தடையில்லை. எனவே இவ்வியாஸங்களை ஜனங்களெல்லோரும் நன்றாகப் படித்தறிந்து பயனடைவார்களென்று நம்புகிறோம்.

இவ் இயக்கத்திற்கு ஸ்ரீமான் K. V. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள் தலைவராய் அமைந்திருப்பது நம் தமிழ் நாடுசெய்த பாக்கியமே யாகும். வெறும் பேச்சுடனும் படாடோபத்துடனு மிருக்கும் பலரைப்போலல்லாது, எடுத்த காரியத்தை ஒழுங்குடனும், யாவரும் போற்றும் வண்ணமும் செய்யும் திறன் மிகக் கொண்டவர் ஸ்ரீமான் ஐயரவர்கள். இவரது அரிய தொண்டை நாம் போற்றுகிறோம். இவருக்கு தீர்க்காயுளையும் சாசுவதமான புகழையும் ஆண்டவன் அருள்வாராக!

அறிவுநூற் சிறப்புச் சொற்கள்

SCIENTIFIC TECHNICAL TERMS

[சுவாமி சுத்தானந்த பாரதியார் எழுதியது]

ஆங்கிலத் தமிழர் :— "என்னையா 'தமிழ், தமிழ்' என்று அடித்துக் கொள்ளுகிறீர்." பழம் பாட்டையாக்களின் 'கு, சு, டு, து, பு, று' விலும் 'அன், ஆள, அர், ஆரி' லும் என்னேயிருக்கிறது. காலம் முற்றிப்போய் விட்டது. நாகரிகம் வலுத்துவிட்டது. பர்னார்டுஷா, தாகூர், ஈட்ஸ், போஸ், ரோலந்து போன்ற பெரியார்கள் புதுப் புதுமைகளை பாட்டு, சோதனை வாயில்களாக விளக்குகின்றனர். இப்போது பழந்தமிழாம். திருப்பதியைத் தாண்டி உங்கள் தமிழ் செல்லமுடியுமா?

"வடவேங்கடந் தென்
குமரி யாயிடை"

இதுதான் தமிழின் கதி. அதிற்கூட பெரும்பாலும் ஆங்கில வுணர்ச்சி யுள்ளவரே மிகுதி. விளங்காத் தமிழில் உங்கள் கந்தபுராணங்களை எழுதித் தமிழைத் தற்காலத்திற்கு உதவாமல் ஆக்குகிறீர்கள்!

தமிழ் அன்பர் :—அன்பரே சற்று பொறும். தமிழ் மலர்ந்துவிட்டது! தமிழ்த் தென்றலை நுகரமுடியாமல் சட்டைகளையும், மனக்கசப்பையும், தாய் மொழி வெறுப்பையும் போட்டுக்கொண்டு ஏன் தவிக்கின்றீர்கள். தமிழ் புதுமணம் பெற்றுவிட்டது. அது இன்னும் வளரும். இன்னும் எண்ணிறந்த போப், (Pope) பிஷி (Biche) வீரமாமுனிவர்

போன்றோர் தமிழைக்கற்று அதன் தேனருந்த மேல் நாட்டு வண்டுகளை அழைப்பர். தமிழ் மலரின் மகரந்தத்தை அவ் வண்டுகள் உலகெங்கும் பரப்பும். எதற்கும் காலமுண்டு!

ஆ. த:— காலம் வரும்போது கன்ஸிடர் பண்ணலாம், (யோசிக்கலாம்,) அட்பிரஸெண்டு (இப்போது) யோசியுங்கள். டெக்னிகல் வேட்ஸ் (சிறப்புச் சொற்கள்) ஆரியத்தில் தானே செய்யவேண்டி யிருக்கிறது. தமிழ் is a poor, poor language with regard to this (தமிழ் இவ்வகையில் மிகவும் வறிய, வெறுமை மொழியா யிருக்கிறது, ஸயன்டிபிக் வேட்ஸின்றி எந்த பாஷையும் முன்னேறாது.

த. அ:— அண்ணலே, மீண்டும், பாதி நாவை ஆங்கில வலிப்பு இழுத்துவிட்டதே. அந்தோ இது பெரும் பிணி. பெரும் பிழை. தமிழில் மற்ற எந்த மொழியிலும் வெளியிட முடியாதபடி அவ்வளவு தெள்ளிய, சிறப்புச் சொற்களை யாக்கலாம். அந்தத் திண்மையால் தான் தமிழ் உயர்ந்ததென்கிறேன். ஆரியத்திலும், ஆங்கிலத்திலும் அழகிய தமிழ்ச் சொற்கள் உள்ளன. தமிழ்ச் சொற்களின் சீரலும், நேர்வும், முத்தழகும் இனிவும், தெள்ளிதின் விளங்கும் பசும்பொலிவும் வேறு எம்மொழிக்கும் இல்லையென்றே கூறுவேன். தமிழே தமிழ்.

ஆ. த:—அ! அ! அ! இதோ தலைகுனியப் போகிறீர். இன்றுமுதல் நான் உங்களுக்கு Physics Chemistry, Botany, Zoology, Physiology, Geography, Astronomy, Astrology முதலிய சாஸ்திரச் சொற்களைச் சொல்லுகிறேன். தமிழ் சொல்ல வேண்டும். அதிகமாக ஆரியம் கலக்கக் கூடாது. தாங்கள் தோற்றால் நான்கணு தலையொட்டி தமிழ் ஆங்கிலத்திற்கு அடிமை என்று எழுதித்தரவேண்டும். அதை நான் பன்மொழிச் சபையில் கண்ணாடி போட்டுவைக்கிறேன்.

த. அ:— அண்ணலே நான் எழுதித் தருகிறேன். ஆங்கிலச் சிறப்புச் சொற்களின் வேர்ப்பொருள்களைத் (Roots) தாங்கள் விளக்கவேண்டும். ஆனால் தமிழில் மொழியே பொருளை விளக்கும். இத்திறத்தில் தமிழையும் ஆங்கிலத்தையும் ஒப்பிட்டு நான் வெற்றியடைந்தால்

“தமிழே மொழிக் கரசி
தமிழே மொழிக்கு ருசி”

என்று தாங்கள் எழுதித்தரவேண்டும். இதை யான் தமிழர் நெஞ்ச மாளிகையில் முத்துப் பதித்து விளங்க வைக்கிறேன்.

சரி தொடங்கலாம். ஆங்கிலம் உம்மது, தமிழ் எம்மது:

ஆ. த:—முதலில் Physics—ஐ எடுத்துக் கொள்வோம். ஆரியத்தில் பௌதிக சாஸ்திரம் என்பர். தமிழில்?

த. அ:— இரண்டும் உடனே நீண்ட சூத்திர மெழுதினலொழிய விளங்குவதில்லை. Physics என்றால் Science of the matter என்கின்றனர். அதாவது பொருள் பற்றிய நூல். தமிழில் அதற்குப் பொருள் நூல் என்றே கூறுவோம்.

ஆ. த:—பேஷ்! மேற்செல்லுவோம்.

✓ PROPERTIES OF MATTER

பொருள் தன்மைகள்

PHYSICS (பொருள் நூல்)

1. Matter — பொருள்
2. Nature — இயற்கை
3. Form — வடிவு
4. State — நிலை
5. Property — தன்மை
6. Instrument — கருவி
7. Measurement — அளவை
8. Machine — பொறி
9. Heat — சூடு
10. Light — ஒளி
11. Sound — ஒலி
12. Magnetism — கவர்ச்சி
13. Electricity — மினல்

முக்காலம் காகம் முழுகிக் குளித்தாலும் கொக்கு ஆகாது.

14 Solid Substance — திண்பொருள்
15 Liquid ,, — நீர்ப்பொருள்
16 Gaseous — காற்றுப்பொருள்
17 Oxygen — உயிர்க்காற்று
18 Hydrogen — நீர்க்காற்று
19 Force — வன்மை
20 Weight — பொறை
21 Other forces — பிற வன்மைகள்
22 Molecules — பொருட்டுளிகள்
23 Volume — பருமன்
24 Brush — பீலி
25 Surface — மட்டம்
26 Viscous liquid — உறையும் நீர்ப்
27 Volatile — ஆவியாவது [பொருள்
28 Pressure — அழுத்தம்
29 Cubi foot — பருமனடி
30 Metals — மண்வகை கனிப்பொருள்
31 Sublimation — நேராவியாதல்
32 General property — பொதுத் [தன்மை
33 Specific ,, — குறித்த ,,
34 Impenetrability - இடமடைத்தல்
35 Divisability — வகுதன்மை
36 Porosity — துளைமை
37 Laboratory — சோதனைச்சாலை
38 Filter paper — வடிதாள்
39 Cone — முடி
40 Siphon — வடிகுழாய்
41 Test tube — ஆய்குழாய்
42 Solution — கரைவு
43 Steam — நீராவி
44 Vapour — ஆவி

45 Retort — குழாய்க்கலயம்
46 Flask — செம்பு [தொட்டி
47 Cylindrical tub — உருளைத்
48 Tripod — முக்காலி
49 Residue — கசண்டு
50 Distillation — தூய்நீர் வடித்தல்
51 Filter — வடிகட்டி [தன்மை
52 Compressability — இறுகும்
53 Inertia — (தன்) உணர்வின்மை
54 Law of Motion — அசைவுண்மை
55 Foot-ball Ground — பந்தடி [மேடை
56 Force of Gravitation — நிறை
57 Planet — கோள், (கிரகம்) [வன்மை
58 Balance — நிறுவை, தராசு
59 Stand — தாங்கி
60 Weight arm — பொறைக் கை
61 Power atop — வன்மைக் கை
62 Fulcrum — தால், பொறைநடு, [மையம்
63 Physical balance — நுண்ணிறு
64 Mark — வரை, குறிப்பு [வை
65 Elasticity — நீண்டு சுருங்கல்
66 Spring balance — வில் தராசு
67 Compression balance — அமிழ்
68 Limit — மட்டு, எல்லை [நிறுவை
69 Tenacity — தாங்கு தன்மை
70 Ductility — நீட்சி
71 Fountain pen — ஊற்றுக்கோல்
72 Ink filler — மையடைப்பான்
73 Malleability — தகட்டுத் தன்மை
74 Hardness — உறுதி

CHIEF FORCES OF NATURE

முதன்மையான இயல்வன்மைகள்

75 Cohesion — பற்று [கவர்ச்சி
76 Chemical attraction — திரிபுக்
77 Bar magnet — கவர்சட்டம், காந்தச்சட்டம்
78 Iron filings — இரும்புத்தூள்
79 Centre of gravity — நிறை நடு
80 Perpendicular — நேர், செங்குத்தான, நெடிய
81 Adhesion — ஒட்டுத் தன்மை
82 Elements — தனிப்பொருள்,முதன்
83 Mass — திணிவு [மைப்பொருள்

MEASUREMENT

அளவை

84 Linear measurement — நீட் [டளவை
85 Decimal system — பதின்மை யொழுங்கு (முறை)
86 Metric system — மீடர் முறை [அல்லது வரை முறை
87 Metre — வரை
88 Millimetre — ஆயிரத்தொருவரை (1/1000 M) ஆ/வ

முடிச்சுப் போனதும் அல்லாமல் இளித்தவாய்ப் பட்டமும் கூடக்கிடைத்தது.

வீடும் மாதரும்

HOME & WOMEN

[மிஸ். ஸி. கார்டன், டீசர்ஸ் காலேஜ்,
சைதாப்பேட்டை.]

மனிதன் பல மாளிகைகளைக் கட்டலாம். ஆனால் அம் மாளிகைகளுக்கு உயிரைக் கொடுத்ததுபோன்ற அழகை உண்டாக்குவது மாதர்களுக்குதான் சாத்தியமாகும்.

சாஸ்திர விதிப்படிக்கும், சுகாதார விதிப்படிக்கும், வீடு கட்டுவதற்குரிய வசதியும், மண்ணும், எல்லாவித சௌகரியங்களும் அமைய வீடுகட்டி முடிப்பதற்கு இன்றியமையாத திரவியமும், அதிர்ஷ்ட முள்ளோருக்கே கிடைக்கின்றன. அப்படி சொந்தத்தில் கட்டும் பாக்கியவான்கள், வீடுகட்டும் முறைகள் செவ்வனே தெரிந்த ஒருவரோடு ஆலோசித்து, அவர் சொற்படி நல்ல செங்கல், சுண்ணாம்பு, தேக்கு முதலிய சாமான்களை வாங்கிக் கட்டுவது மிகச் சிறந்தது. அதிக சித்திர வேலைகளை அமைத்தால் கால தாமதமும், வீண் செலவும் ஆவதுமன்னியில், சீக்கிரத்தில் தும்பு தூசிகள் தங்குவதற்கும் இடமுண்டாகிறது; ஆகையால் அதிக சித்திரங்களும், பொம்மைகளும், மேடு பள்ளங்களும் இல்லாமல் விசாலமாய்க் கட்டுவது எப்போதும் நல்லது. அதுவும் அழகாய்த்தான் இருக்கும். அனாவசியமாக பல அறைகளைத் தடுத்து உபயோகமில்லாமல் எலியும், பெருச்சாளியும், மூஞ்சூறும், சிலந்தியும், செய்யானும், துரிஞ்சலும் வாசம் செய்யும்படிப் போட்டுவைப்பதைவிட முக்கியமாக எத்தனை அறைகள் வேண்டுமோ அத்தனை அறைகளையே கட்டிக்கொள்ளுதல் சிக்கனமாகும்.

இந்தியாவில் பண்டைக்கால முறைப்படி தெருப்பக்கத்தில் பெரிய திண்ணைகளும், மத்தியில் சித்திர வேலைப்பாடமைந்த பிரம்மாண்டமான வாசற்படி கதவும், உள்ளே நுழைந்தால் 'நடை' என்று கொஞ்ச இடமும், அதன் பிறகு வெட்டவெளியான முற்றமும், நான்கு பக்கமும் அகன்ற தாழ்வாரங்களும், கூடமும், எதிரெதிரில் பெரிதான அறைகளும், கொல்லைப்புற வாசற்படியும் இருப்பது வழக்கம். இப்படிக் கட்டுவதற்கு செலவு அதிகமென்றே சொல்லலாம். தற்கால நாகரிக முறையில் ஒடுக்கமான தாழ்வாரங்களும், இடுக்கான அறைகளும் கட்ட அவ்வளவு செலவில்லையென்றாலும், வெய்யிலின் கானலும், மழைச் சாரலும், தும்பும் தூசியும் தடுக்கப்படாமல் அறைகளுக்குள்ளே வருகின்றன. குறைந்த செலவில் முடிகிறதென்று இம்மாதிரியான வீடுகளையே பலர் தற்காலத்தில் கட்டுகின்றனர். இது நல்ல முறையல்ல.

பெரிய மாளிகையாயினும் சரி, சிறிய குடிசையாயினும் சரி, ஒழுக்கில்லாமலும், காற்றோட்டமாயும், வெளிச்சமாயும் இருக்கின்றனவா என்கிற மூன்று விஷயங்களே முக்கியமாய் கவனிக்கத் தக்கவைகளாம்.

அதிக கானலையும், அதிக மழையையும் தாங்கக்கூடிய கூரையாக சாதாரணமாய் தற்காலத்தில் உபயோகப்பட்டுவரும் மங்களூர் ஓடுகளால் வேய்ந்த கூரைகள், நன்றாகவே யிருப்பினும், வெய்யிற் காலத்தில் சூரிய காங்கையை அவ்வளவாய்த் தடுப்பதில்லை. அறைக்குள் உஷ்ணம் அதிகமாகவே தெரிகிறது.

மர சாமான்கள் எல்லாம் செவ்வனே பதப்படுத்தினவைகளாகவும், கறையானால் அரிக்கப்படாதவைகளாகவும் இருக்கவேண்டும். கதவுகளும், ஜன்னல்களும் சுலபமாய்த் திறக்கவும் மூடவும் சௌகர்யமாயிருக்கும்படி அமைக்க வேண்டும். கொஞ்சம் பிகுவாயிருந்தால் கீல்களிலும், தாழ்ப்பாள்களிலும் சிறிது எண்ணெயைத் தடவுவது நல்லது. இல்லையேல் கதவைச் சாத்தும்போதும், திறக்கும்போதும் சடேர் சடேரென ஓசைப்பட்டுக்கொண்டு கதவுகள் சீக்கிரத்தில் பிளந்துபோகும். விகாரமான ஓசையும் காது நரம்புகளைப் பலவீனப்படுத்துகின்றன.

அறைகளின் மூலைகளையும், இரண்டு சுவர்கள் சந்திக்கு மிடங்களையும், வளைவாய் மழுப்பிவிட்டால், சிலந்திக் கூண்டுகளும், ஒட்டடைகளும் காணப்படா. பெருக்கும்போதும் தும்பு தூசிகள் சுலபமாய்ப் போய்விடும். பலவித வர்ணப் பூச்சுகளைவிட சுண்ணாம்பு வெள்ளையடிப்பதே சிலாக்கியமானது. ஏனெனில் வர்ணப் பூச்சுகளை மாற்றவேண்டுமென்றால் அதிகச் செலவும் காலதாமதமும் ஆகிறது. வெள்ளையடிப்பது சொற்ப செல

வில் முடிவதோடுங்கூட பார்ப்பதற்குச் சுத்தமாயும், கொஞ்சம் அழுக்குப் படிந்தாலும் உடனே தெரிவதால் சுத்தி செய்வதற்குத் தூண்டுதலாகவும் இருக்கிறது. நாம் வசிக்கும் அறைகளின் சுண்ணாம்பை வருஷத்திற்கொருமுறை சுரண்டி யெடுத்துவிட்டு புதிய வெள்ளை யடிக்கவேண்டும். சமையலறை, ஸ்நான அறை, கக்கூஸ், புறாக்களை வளர்க்குமிடம் முதலிய இடங்களுக்கு மூன்று மாதத்திற்கொருமுறை வெள்ளையடித்தல் நல்லது. அறைகளில் அலமாரிகள் பெரிதாயும், சுமார் ஒரு அடி தூரத்திற்கொரு பலகை யுள்ளதாயும் சுவற்றிற்குள்ளாகவே அமைக்கப்பட்டதாயும் இருக்கவேண்டும்.

தரை சுலபத்தில் கழுவக்கூடியதாய், உலரக்கூடியதாய், அடியில் மண்ணிலிருந்து கிளம்பும் கெட்ட ஆவிகள் மேலேவருவதற்கு துவாரங்கள் இல்லாமல் கெட்டியானதாய் இருத்தல் இன்றியமையாததாகும். ஏதாவது ஒரு மூலையில் வெளிப்பக்கத்தை நோக்கி தரை சரிவாயிருந்தால் கழுவும்போது ஜலம் அந்தப் பக்கமாய் ஓடி, அங்கே சுவற்றின் அடியிலுள்ள சிறு துவாரத்தின் மூலமாய் வெளியேபாய்ந்து அதற்கென்று ஏற்பட்டுள்ள தொட்டியில் விழுந்துவிடும். கடப்பைக்கல்லோ, கெட்டியாயும் மழமழப்பாயுமுள்ள செங்கல்லோ, எதுவாயினும் சரி; நன்றாய் சிமிட்டியினால் துவாரமில்லாமல் இணைக்கப்பட்டிருக்கவேண்டும். முழுவதுமே ஜல்லி கட்டி சிமிட்டி பூசின தரையும், மண் தரையும் நாளடைவில் வெடித்து, தரையில் பள்ளங்கள் உண்டாகின்றன. தண்ணீரும் அழுக்கும் தங்க இடமுண்டாகிறது. சீக்கிரத்தில் ஈரம் காய்வதில்லை. இதையெல்லாம் விட்டு, சித்திரவேலைப்பாடமைந்த சதுரக்கற்களைப் போட்டால் அதிலும் தும்பு தங்கும். அப்படிப்பட்ட தரையில் அருமையும், பெருமையும், மனதைக் கவரத்தக்க அழகும், எல்லா இந்திய மாதர்களாலும் போற்றப்படும் வித்தையாகிய கோலம் போடுதல் அவ்வளவு சோபிதப்படாது.

விவேகநாதன் அல்லது சரஸ்வதிபீடத்தின் மர்மம்

VIVEKANATHAN — A THRILLING DETECTIVE NOVEL

[ஸ்ரீமான் A. ராமசாமி முதலியார், பி. ஏ.]

(348-ம் பக்கத் தொடர்ச்சி.)

அவர் அவ்விதம் விஷத்தை யருந்தும் சமயம் அவருக்குத் தெரியாமல், கோபமாகவே வார்த்தை யாடுமாறு சத னந்தர் ஆதிமூலம் பிள்ளைக்குச் சைகை செய்திருப்பார். சதானந்தரை முற்றிலும் நம்பின ஆதிமூலம் பிள்ளை முன்னிலும் அதிகமாகச் சினந்து வார்த்தையாடுவதை யுணர்ந்த சுந்தரம் பிள்ளை மிக வெகுண்டு விஷமயக்கத்தால் தான் இன்னது செய்கிறோமென்பதை யுணராமல் தன் சட்டைப் பையிலிருந்த கத்தியைக் கைப்பற்றிக்கொண்டு வெறிகொண்டவர்போல் தன் தம்பியருகில் வந்திருப்பார். சதானந்தரின் தைரிய வார்த்தைகட்கிணங்கியேனும் அல்லது தானே சுயமாகவேனும் தன்னை நோக்கிக் கெட்ட எண்ணத்துடன் வரும் தன் தமையனை ஆதிமூலம் பிள்ளை தள்ளியிருப்பார். விஷம் தலைக்கேறியதால் தன் உணர்வற்றிருந்த சுந்தரம் பிள்ளை சக்தியற்றுக் கீழே விழுந்திருப்பார். சதானந்தர் கொடுத்திருந்த விஷம் அவருடைய உயிரை அநேகமாய் கொள்ளை கொண்டிருக்கும். கீழே விழுந்ததும் எஞ்சி நின்ற உயிர் உடலை விட்டுப் பிரிந்தது. இருபது வருட காலம் வெளிநாட்டிலிருந்து திரும்பிவந்த தன் தமையன் தன்னுடன் வார்த்தையாடிக்கொண்டிருந்த பொழுது கோபத்தின் பலனாகத் தன்னாற் றள்ளப்பட்டுக் கீழே விழுந்து உயிர் துறந்து கிடக்கும் காட்சியைக் கண்ணுற்ற ஆதிமூலம் பிள்ளை பீதியாற் சலனமற்று நின்றார். தன் தமையன் மாண்டதற்குக் காரணம் தானேயென நம்பினார். சொல்லொணாப் பயங் கொண்டார். தன்னுடைய வீட்டைச் சுற்றிலும் போலீஸார் நிற்பதுபோல் தோன்றிற்று. தன் கைகளில் விலங்கு பூட்டப் படுவதுபோல் உணர்ச்சியுற்

வௌவாலுக்கு நீளவும் தெரியும், குறுகவும் தெரியும்.

றார். பயத்தின் மிகுதியால் இன்னது செய்வதென்பதை யறிய முடியாமல் திகைத்தார். தனக்கு மந்திரிபோல், வேண்டும்பொழுது தகுந்த யோசனையை யூட்டவல்ல சதானந்தர் எதிரில் நிற்பதைக் கண்டார். ஒருவாறு மனம் தேறினவராய் என்ன செய்வதெனக் கேட்டார். இத்தகைய சம்பவத்தை அதி ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த சதானந்தர் ஆதிமூலம் பிள்ளையைச் சுரங்கவழியிற் சென்று மறைந்துக் கொள்ளும்படிக்கும் மற்றவைகளைத் தான் பார்த்துக்கொள்வதாகவும் சொல்லியிருப்பார். தண்ணீரில் தவறி விழுந்து முழுகுந் தருணத்தி லிருக்கும் ஒருவனுக்குச் சிறு துரும்பொன்று கையிற் கிட்டுமானால் அதனுடைய தன்மையைக் கவனியாமல் தான் பிழைத்துக்கொள்ள உதவி கிடைத்ததென நம்பி அதை எவ்வளவு ஆவலுடன் பற்றுவானோ அவ்வளவு ஆவலுடன் ஆதிமூலம் பிள்ளை, சதானந்தர் தெரிவித்த சூழ்ச்சியின் பலனை ஒரு சிறிது மோர்ந்து கவனிக்காமல் அதனைத் தான் தப்புவதற்குத் தகுதியான பற்றுக்கோலாக வெண்ணி உடனே சுரங்கத்துட் சென்று மறைந்து கொண்டார். இவைகளெல்லாம், நான் சொல்லுவதற்கு இவ்வளவு நேரமாயிற்றேயன்றி ஒரு விநாடியில் நடந்திருக்கவேண்டும். ஆதிமூலம் பிள்ளை சுரங்க வழியில் நுழைந்தவுடன் சுந்தரம் பிள்ளை விஷங் கொடுத்துக் கொல்லப்பட்டாரென்பதைச் சாதாரண ஜனங்கள் சந்தேகிக்காம லிருக்கும்பொருட்டுச் சதானந்தர் தன்னிட மிருந்த கத்தியாற் பிரேதத்தைப் பலவிடங்களிலுங் குத்திக் காயப்படுத்தியிருக்கவேண்டும். ஆதிமூலம் பிள்ளையும் சுந்தரம் பிள்ளையும் சரஸ்வதி பீடத்தி லிருந்த விஷயம் முற்றத்தி லிருந்தோர்க்குத் தெரியுமேயொழியச் சதானந்தர் அங்கிருந்த சங்கதி அவர்களுக்குத் தெரிய நியாயமில்லை. இப்பொழுது இருவரில் ஒருவர் இறந்து கிடக்கிறார். தேகத்தின் பல விடங்களிற் குத்துக் காயங்களு மிருக்கின்றன. மற்றவர் சுரங்க வழியிலோ அல்லது நில வறையிலோ இருக்கிறார். சுரங்க வழியோ மிக்க இரகசியமானது. இக் குடும்பத்தின் ஆடவர்களுக்கன்றி மகளிர்கட்கேனும் மற்றவர்கட்கேனும் தெரியாது. ஏனெனில் பெண்கள் அதை யறிந்திருந்தால் நம்மெல்லோருக்கும் அது தெரிந்திருக்கவேண்டும். அத்தகைய இரகசியமான விடத்தில் ஆதிமூலம் பிள்ளை யிருக்கிறார். மிகச் சுலபமாக அவர்மீது கொலைக் குற்றத்தைச் சாட்டிவிடலாம். ஆனால் சுரங்கவழியின் இரகசியம் அம்பலத்திற்கு வரக்கூடாது. ஆதிமூலம் பிள்ளை தன் தமையனைக் குத்திக் கொன்றுவிட்டு ஓடிப்போனதாகப் பொருள் படவேண்டும் என்னும் இவ் விஷயங்களைத் தன் மனதில் ஒரு நொடியில் நினைத்துப் பார்த்த சதானந்தர் அந்த க்ஷணமே சரஸ்வதி பீடத்தின் பின்புறக் கதவைத் திறந்து வைத்துவிட்டுத் தானும் சுரங்கத்துட் புகுந்தார். தான் மறுபடியும் அங்கு வந்து தெரிவிக்கும்வரை வெளியில் வரக்கூடாதென ஆதிமூலம் பிள்ளைக்குத் தெரிவித்துவிட்டுத் தென்றல் விலாஸத்திற்குச் சென்று, கதை யொன்று கட்டிப் பிறரை ஏமாற்றுவதற்காக அங்கிருந்த இரண்டு சாமான்களை எடுத்துக்கொண்டு தான் அவ்விட மிருந்ததற்குச் சாட்சியாகச் சங்கரனைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு வந்தபொழுது வழியில் நான் அவரைச் சந்தித்தேன். அவர் தென்றல் விலாஸத்திலிருந்து வந்ததற்கு நானே ஒரு சாக்ஷியானேன். பிறகு நாங்களெல்லோரும் சரஸ்வதி பீடத்திற்குட் சென்று பார்த்தபொழுது ஆதிமூலம் பிள்ளை கொலை செய்துவிட்டுப் பின்புறக் கதவின் வழியாக ஓடியிருக்கவேண்டுமென நான் சொன்னதைக் கேட்ட சதானந்தர் கரைகாணக் களிப்பெய்தி யிருக்கவேண்டும், என்று இங்ஙனம் இக்கொலையின் நிகழ்ச்சியைப் பற்றி நான் உறுதி செய்துகொண்டே இங்கு வந்துசேர்ந்தேன். அமராவதியம்மாள் நேற்றிரவு இங்கு வந்ததை யறிந்ததும் சதானந்தர் சரஸ்வதி பீடத்திற்குட் சென்று உட் தாழ்ப்பாளிட்டுக் கொண்டவர் அதுகாறும் வெளியில் வரவில்லை யென்னும் சமாசாரத்தைக் குமாரனிடமிருந்து அறிந்திருந்த சுப்பிரமணிய பிள்ளை எனக்குத் தெரிவித்தார். இதனால் சுரங்கவழி சரஸ்வதி பீடத்தில் தான் ஆரம்பிக்கிற தென்பது நிச்சயமாயிற்று. நான் கொண்டிருந்த அபிப்பிராயங்களையும் சரியெனவே எண்ணினேன். சற்று நேரத்திற்குள் சதானந்தரும் வெளியில் வந்தார். அமராவதியம்மாளும் தன் இல்லம் நோக்கிப் புறப்பட்டார்கள். சதானந்தரின் சதியாலோசனையையும் வள்ளியம்மைக்கு நேரிட விருக்கும் ஆபத்

வௌவாலோடு அணிற்பிள்ளை சேருமா ?

தையும் சுப்பிரமணிய பிள்ளைக்குத் தெரிவித்துச் சரியாகப் பன்னிரண்டு மணிக்கு இரமணீ விலாஸத்திற்குச் சென்று அப்பெண்ணைக் காக்குமாறும் நான் நெல்லிக்குப்பத்திற்குச் சென்று வரவேண்டியிருக்கிறதெனவும் சொல்லிவிட்டுச் சதானந்தருக்குத் தெரியாமல் புறப்பட்டேன். அப்பொழுது என் மனதில் ஒரு விருப்பமுண்டாயிற்று. சுரங்கவழி இவ்வீட்டின் சாஸ்வதீ பீடத்திலிருந்து ஆரம்பிக்கிறதென்பது மாத்திரம் தெரியுமேயன்றி அது இன்ன விடத்திலிருந்தென்பது நிச்சயமாகத் தெரியாது. ஆனால் தென்றல் விலாஸத்தில் சுரங்கவழியின் கதவு இருக்குமிடந் தெரியும். மேலும் அங்கு ஆட்களுங் கிடையாது. ஆகையினால் அவ்வழியாகச் சுரங்கத்துட் சென்று அதைப் பரிசோதித்துப் பார்க்க வேண்டுமென்ற அவா என் மனதிலுண்டாயிற்று. அச் சுரங்க வழியிலோ அன்றி அங்கிருக்கக் கூடிய நிலவறையிலோ என்ன இருக்குமென்பதை நினைத்தபொழுது எனக்கு ஒருவிதமான பீதியுண்டாயிற்று. என் கண்களுக்கு எதிர்ப்படக்கூடிய வஸ்து என்ன? ஆதிமூலம் பிள்ளை அவ்விடத்திலிருப்பாரென்பது என்னுடைய அபிப்பிராயம். ஆனால் சதானந்தர் வள்ளியம்மையிடம் தெரிவித்ததிலிருந்து பலவிதமான சந்தேகங்களேற்பட்டன. ஆதிமூலம் பிள்ளை இனித் திரும்பிவரமாட்டாரெனவும், அவர் இன்னும் உயிருடனிருக்கிறாரென்பதுதான் என்ன உறுதியெனவும் அவர் அப் பெண்ணிடம் தெரிவித்தார். இதிலிருந்து ஆதிமூலம் பிள்ளை எவ்விடத்திற்கோ அனுப்பப்பட்டேனும், அன்றி அவர் கொலை செய்யப்பட்டேனும், அல்லது நிலவறையில் உயிருடனேனும் பிரேதமாகவேனு மிருக்க வேண்டுமென நிச்சயித்துக் கொண்டேன். இரவில் வள்ளியம்மையை அங்குத் தூக்கிச் செல்வதாகச் சதானந்தர் எண்ணியிருப்பதற்குக் காரணம், அம் மங்கை தன்னை மணந்து கொள்ளுமாறு ஆதிமூலம் பிள்ளையைக் கொண்டு சிபார்சு செய்வதற்காகவேனும், அல்லது அவருடைய பிரேதத்தைக் காட்டி அப்பேதையைப் பயமுறுத்தித் தன் மனோபீஷ்டத்தைப் பூர்த்தி செய்து கொள்வதற்காகவேனு மிருக்கவேண்டுமெனத் தோன்றிற்று. இத்தகைய எண்ணங்களுடன் தென்றல் விலாஸத்துட் சென்று நிலைக்கண்ணாடி போன்ற கதவைத் திறக்க முயன்றேன். என்னால் இயலவில்லை. இதைத் திறப்பதற்குச் சூட்சுமமான வழியிருக்க வேண்டுமெனக் கருதி அதற்கெதிர்ப்புறமுள்ள சுவற்றில் பதிக்கப்பட்டிருக்கும் சிறு கண்ணாடியை என்னுடைய கை விளக்கினுதவியால் நன்றாகப் பரிசோதித்தேன். ஏனெனில், அவ்வளவு பெரிய கண்ணாடியிருக்குமிடத்தில் அத்தகைய சிறு கண்ணாடியிருப்பது பலவிதங்களிலும் அநாவசியமாகத் தோன்றுகிறபடியால் அது அவ்விடத்திலிருப்பதற்குரிய அந்தரங்க காரணமொன்றிருக்க வேண்டுமென்பது என் கருத்து. மேலும் பெரிய கண்ணாடியின் எதிரிலிருப்பதால் அதற்கு மிதற்கும் ஏதேனும் சம்பந்த மிருக்கலாமென யோசித்து அதைப் பரீக்ஷித்தபொழுது சேறு படிந்த கை விரல்கள் பதிக்கப்பட்ட குறிகளிருந்தன. சுப்பிரமணிய பிள்ளையும் நானும் அங்கு முதன்முதற் சென்றபொழுது அக் கண்ணாடி மிகவும் சுத்தமாகவிருந்தது. நானாவது அவராவது அதைத் தொடவில்லை. எங்களைத் தவிர அங்கு வந்தவர் சதானந்தரேயாகும். அவர் இரமணீ விலாஸத்திலிருந்து அங்கு விரைவாகத் திரும்பி வந்தபொழுது சேற்றில் தவறி விழுந்ததை நான் பார்த்திருந்ததினாலும், அக் கண்ணாடியின் மீதும் சில விடங்களில் சேறு படிந்திருந்ததினாலும் இடையில் அது அவரால் உபயோகிக்கப் பட்டிருக்கிறதென்பதை யறிந்துகொண்டு மெதுவாக அதை யமுக்கினேன். எனக்குப் பின்புறத்திலிருந்த சுரங்க வழியின் கதவும் திறந்தது. உடனே அதனுட் சென்று பார்த்தபொழுது இவ் வீட்டிலிருந்து தென்றல் விலாஸத்தின் கீழாக இரமணீ விலாஸத்திற்குச் சுரங்கவழி செல்வதைத் தெரிந்து கொண்டேன். இவ் வீட்டை நோக்கி அவ்வழியாக வந்த சமயம் இடையில் வலப்புறமிருந்த சுவற்றில் கதவொன்று தென்பட்டது. கதவின் சந்து வழியாக உள்ளே பார்த்தேன். இருண்டு கிடந்தது. ஏதேனும் அரவமுண்டாகிறதா வென்றறியக் காது கொடுத்துக் கேட்டேன். நான் விடும் மூச்சைத் தவிர வேறெவ்விதமான சப்தமும் கேட்கப் படவில்லை. கதவை மெதுவாகத் தட்டினேன். அடுத்த நிமிஷம் கதவைத் திறந்துகொண்டு அந் நிலவறையில் நுழைந்தேன். அங்கு போ

வௌவாலோ சிறிது, அதன் அடியோ வலிது.

டப்பட்டிருக்கும் மேஜையின்மீது வைக்கப்பட்டிருந்த தோற்பெட்டியைத் திறந்தேன். அதில் மேலாக வைக்கப்பட்டிருந்த வொரு சாமானைப் பார்த்ததும் சொல்லொணா ஆச்சரிய மடைந்தேன். நீண்டு கறுத்த ரோமங்கள் ஒரு கத்தையாகக் கட்டி வைக்கப்பட்டிருந்தன. இதை இவ்வளவு பந்தோபஸ்தாகப் பெட்டியில் வைக்கவேண்டிய காரண மென்னவென்றும், இது யாருடையதா யிருக்கலாமெனவும், இவ்விதம் இதை வைத்தது யாரா யிருக்கலாமென்றும் நான் யோசித்தபொழுது ஆதிமூலம் பிள்ளையினுடைய தாடியின் நினைவு வந்தது. அவரை நான் பார்த்ததில்லையாதலின் அவருடைய தாடியின் தன்மையை நான் அறியேன். எனினும் அப்பெட்டியில் வைக்கப்பட்டிருந்த ரோமக்கட்டு ஆதிமூலம் பிள்ளையின் தாடிதானென எனக்குத் தோன்றிற்று. இதற்கு முக்கியமான காரணம் அவர் அவ்விடத்திலில்லாததே யாகும். பிறர் தன்னை எளிதிற் கண்டுகொள்ளாம லிருக்கவேண்டித் தாடியைக் களைந்து வைத்துவிட்டு வெளியேறி யிருக்கிறார்போலு மென வெண்ணினேன். வள்ளியம்மையிடமிருந்து திரும்பிவந்த சதானந்தர் தன் சிறிய தந்தையை உருமாற்றி வெளியில் அனுப்பிவிட்டபின்தான் இங்கு வந்திருக்கவேண்டும். எனினும் இவைகளெல்லாம் அனுமானங்களே யன்றி கண்கூடாகக் கண்டவைகளன்று. ஆதிமூலம் பிள்ளையைப்பற்றி நிச்சயமாக ஒன்றையும் தெரிந்துகொள்ள முடியாமற்போனதைப்பற்றிச் சற்றே கவலை கொண்டவனாகத் தாடி வைக்கப்பட்டிருந்த பெட்டியை எடுத்துக்கொண்டு சுரங்க வழியைவிட்டு நீங்கிக் கதவை மூடிவிட்டு வெளிக்கிளம்பி நேராக நெல்லிக்குப்பத்திற்கு வந்து (இன்ஸ்பெக்டரை நோக்கி) தங்களைப் பார்த்தேன். தங்களிடம் வார்த்தையாடிக் கொண்டே என்னிடமிருந்த பெட்டியைப் பரிசோதித்தபொழுது அதில் ஒரு பத்திர மிருக்கக்கண்டு அதைப் பிரித்துப் பார்த்தேன். இக்கொலைக்கு ஆதாரமான பத்திரம் அதுவே யென்பதைத் தெரிந்ததும் இன்ஸ்பெக்டரவர்களை யழைத்துக்கொண்டு (அருணாசலம் பிள்ளையைப் பார்த்து) தங்களுடைய வீட்டிற்கு வந்தேன். தங்களிடம் சம்பாஷித்ததிலிருந்து தாங்கள் சுந்தரம் பிள்ளைக்கு எழுதிக்கொடுத்திருந்த அடமான பத்திரம் இதுவே யென்பதையும், அதிற்கண்ட பணம் செல்லாகி விட்டதென்பதையும், இது விஷயமாக ஆதிமூலம் பிள்ளையாவது சதானந்தராவது தங்களிடம் கலந்து பேசவில்லை யென்பதையும், இதைப்பற்றி ஆதிமூலம் பிள்ளை சுப்பிரமணிய பிள்ளையிடம் தெரிவித்தது முற்றிலும் பொய் என்பதையும் ஐயந்திரிபறத் தெரிந்துகொண்டேன். பின்னர், சுந்தரம் பிள்ளையிடமிருந்து தங்களுக்கு முந்தின தினம் வந்த கடிதத்தைப் பார்த்தவுடன் என் மனதில் மிகப் பயங்கரமான விஷயமொன்று தோன்றிற்று. அதைப்பற்றி நினைத்துப்பார்க்க அவ்விஷயம் சாலவும் பொருத்தமானதாகவும் உண்மை யுடையதாகவும் விளங்கிற்று. அதைச் சந்தேகமறத் தெரிந்துகொள்ள விரும்பித் தங்களிடம் விடைபெற்றுக்கொண்டு கிளம்பி டாக்டரவர்களை அழைத்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்குச் சென்று பிரேதம் வைக்கப்பட்டிருந்த அறையில் நான் மாத்திரம்போய் அதைப் பரிசோதித்துப் பார்த்தபொழுது என் மனம் திடுக்குற்றது. பிரமை மேற்கொண்டேன். என் மூட மதியை நானே இகழ்ந்து கொண்டேன். நேற்றுப் பிற்பகல் சரஸ்வதீ பீடமென்னும் இவ்வறையில் விஷங்கொடுத்துக் கொல்லப்பட்டுத் தற்சமயம் நெல்லிக்குப்பம் ஆஸ்பத்திரியில் டாக்டரவர்களால் பரிசோதிக்கப்பட்டும் கிடக்கும் பிரேதம் சுந்தரம் பிள்ளையுடையதல்ல வென்பதும், இவ்வாறு வஞ்சித்துக் கொல்லப்பட்டவர், இவ்வீட்டின் எஜமானரும் உங்களெல்லோராலும் கொலையாளி யென்று கருதப்பட்டிருக்கிறவருமான ஆதிமூலம் பிள்ளையே என்பதும் பட்டப்பகல்போல் விளக்கமுற்றன.

என்று சொல்லவும், விவேகநாதனின் வாயினின்று கிளம்பும் ஒவ்வொரு வார்த்தையையும் மிக ஆவலுடன் கேட்டுக்கொண்டு அவ்விடமிருந்தோரனைவரும் ஹா! என ஏககாலத்திற் கூறித் திடீரெனக் கற்சிலைகளாக மாறினவர் போல் சற்றுநேரம் செயலற்றிருந்தனர். பிறகு பெண்களிருந்த விடத்தில் அழுகைக் குரல் கேட்டது. சுப்பிரமணிய பிள்ளை அவர்களைச் சும்மாவிருக்குமாறு சமாதானம் செய்துவிட்டு விவேகநாதனைப் பார்த்து, "நண்ப! தங்களாராய்ச்சியின் முடிவு உண்மையாக விருக்கு

வௌவால் அடித்துத் தின்னும், அணில் கடித்துத் தின்னும்.

மெனினும் அதை விவரமாகத் தெரிவிக்குமாறு வேண்டிக் கொள்ளுகிறேன். இறந்தது சுந்தரம் பிள்ளையென நாங்களெல்லோரும் எண்ணியிருக்கத் தாங்கள் திடீரெனக் கொலையுண்டவர் ஆதிமூலம் பிள்ளைதானெனக் கூறுவதைத் தக்க சாக்ஷியங்களின்றி நாங்கள் எவ்விதம் நம்பமுடியும்?

விவே:—சுந்தரம் பிள்ளை க்ஷேமமாகக் கண்டியிலிருக்கிறாரென்பதையும் ஆதிமூலம் பிள்ளை வஞ்சித்துக் கொல்லப்பட்டுப் பிரேதமாக ஆஸ்பத்திரியிலிருக்கிறாரென்பதையும் நிரூபிக்கத் தக்கதும் மறுக்க முடியாததுமான சாக்ஷியங்களிருக்கின்றன. முன்னுரைத்ததுபோல் இக்கொலைக்குக் காரணம், ஆதிமூலம் பிள்ளை விவாகத்தில் விருப்புற்றதேயாகும். இதற்குப் பேருதவியாயிருந்தது அவ்வடமானப் பத்திரமே யென்க. முன் சொன்னவாறு ஆதிமூலம் பிள்ளை பொய்க் கையெழுத்துப் போடுவதில் தேர்ச்சியடைந்த பொழுது சதானந்தரின் மனதில் ஒரு சந்தேக முண்டாயிற்று. பத்திரத்திற்குப் பணங்கொடுக்க அருணாசலம் பிள்ளை மறுத்துவிட்டதாகச் சதானந்தர் ஆதிமூலம் பிள்ளையிடம் தெரிவிக்க அவர் அதை நிஜமென நம்பிப் பொய்க் கையெழுத்துப் போடவும் சம்மதித்துக் கொண்டார். இது முற்றுப் பெற்றுக் கோர்ட்டில் வியாஜ்யம் போடுமுன் தற்செயலாக ஆதிமூலம் பிள்ளையும் அருணாசலம் பிள்ளையும் சந்திப்பார்களாயின் சதானந்தருடைய மோசம் வெளிவந்துவிடும். மேலும் தங்களுக்கு (சுப்பிரமணிய பிள்ளைக்கு) இப்பத்திர விஷயமாகக் கொஞ்சம் தெரியுமென்பதையும், தங்களுக்கும் அருணாசலம் பிள்ளைக்கும் அறிமுக முண்டென்பதையும் சதானந்தருணர்வாராதலின் நீங்களிருவரும் சந்தித்து இதைப்பற்றிப் பேச்சு நடந்தால் பிறருக்குத் தான் நினைத்த கேடு தனக்கே நேரிடுமென்பதைச் சந்தேகித்தவராய் அத்தகைய சம்பவங்களொன்றும் நிகழா முன்னம் ஆதிமூலம் பிள்ளையை ஒருவருக்கும் தெரியாமல் நமனுலகம் புகுத்திவிடுவதெனச் சதானந்தர் நிச்சயித்துக் கொண்டார். உடனே அவர் தன் சிறிய தந்தைபாற் சென்று அவருடைய சாமர்த்தியத்தை மிகவும் பாராட்டிப்பேசினார்.

ஆதிமூலம் பிள்ளை தனக்குக் கிடைக்கவிருக்கும் செல்வத்தைக் கருதிச் சந்தோஷமடைந்திருந்த சமயம், பணத்தை வசூலிக்க அவர்கள் அச்சமயம் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் மார்க்கத்தைவிட மிகச் சுலபமானவழி வேறொன்றிருக்கிறதென இவர் தெரிவித்திருப்பார். அவரும் அதை ஆவலுடன் கேட்க விரும்பியிருப்பார். ஆதிமூலம் பிள்ளையும் சுந்தரம் பிள்ளையும் ஓரச்சில் வார்த்த பதுமைகளைப் போல் ஒரேவிதமான தோற்றத்தை யுடையவர்கள். இவ்விரு சகோதரர்களையும் பிரித்துக் காண்பிப்பது தம்பியின் முகத்திலிருந்த தாடியேயாகும். அதைக் களைந்துவிட்டால் உண்மையைக் கண்டறிவது கஷ்ட சாத்தியமானதேயாகும். ஜாதியாசாரப்படி விவாக தினத்தன்று கண்டிப்பாகத் தாடியை யெடுக்கவும் வேண்டும். ஆகவே இன்ன தினத்தில் இன்ன நேரத்தில் சுந்தரம் பிள்ளை இங்கு திரும்பி வருகிறாரென்னும் வதந்தியை முன்னதாகவே பரவச்செய்து தாடியை யெடுத்துவிட்டுத் தற்கால நாகரிகத்திற்கேற்ப உடை யணிந்துகொண்டு இங்கு வந்தால் ஆதிமூலம் பிள்ளைதான் என எவரும் சந்தேகிக்கமாட்டார்கள். பிறகு இருவரும் அருணாசலம் பிள்ளையிடம் பத்திரத்துடன் சென்று பணத்தைச் சுலபமாக வசூலித்துக்கொண்டு திரும்ப வேண்டியதுதான், என்னு மித்தகைய ஆகாயக் கோட்டையைச் சதானந்தர் கட்டி ஆதிமூலம் பிள்ளைக்குக் காண்பிக்க அவர் அதை உண்மையென நம்பி அவ்வேற்பாட்டிற் கிணங்கினார். சதானந்தர் உடனே சென்னைக்குத் தந்திகொடுத்து உயர்தரமான கால் சட்டை, அங்கி, தலைப்பாகை முதலானவைகளை வரவழைத்தார். பிறந்த நாட்கொண்டாட்ட தினத்தன்று அநேக நண்பர்களும் பந்துக்களும் வருவார்களாதலின் சுந்தரம் பிள்ளை வரப்போகிறாரென்னும் வதந்தியை அன்று உண்டாக்கினால் அது சீக்கிரத்தில் பரவுவது மாத்திரமன்றிப் பிறர் அதனை எளிதில் நம்புவதற்கும் ஏதுவாயிருக்குமெனச் சதானந்தர் சொல்ல, ஆதிமூலம் பிள்ளை அதை ஆமோதித்தார். சுந்தரம் பிள்ளையின் வருகையைக் குறித்துச் சதானந்தர் கடிதமொன்று எழுதி லக்கோடாவிலடைத்துப் புகைவண்டித் தொடரிலுள்ள தபாற்பெட்டியில் போடுவதற்குப் பதிலாக ஞாபகக் குறைவால் நெல்லிக்குப்பம் கடைத்தெருவிலுள்ள தபாற் பெட்டியிற் போட்டுவிட்டார். அக் கடிதத்தில் சுந்

வௌவால் அடிக்குப் பபப்படலாமா ?

தரம் பிள்ளை நேற்று வருவதாக எழுதியிருந்த விஷயம் ஆதிமூலம் பிள்ளைக்குத் தெரிந்திராது. ஏனெனில் நேற்று நிச்சய தாம்பூல தினமாதலின் அவர் அதற்குடன்பட் டிருக்கமாட்டார். இதை யுத்தேசித்தே சதானந்தரும் அவருக்கு அதைத் தெரிவிக்கவில்லை. நேற்றைய தினத்தைக் குறிப்பிடவேண்டிய காரணம் என்னவெனில் விவாகத்திற்குத் தாம்பூலம் மாற்றுவதை நடைபெறாமல் தடுக்கவும் கூடுமானல், அதற்குமுன் ஆதிமூலம் பிள்ளையை வானுலகம் புகுத்தலுமேயாம். நேற்றுக்காலை விருந்தினர்களும் பிறரும் இவ்விடத்தி லுட்கார்ந்திருந்த பொழுது கடிதம் வந்தது. ஆதிமூலம் பிள்ளை அதைப் பிரித்துத் தன் மனதில் வாசித்தார். சுந்தரம் பிள்ளை நேற்றுப் பிற்பகல் வருவதாக வரையப்பட் டிருந்ததைப் பார்த்து ஆச்சரிய முற்றாரெனினும் சதானந்தர் காரணமின்றி அவ்விதம் எழுதியிருக்க மாட்டாரென்னும் நம்பிக்கையினல் அது விஷயமாக எத்தகைய சந்தேகத்தையும் கொள்ளாமல் கடிதத்தில் கண்டிருந்த சமாசாரத்தை எல்லோருக்கும் தெரிவித்தார். அதைக்கேட்ட விருந்தினர்களெல்லோரும் அதிலுள்ள அந்தரங்கத்தைத் தினைத்துணையும் சந்தேகிக்காமல் அச்சங்கதியை நிஜமென நம்பினர்கள். விருந்தினர்கள் துரிதமாகப் பூந்தோட்டத்திற்கு அனுப்பப்பட்டார்கள். வயது முதிர்ந்த சிவகாமி ஆச்சியும் பங்கஜமும் முற்றத்திலிருக்கிருர்கள். அவர்களைச் சுலபமாக ஏமாற்றிவிடலாம். குமரனும் சமையற் கட்டிலிருக்கும் பாக்கியமும் சுந்தரம் பிள்ளையை முன் பின் பார்த்தறியாதவர்களாதலின் அவர்களைக் குறித்துப் பயப்படவேண்டியதில்லை. சிறு வயதுமுதல் இவ்வீட்டில் பணியாளா யிருந்துவரும் சங்கரன் இச்சமயம் இவ்விடத்திலிருப்பது ஆபத்திற்கிடமாகும். சுந்தரம் பிள்ளை வருவதையும் அவன் பார்க்கக்கூடாது. ஆதலின் அவன் தென்றல் விலாஸத்திற்கு அனுப்பப்பட்டான். சதானந்தரும் ஆதிமூலம் பிள்ளையும் சரஸ்வதி பீடத்தி லமர்ந்துகொண்டு ஆலோசித்தனர். சுந்தரம் பிள்ளையின் வருகையைக் குறிப்பிட்ட விஷயமாக ஆதிமூலம் பிள்ளை கேட்டபொழுது விவாகநிச்சய தினத்தன்றே தாடியை எடுத்துவிடுதல் வள்ளியம்மைக்குச் சந்தோஷத்தைக் கொடுக்குமென்று சதானந்தர் தெரிவிக்கவும், ஆதிமூலம் பிள்ளை புன்முறுவலுடன் தலையையசைத்தார். இவ்வளவு காலம் அருமையாக வளர்க்கப்பட்ட தாடி தரையில் விழுந்தது. சதானந்தர் அதையெடுத்துப் பத்திரமாக வைத்துக்கொண்டார். சென்னையினின்றும் புதிதாகத் தருவிக்கப்பட்டிருந்த சட்டைகளை சந்தோஷமாக ஆதிமூலம் பிள்ளை தரித்துக் கொண்டார். கடிதத்திற் குறிப்பிட்டிருந்த நேரம் அணுகிற்று. சங்கரன் தென்றல் விலாஸத்தின் பின்புறத்திலுள்ள நந்தவனத்திலிருக்கும் சங்கநியைச் சதானந்தர் அவருக்குத் தெரிவித்தார். ஆதிமூலம் பிள்ளை, அவனுக்குத் தெரியாமல் தான் வந்துவிடுவதாகத் தெரிவித்து விட்டுச் சுரங்கவழிக்குட் சென்றார். சதானந்தர் தன்னுடைய அறைக்குத் திரும்பி வந்து, தான் கைக்கொண்ட காரியம் எவ்விதம் முடிவுபெறுகிறதோ வென்னும் திகிலுடன் தன் சிறிய தந்தையின் வரவைச் சாளரத்தின் வழியாகக் கவனித்துக் கொண்டிருந்தார். கடிதத்திற் குறிப்பிட்டிருந்த காலம் நெருங்கவும் முற்றத்தி லிருந்தோர், சுந்தரம் பிள்ளையின் வருகையை அதி ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். கடைசியாக மாறுவேடம் பூண்ட ஆதிமூலம் பிள்ளை சுந்தரம் பிள்ளையென்னும் போலிப் பெயருடன் இவ்வீட்டை நோக்கிவந்தார். சிவகாமி ஆச்சியும் பங்கஜமும் சுந்தரம் பிள்ளையையே நினைத்துக் கொண்டிருந்தார்களாதலின் இவரைக் கண்டுகொள்ளாமல் நல்வரவேற்றனர். இவரும் அங்கு அதிகநேரம் நில்லாமலும் வார்த்தைகள் பல பேசாமலும் குமரனுடன் சரஸ்வதீபீடத்திற்கு வந்தார். அவ்வறை காலியாயிருந்ததைக் கண்ட குமரன் பேராச்சரியமுற்று, வந்தவரை அவ்விடத்திலேயே இருக்கும்படி சொல்லிவிட்டு ஆதிமூலம் பிள்ளையைத் தேடிக்கொண்டு சதானந்தரிடம் வந்தான். ஆதிமூலம் பிள்ளையைக் கொல்லுஞ் சமயம் ஆடவரெவரும் இங்கிருக்கக் கூடாதென்பது சதானந்தரின் முக்கிய நோக்கமாதலின் குமரனை ஆல[illegible]தன்டை அனுப்பினர். சரஸ்வதி பீடத்துட்சென்றார். நகைமுகத்துடன் கதவைச் சாத்தினர். முன்னதாகவே விஷங்கலந்து வைக்கப்பட்டிருந்த பாலைக் கொடுத்தார். ஆதிமூலம் பிள்ளை வழக்கம்போல் அதைப் பெற்றுக் கபடமின்றிக் கடகடவென்று குடித்துவிட்டார்.

வௌவால் கூட்டங் கூட்டமாக இருக்கும்.

கொலை செய்வதன் முன்பு இன்னுமொரு காரியம் நடைபெறவேண்டி யிருக்கிறது. சுந்தரம் பிள்ளை வந்ததற்கும் சரஸ்வதி பீடத்திற்குட் சென்றதற்கும் சாக்ஷிகளிருக்கிறார்கள். ஆதிமூலம் பிள்ளை மேன் மாடியிலிருந்து கீழே வந்து சரஸ்வதி பீடத்தில் போனதைப்பார்த்ததாகச் சதானந்தர் சொல்லிவிடுவார். ஆனால் சுந்தரம் பிள்ளையும் ஆதிமூலம் பிள்ளையும் ஏக காலத்தில் அவ்வறையி லிருந்தார்க ளென்பதைச் சொல்லக்கூடிய சாக்ஷி யொன்றுமில்லை. இது இன்றியமையாத விஷயமாகும். இஃதொன்றில்லை யெனின், காரியம் முற்றிலும் கேடுறுதலுடன் சதானந்தர் பின்னால் சொல்லக்கூடிய கதையை எவரும் எளிதில் நம்பமாட்டார்கள். அவரே துன்பத்துட் சிக்குறவேண்டிவரும். ஆதலின் இதற்கொரு சாட்சியை விரைவாகத் தேடவேண்டுமென நினைத்த சதானந்தருக்குப் பாக்கியத்தின் ஞாபகம் வந்தது. ஆதிமூலம் பிள்ளையிடம் ஏதோ சாக்குச் சொல்லிக்கொண்டு மெதுவாக வெளியில் வந்து சமையலறைக்குள் எட்டிப்பார்த்தார். பாக்கியம் தன்னுடைய வேலையை முடித்துக்கொண்டு முற்றத்திற்குப் புறப்படும் சமயமாயிருந்தது. ஆனந்தங் கொண்டவராய்த் திரும்பிவந்தார். கதவை யடைத்துத் தாளிட்டுக்கொண்டார். ஆதிமூலம் பிள்ளையைப் பார்த்து, "தாங்கள் பெரிய தந்தைபோல் அபிநயித்து வார்த்தையாடுங்கள் பார்ப்போம். என்னைத் தாங்களாக நினைத்துப் பணத்தை யாசித்து வந்தவர்போல் என்னைக் கொடுக்கும்படி கேளுங்கள். நான் தங்களைப்போல் குரலை மாற்றிப் பதிற்பகருகிறேன்" என்று சதானந்தர் சொல்லியிருப்பார். கபடமற்ற ஆதிமூலம் பிள்ளை சூதை யுணராமல் குரலை மாற்றிப்பேச ஆரம்பித்தார். ஏனெனில் அருணசலம் பிள்ளையிடம் அவ்விதம் பேசவேண்டிய அவசிய மிருக்கிறதினால் முன்னதாகவே அதைப் பழகிக்கொள்வது உசிதமென்னும் எண்ணத்தால் வவ்விதம் செய்திருப்பார். சாமர்த்தியவானான சதானந்தரும் ஆதிமூலம் பிள்ளையைப் போல் அபிநயித்துப் பேசினார்.

ஷண்முக விஜயம்.—கண்ணைக்கவரும் 19-அழகிய படங்கள் கொண்டது. கலியுக வரதராம் சுப்பிரமணியக் கடவுளின் அருமை பெருமைகளை நன்கு விளக்குவது. விலை அணா. 12. அட்டை பைண்ட் அணா 14.

✓தீபாவளி

DEEPAVALI

[ஸ்ரீமான் ல. அனந்தய்யரவர்கள்,
"இந்துநேசன்" பத்திராசிரியர்.]

இந்தியனாய்ப் பிறந்தோனெவ்வொருவனுக்கும் தீபாவளிப் பண்டிகை உண்டு. அதிலும் அப்பண்டிகையை இத் தென்னிந்தியாவில் எவரும் கொண்டாடா திருப்பதில்லை. சைவ சமயிகளானாலும், வைஷ்ணவ சமயிகளானாலும் அனைவர்க்கும் இப் பண்டிகை ஒன்றேயாம். இப்பண்டிகை கொண்டாடப் படுவது சதுர்த்தசி தினத்தன்றாகும். ஆதலின் அதற்கு நரக சதுர்த்தசி என்ற பெயர் வந்தது. இது இந்தியர்கள் அனுஷ்டிக்கும் விரதாதிகளில் ஒன்றானதால் இதனை இந்துக்கள் மேன்மையாகவே கொண்டாடுதல் நெறியாகும். இச்சதுர்த்தசி கடந்த மறுநாள் சூரியோதயத்திற்கு முன்பாக எண்ணெய் தேய்த்து மங்கள ஸ்நாநம் செய்தால் கங்கா ஸ்நாநம் பண்ணின பலன் உண்டென்பர். இதன் விவரத்தைச் சற்று கவனித்துப் பார்ப்போம். இப் பண்டிகையுடன் சம்பந்தப்பட்டவன் நரகாசுரனென்பவன். இவன் பௌமன் என்ற மறுபெயர் கொண்டவன்; அதாவது பூமியின் புதல்வன் என்றருத்தம். இந்த அசுரன் பிராக்ஜோதிஷபுரம் என்னும் பட்டணத்தைத் தனது பிரதான நகரமாய்க்கொண்டு மூவுலகிலும் தனக்கு நிகர் எவருமிலர் என்று தன் இஷ்டப்பிரகாரம் அகிருத்தியங்களைச் செய்வதும், அட்டகாசஞ் செய்து ஆர்ப்பரித்து நிற்பதும் மற்றும் செப்புதற்கரிய குரூரமான செயல்களைச் செய்வதுமாயிருந்தனன். இப்போது நாம் சொல்லுவது சைவரது சித்தாந்தத்தை யனுசரித்தது. இவ்வசுரனது கொடூரத்தைப் பொறுக்கமாட்டாத தேவர் முதலானோர் சிவபிரானிடம் வந்து முறையிட்டனர். எளியார்க் கிரங்கும் ஆபத்பாந்தவரான சிவபிரான் தமது தவிதிய குமாராகிய குமாரை யனுப்புவதாக வாக்களித்தனர். அதற்கிணங்க வேலாயுதந் தரித்த குமரர் சென்று அவ்வசுரனைக் கொன்றனர் என்பதற்கு அறிகுறியாய் அவர் ஜயம்பெற்ற அத்தினத்தை ஒரு பண்டிகை தினமாகக் கொண்டாடுவது வழக்கமாயிருப்பதாகத் தெரிகிறது.

வௌவால் தின்னாத பழம் இல்லை.

இனி வைஷ்ணவாது சித்தாந்தத்தைப் பார்ப்போம்.

நரகாசுரனுக்குப் பகதத்தன் என்ற புத்திரனொருவன் இருந்ததாகவும் இந்திர பதவியடைய வேண்டுமென்ற பேராசை மிகுந்தமை பற்றி அவனது தகப்பனான நரகாசுரன் நேராக இந்திரலோகஞ் சென்று முத்து ரத்தின முதலியன பொருந்திய சிங்காதனத்தில் வீற்றிருந்த இந்திரன் அப்பொழுது தரித்திருந்த கிரீடத்தைப் பிடுங்கித் தன் மகனிடம் கொடுத்ததாகவும் தேவர்களெல்லோரும் பயந்து இந்தத் துஷ்டனுடன் சண்டைக்குப் போகுமிடத்துத் தோல்வியடைவது நிச்சயமென்றெண்ணி ஸ்ரீ கிருஷ்ண பகவானிடம் சென்று முறையிட்டதாகவும் கூறப்படுகின்றது. பின்னும் நரகாசுரன் துவஷ்ட்ரு என்னும் பிரம்மாவின் புதல்வி சதுர்தசி என்றவளைச் சிறையெடுத்துச் சென்றனன். அவன் அம்மட்டோடு நிற்கவில்லை. பதினாயிரம் தேவர்களையும் கந்தர்வ ஸ்திரீகளையும் காவலுக்குள்ளடக்கித் துன்புறுத்தினன். அதன்மேல் தேவர்கள் ஸ்ரீ கிருஷ்ண பகவானைத் தோத்திரஞ்செய்ய அநாத ரக்ஷகரான கண்ணன், சத்திராஜித்து ராஜாவின் குமாரியும் தம் பத்தினியுமாகிய ஸத்தியபாமை சமேதராகச்சென்று அவ்வசுரனைக் கொன்றனர். கொடுங்கோல் செலுத்திய அவ்வசுரன் மாண்டதனாலேயே உலகத்தவர் அத்தினத்தை ஒரு பெரும் பண்டிகைத் தினமாய்க் கொண்டாடுகிறார்கள். இதுவே வைஷ்ணவாது ஸித்தாந்தமாகும்.

இனிப் பாரமார்த்திகமாய் இத் தினத்தைப் பற்றி இரண்டொரு வார்த்தைச் சொல்லுவோம். கண்ணபிரான் அசுரனைக் கொன்ற பின்னர் காராக்கிருகத்தில் அடைப்பட்டிருந்த கந்தர்வ ஸ்திரீகள் அனைவரும் பாம்பின் வாய் அகப்பட்டிருந்த தவளையைப்போல வெளிவந்து எம்பெருமான் கண்ணனையே சரணாகதி படைந்தனர். இவர்களைக் கோபிமார் என்று சொல்வாருமுளர். இவ்வசுரனைக் குறித்துப் பாரமார்த்திகமாயும் கவித்துவ அலங்காரமாயும் ஆராய்வோமாயின், பூவுலகின்கண் ஆன்ம கோடிகள் படுந் துன்பமே நரகமாகும். அந் நரகத்திற்கிடந்து தரித்திரத்தினாலும் துன்பத்தினாலும் படாத பாடும் பட்டுப் பரிதபித்து நிற்பதே நரகவேதனையாகும். இவ் வாதனைக்குட்பட்டோரே பதினாயிரம் ஸ்திரீகளாவர். ஸ்திரீகளான ஜீவாத்மாக்கள் மோக்ஷ சாம்ராஜ்ய ஸாதன ஸம்பன்னரான பரந்தாமனது பாத கமலங்களையே சரணமடைந்தது சுருதி ஸ்மிருதிகளையொட்டி எவ்விதத்திலும் பொருந்தியதாகு மென்போம். பின்னர்க் கூறியபடி கவித்துவாலங்காரமாய்ப் பார்க்குமிடத்து அசுரனது தலைநகரான பிராக்ஜோதிஷ புரத்திற்கு ஒளிவீசும் கீழ்த்திசை நாடு என்று அருத்தம். இந் நாட்டினைக் கவிகள் வர்ணித்தது இவ்வாறாயின் அவ்வசுரன் 16,000 மாதர்களைக் காவலில் வைத்திருந்தனன் என்பதற்கு ஒளிவீசுங் கிரணங்கள் அந்தகாரன் என்னும் அரக்கன் கையிற் சிக்குண்டு கிடந்தனவென்று கூறலாமன்றோ! சூரியன் உதிக்கவே அந்தகாரமாகிய நரகாசுரன் மாண்டான். ஸ்திரீகளுக்கு ஒப்பிடப்பட்ட ஒளிவீசும் கிரணங்கள் சூரியனுடன் கூடிப் பிரகாசித்தன. இப் பண்டிகையைப் பற்றிய முக்கிய விஷயங்களாவன:—இப் பண்டிகை மழைக்காலமாகிய ஐப்பசி மாதத்திற் கொண்டாடப்படுகிறது. சூரிய காந்தியின்றித் தேசமெல்லாம் ஈரப்பசைகொண்டு துர்வியாதிகளுக்கு இடமேற்படுந் தருணத்தில் ஒவ்வொரு வீட்டையும் மூலை முடுக்குகள் தவறாது கந்தகப் புகையினாற் சுடுவது தேகாரோக்கியத்திற்கு அவசியமானதன்றோ? அசுத்தமான இடங்களை முனிசிபாலிடியார் சுத்திகரிப்பதை நாம் பார்த்திருக்கிறோம். குடிகளிடம் வரிவாங்கி முனிசிபாலிடியார் ஊரெங்கும் கந்தகப் புகையினால் சுத்திகரிக்க வேண்டுமானால் கஷ்டம் வெகுவாய்த் தோன்றும். மேலும் அந்நியர் ஒரு வீட்டினுட் புகுந்தால் அவ்வீட்டிலுள்ளோர்க்கும் சிறிது ஆயாச முண்டாகக்கூடும். ஆகவே பண்டிகை யென்ற மாத்திரத்தில் ஜனங்கள் மிகுந்த சிரத்தையுடன் பணம் செலவு செய்து சுத்திகரிக்கும் மார்க்கத்தைத் தேடட்டும் என்று எண்ணியே நமது முன்னோர்கள் தீபாவளிப் பண்டிகையை ஏற்படுத்தினரோ! ஆஹா! அவர்களுடைய புத்தி விசேஷத்தை என்னவென்று எடுத்துச் சொல்வோம்: நம் வீடுகளின் அசுத்தமே நரகமாகும். அவ் அசுத்தங்களைப் போக்கடிப்பதே நரகாசுரனைச் சங்கரிப்பதாகும். புதிதாய் வந்த மாப்பிள்ளை

யை யழைத்து மாமனாகத்தில் இப் பண்டிகையைக் கொண்டாடுவோர் பலர், விடியற்காலையில் எல்லாரும் மங்கள ஸ்நானமாடிப் புது வஸ்திரமுடுப்பர் ; பிறகு சீனவெடிகளைச் சுடுவர். மனைவி கணவனுடன் இருப்பாளாகில் அவனை எவ்விதமாயினும் மாமனாகத்திற்குக் கொண்டு வரவேண்டியது அவளுடைய கடமையாகும். சிறியோர் பெரியோர் எல்லோரும் வெடி சுடுவதிற் சேருவார்கள். அத் தினத்தன்றே குஜராத்தியர் தம் கணக்குப் புத்தகங்களைப் பூஜித்துப் புதுக் கணக்கு ஆரம்பிப்பார்கள். ஒரு புரோகிதரை முன் வைத்துக்கொண்டு தாம் லக்ஷ்மி பூஜை செய்வார்கள். புஷ்பமாலை போட்ட நெய் விளக்கொன்று எரியும். ஒரு கரண்டியில் சாம்பிராணிப் புகையும், கதவுகள், வாயிற் புறங்கள், கணக்குப் புத்தகங்களின் பின்புறங்கள் முதலியவைகளில் அக்ஷதையுங் குங்குமமும் வைப்பர். கஷ்டம் நேர்ந்தகாலத்தும் குஜராத்தியர் இப் பண்டிகையைக் கொண்டாடாமல் இருக்கமாட்டார்கள். வெடிகளினால் உண்டாகும் புகையினால் சாதாரணமாய் இம் மாதங்களில்வரும் விஷ சுரங்கள் பறந்துபோம். ஆகலால் நரகனை அல்லது நரகத்தை ஜயித்த வெற்றியைக் கொண்டாட மங்களஸ்நாநம் செய்வதும், புது வஸ்திரம் உடுத்துவதும் ஏற்பட்டன. வர்த்தக விவசாயங்களுக்கும் கைத்தொழி லபிவிருத்திக்கும் சம்சாரச் செட்டுக்கும் அநுகூலப் படும்படி கொண்டாடப்படும் இப் பண்டிகையை முன்னிட்டு விடியற்கால மெழுந்து மங்கள ஸ்நாந மாடினால்,

கங்காஸ்நாந பலப் பிராப்தி ரஸ்து.

சிறுவர்க்கான உயரிய நூல்கள்

ஸ்ரீ பால ராமாயணம்	0	8	0
ஸ்ரீ பால பாரதம்	0	8	0
ஸ்ரீ பால ஷண்முக விஜயம்	0	8	0
ஸ்ரீ கிருஷ்ணாவதார சரித்திரம்	0	8	0
ஆரியமத உபாக்கியானம் I	0	8	0
ஷை II	0	10	0
திருப்புகழ் ரத்தின மாலை	0	3	0
தஞ்சாவூர் ஜில்லா வரலாறு	0	8	0
பீஷ்மர் சரித்திரம்	0	6	0
குஹன் சரித்திரம்	0	4	0
பாராயணத் திருப்புகழ்	0	2	0
பத்மினி	0	3	0

வர்த்தக நிலைமை*

TRADE SITUATION

இந்தியாவின் பூர்வீக வர்த்தகம்

கிறிஸ்து பிறப்பதற்கு இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னிருந்து கி. பி. ஆயிரம் ஆண்டு வரையிலும், இந்தியாவின் பூர்வீக வர்த்தக காலம் எனலாம். ஆசியா கண்டத்தினின்றும் இந்து மகா சமுத்திரத்தில் பாயும் ஒரு தீப கல்பமாயிருந்து இந்து தேசம் கீழ்நாடும் மேனாடும் சந்திப்பதற்கு ஒரு வசதியான இடமாக இயற்கையிலேயே விளங்கிற்று. பல் வேறு சமயங்களுக்கும், பல் வேறு நாகரிகங்களுக்கும், இந்தியாவே பிறப்பிடமாகயிருந்தது ஒரு ஆச்சரியமல்ல. வியாபாரம், மதம், குடியேற்ற சம்பந்தமாய் முற்காலத்தில் இந்தியாவிற்கும், சுமித்திரை, சீனா, திபேத்திற்கும் வியாபார போக்குவரத்துகள் இருந்திருந்தன. சீனா பட்டுகளும், அரேபியா குதிரைகளும், இதாலிய பவழங்களும், சியம், சிகப்புகளும், மாந்தளை பச்சைகளும், உலாந்தக் கமலங்களும் இந்தியாவில் இறக்குமதி யாயின. நவரத்தினங்கள், வேலைப்பாடமைந்த எஃகு இரும்புச் சாமான்கள், பஞ்சு, பட்டாடைகள், சுகந்தங்கள், மருந்து மூலிகைகள், நீலம், வாசனைத் திரவியங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

ஆங்கிலேயர் வர்த்தக முன்னேற்றம்

அஸ்ஸாம், வங்காளம் இவைகளிலுள்ள அவுரித் தோட்டங்களும், சென்னை இராஜதானியிலுள்ள காப்பித் தோட்டங்களும், திருவனந்தபுரம் சமஸ்தானத்திலுள்ள ரப்பர் தோட்டங்களும் வங்காளத்திலுள்ள பெருத்த நிலக்கரி சுரங்கங்களும் ஆங்கிலேய வர்த்தகர்களுக்கே சொந்தமாயும், ஆங்கிலேயர்களுடைய ஆதிக்கத்திலேயே யிருந்தும் வருகின்றன. மேற்கு இந்தியாவிலுள்ள நூல் ஆலைகள் மட்டும் இந்திய வர்த்தகர்களுடைய கையில் இருந்து வருகின்றன. ஆலைக்கு சொந்தக்காரர் யாரோ அவர் தன் இனத்தாரையே ஆலையின் நிர்வாகத்தையும், ஆதிக்கத்தையும் மேற்பார்த்து வரும்படி வைத்துக்கொள்வது சகஜம்.

* ஸ்ரீமான் L. K. துளசிராம், B.A., B.L., M.L.C. வியாபாரியில் எழுதியது.

வையத்தில் உயர்ந்தோர் சிலர், தாழ்ந்தோர் பலர்.

இந்தியர்களுக்குச் சொந்தமான அநேக தொழிற் சாலை ஆங்கிலேயருடைய நிர்வாகத்திற்கு உட்பட்டிருக்கின்றன. ஆங்கிலேயருக்குச் சொந்தமான தொழிற் சாலைகள் இந்தியர் நிர்வாகத்தில் இருக்கக் காண்பது அரிது. சாதாரணமாய் தேர்ச்சியில்லாத தொழிலாளர்களும், கீழ் அந்தஸ்துள்ள மேஸ்திரிகளும், எழுத்து வேலை சிப்பந்திகளுந்தான் இந்தியராயிருக்கிறார்கள். இந்தியாவில் கைத்தொழில்கள் போதுமானபடி அபிவிருத்தி யாகாமலும், ஏற்றத் தாழ்ச்சிகள் நிறைந்து இருப்பதுடன் இந்திய முதலாளிகளில் சிறு விரல் வைத்தெண்ணக்கூடிய சிலர் தவிர, மற்றெல்லோரும் இந்தியாவின் விலையுயர்ந்த மூலப் பொருள்களையும் தடவாளங்களையும் தொழில்செய்து பயன் படுத்தி லாபங்களை அடையாமல் அந்நியநாட்டு வர்த்தகர்கள் தேசத்தின் விளை பொருள்களைக் கைப்பற்றி வேலைசெய்து லாபமடைய விட்டு விட்டு நாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இந்திய பஞ்சாலைத் தொழில்

இத் தொழிலானது பம்பாய் நகரத்திலும், பம்பாய் இராஜதானியிலும் ஸ்தாபிக்கப்பட்டு பலமாய் வேரூன்றி இந்திய வர்த்தகர்களுடைய கையில் இருந்துவருகின்ற ஒரு பெரும் தொழில். இது 1899 முதல் 1913 வருஷம் வரையில் சலனமின்றி ஓங்கி வளர்ந்து வந்தது. யுத்த காலமாகிய 1914 முதல் 1918 வரையில் இதன் வளர்ச்சி தடுக்கப்பட்டது. 1919 முதல் 1921 வரையில் இத்தொழில் உயர்ந்த நிலைமை அடைந்து பூரணசெல்வ நிலையில் இருந்தது. 1923 முதல் 1926 வருஷம் வரையில் இத் தொழில் மிகவும் க்ஷீணதசையடைந்தது.

பஞ்சாலைகள் ஏற்பட்ட ஆரம்பத்தில் நூல் நூற்கும் ஆலைகளாகவே இருந்துவந்தன. அக்காலத்தில் ஆலைகளில் நூற்கப்பட்ட நூல்களில் பாதி வரின்சீ சீனவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. பல காரணங்களால் சீன நூல் ஏற்றுமதி வியாபாரம் குறையக்குறைய நூற்கப்பட்ட நூல்கள் அதே ஆலைகளில் துணிகளாய் நெய்யப்பட்டு, நூற்கும் ஆலைத் தொழிலானது நெசவு செய்யும் ஆலைத் தொழிலாய் மாறியது. யுத்தகாலத்தில் சீமைத்துணிகள் இங்கிலாந்திலிருந்து வரத் தடைபட்ட காரணத்தால் ஜப்பான் தலை யெடுத்து இந்தியாவுக்கு தன்னுடைய நூலையும் ஜவுளியையும் ஏற்றுமதிசெய்ய ஆரம்பித்துவிட்டது. யுத்தம் முடிந்தபின் பம்பாய்க்கு வெளியில் பல புது ஆலைகள் வைக்கப்பட்டு, அதிக இயந்திரங்கள் வரவழைக்கப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டன. 1917-18ல் ஆலைகளின் கொள் முதல், சுமார் 21 கோடியாயிருக்க, 1921-22ல் ஆலைகளின் கொள் முதல் 41 கோடியாகப் பெருகிற்று. இக் காலத்தில் ஏராளமான டிவிடெண்டு லாபங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டன. மில் தொழிலாளிகளின் சம்பளமும் அடிக்கடி படிப்படியாய் உயர்த்தப்பட்டது. கடைசியாக யுத்தத்திற்கு முன்னிருந்த சம்பளத்தைக் காட்டிலும் 100-க்கு 87-பங்கு அதிகப்படுத்தப்பட்டன. க்ஷீண தசையும் ஏற்பட்டது. 1922-ம் வருஷத்தில் பஞ்சாலைகளின் நிகர லாபம் 388 லக்ஷம் ஆகயிருந்தது. 1923-ம் வருஷத்தில் லாபம் 33 லக்ஷமாகக் குறைந்தது. 1924-ம் வருஷத்தில் ஆலைகளின் மொத்த நஷ்டம் 92 லக்ஷமாகவும் 1925-ம் வருஷத்தில் ஆலைகளின் மொத்த நஷ்டம் 134 லக்ஷமாகவும் ஏற்பட்டது. முக்கியமாய் இந்த நஷ்டத்தில் பீடிக்கப்பட்ட நகரங்கள் பம்பாயும் ஆமதாபாத்துமே.

ஜப்பான் மில்லுகளின் போட்டி

ஜப்பான் மில்லுகளில் ஒரு பங்கு பெண் பிள்ளைகள் வேலை செய்கிறார்கள். இந்திய மில்லுகளில் 4·3 பங்கு ஆண் பிள்ளைகளுக்கு ஒரு பங்கு பெண் பிள்ளைகள் வேலை செய்கிறார்கள். இந்தியாவில் வாரத்திற்கு 60 மணி நேரத்திற்கு மேல் ஆண் பிள்ளைகள் வேலை செய்யக் கூடாது. ஜப்பானில் அப்பேர்ப்பட்ட நிபந்தனைகள் ஒன்றும் இல்லை. இந்தியாவில் 16-வயதுக்கு கீழ்ப்பட்ட சிற்றாள்கள் ஒரு நாளைக்கு 6 மணிக்கு மேல் வேலை செய்யக்கூடாது. ஜப்பானில் 15 வயதுக் குட்பட்ட சிறுவர்கள் நாள் ஒன்றுக்கு 11 முதல் 12 மணி நேரம் வரையில் வேலை செய்யலாம். இந்தியாவில் சிறு பிள்ளைகளோ, பெண் பிள்ளைகளோ, இராக் காலங்களில் வேலை செய்யக்கூடாது. ஜப்பானில் ஸ்திரிகளும், 16 வயதுக் குட்பட்ட சிறுவர்களும் இராக்காலங்களில் 1929-ம் வருஷம் ஜூன் மாதம் 30-ந் தேதி வரையில் வேலை

செய்யலாம். பம்பாயில் தொழிலாளிகளுக்குக் கொடுபட வேண்டிய சம்பள விகிதம் அதிகமாகையாலும், ஸ்தல நிர்வாக அதிகாரிகளால் விதிக்கப்படும் முனிசிபல் வரி விகிதங்களின் உயர்வினாலும், பம்பாய் ஆலைத் தொழில் முன்னேற்றமடைய முடியவில்லை.

இந்திய பாங்கிகள்

இந்தியா சட்ட சபையில் பல முறை பாங்கி பிரசினையை எழுப்பியும், ஆண் பிள்ளைகளுக்கு 33.4 பங்கு பாங்கி முறைகளை விசாரிக்க ஓர் கமிட்டி ஏற்படுத்துவதை கவர்ன்மெண்டார் அசட்டை செய்து வருகின்றனர். யுனைடெட் ஸ்டேட்ஸில் சுமார் 30000 பாங்கிகள் இருக்கின்றன. ஜப்பான், கானடா, ஆஸ்திரேலியா முதலிய இடங்களில் முறையே 6000, 4000, 2500 பாங்கிகள் இருக்கின்றன, ஆனால் இப்பெரும் தேசமாகிய இந்தியாவில் 350 பாங்கிகள்தான் இருக்கின்றன. இவைகளில் வரவு செலவு ஆகும் தொகையும் மிகக் குறைவாகவே இருக்கிறது.

இந்திய கடற்கரை வியாபாரம்

இந்திய வர்த்தகர்களுக்குச் சொந்தமான கப்பல்களில் நடத்தப்படும் கடற்கரையையொட்டிய கப்பல் வியாபாரத்தின் அளவு மிகவும் சொற்பமென்று எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். தவிரவும், அக்கரை கடல் வியாபாரத்தில் சம்பந்தப்பட்ட இந்தியா கப்பல்களின் தொகை பூஜ்யமென்றே சொல்லலாம். அந்நிய நாட்டாருக்குச் சொந்தமான கப்பல்களில் கொண்டுபோகும் சரக்குகளுக்காக இந்தியா செலுத்தும் கப்பல் கட்டணத்தை கவனியுங்கள். கடற்கரை படுத்த வியாபாரத்திற்காக வருஷந்தோறும் ரூபா 10 கோடியும், அக்கரை கடல் வியாபாரத்திற்காக வருஷந்தோறும் ரூபா 20 கோடியும் ஆக வருஷந்தோறும் இந்தியாவால் 30 கோடி ரூபாய் கப்பல் கட்டணம் செலுத்தப்படுகிற தென்பதைக் கேட்க எல்லோரும் ஆச்சரியப்படுவீர்கள்.

ஜப்பான் தேசமானது 1870-ம் வருஷ ஆரம்பத்தில் கப்பல் கட்ட ஆரம்பித்தது. சுமார் 52 வருஷங்களுக்குள் அங்கே 3000 கப்பல்கள் கட்டப்பட்டன. அவைகளின் வியாபார எடை மதிப்பு 28 லக்ஷம் டன் ஆக மதிக்கப்பட்டது. ஜப்பான் அரசாங்கத்தார் அக்கரை தேசங்களோடு வியாபாரம் செய்யும் 15 கப்பல் கம்பெனிகளுக்கு வருஷந் தோறும் 125 லக்ஷம் ரூபாய் உபயமாகக் கொடுத்துவருகிறார்கள். கப்பல்கள் புதிதாய்க் கட்டப்பட வேண்டுமானாலும் ஜப்பான் அரசாங்கத்தாரால் உதவி கொடுக்கப்படுகின்றது. இந்தியாவில் கட்டப்பட்டு, இந்தியாவில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டு, இந்தியரால் ஓட்டப்பட்டு, இந்தியரால் நிர்வாகம் செய்யப்பட்டு, இந்தியரால் பங்கெடுக்கப்பட்டு, டைரெக்டர்கள் எல்லோரும் இந்தியமயமாய் இருந்து ரூபாய் கணக்கில் முதல் வைக்கப்பட்டு நடத்தப்படும் இந்திய கம்பெனிகளுக்குச் சொந்தமான வியாபாரக் கப்பல் படை வரும் நாள், எந்நாளோ அந்நாள்தான் இந்திய வியாபாரம் வளர்ந்தோங்கும் நாள்.

இந்திய கடற்கரை கப்பல் வியாபாரத்திலிருந்து பிரிட்டிஷார் அல்லாதாருடைய கப்பல்களை மட்டும் விலக்கி விடலாமென்று கடல் கரை வர்த்தக கப்பல் கமிட்டியார் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அதுமட்டும் போதாது. இப்போதுள்ள கடல்கரை கப்பல் வியாபாரம் முழுமையும் பிரிட்டிஷ் வர்த்தகர் கையில் இருப்பதால் பிரிட்டிஷ் கப்பல்களைக் கடற்கரை யோரக் கப்பல் வியாபாரத்தி லிருந்தும் அறவே ஒழிக்கவேண்டும். கப்பல் கட்டும் தொழிலுக்கும் உபயங்கள் கொடுக்கிறதென்று ஒரு தகுதியான முறையை ஏற்படுத்தி கப்பல் கட்டும் தொழிலுக்கும் சர்க்கார் உதவிசெய்ய வேண்டும். நம் தேசத்தில் கடற்கரை யோர வியாபாரம் விருத்தியடையா திருப்பதாலும், அவ்வியாபாரத்தில் அந்நியர்களின் கப்பல்களுக்கு அதிக சலுகைகள் காட்டப்படுவதாலும், அதன் மூலம் நம் தேசத்திற்கு 10 கோடி ரூபாய் நஷ்டமாகிற படியாலும் இப்பிரச்சினையை முக்கியமாய் யோசிக்கவேண்டும்.

தொழிற் சாலைகள், குடிசைத் தொழில்கள்

இந்தியா, வியாபார அபிவிருத்தியில் முன்னேற்றமடைய வேண்டு மென்றால் பெருத்த தொழிற் சாலைகள் வேண்டுமா, அல்லது தொழில் பட்டரைகள் வேண்டுமா, அல்லது குடிசைத் தொழில் மட்டும் இருந்தால் போதுமா என்பது பிரசினை. இந்தியாவிலுள்ள ஜாதி, அவிபக்த குடும்பம் என்ற ஸ்தாபனங்கள்,

மேனாட்டில் உண்டாகியிருக்கும் தொழிற்சாலை ஸ்தாபன அபிவிருத்திக்கு முரண்பட்டதாய் இருக்கின்றன. நவீன தொழில் முறையில் ஏற்பட்ட தொழிற்சாலைகள், பட்டரைகளையும் குடிசைத் தொழில்களையும் அழித்துவிடவில்லை. தொழிற் சாலைகளிலும் பட்டரைகளிலும் எடுத்துக் கொள்ளப்படாத மற்ற ஜனங்களுக்கு குடிசைத் தொழில்கள் அவசியமாகவே ஒழுங்கு படுத்தப்படவேண்டும். ஆகையால் இந்தியாவில் விவசாயத்துடன் தொழில்களும் விருத்தியாக வேண்டும். தொழில் அபிவிருத்தியில் தொழிற் சாலைகளும், பட்டரைகளும், குடிசைத் தொழில்களும் ஏற்பாடாக வேண்டும்.

சடல் இறக்குமதி வரிகள்

கையினால் போடப்படும் நம்பரிங் மெஷின், கையினால் அல்லது கால் சக்தியினால் வேலை செய்யும் கட்டிங் மெஷின்கள், தைக்கும் மெஷின்கள், பைண்டிங் மெஷின்கள் இவைகளுக்கு நூற்றுக்கு பதினைந்து வீதம், இறக்குமதி வரி விதிக்கப்படுகிறதைப் பார்த்தால் சர்க்கார் கைத்தொழில்களைப் பரிபாலிக்க இஷ்டமில்லாதவர்களாய் இருப்பதுபோல் நினைக்க வேண்டியிருக்கிறது. விசை சக்தியால் ஓடும் மெஷின்களுக்கு வரி இல்லையென்றும், கை அல்லது காலால் ஓடும் இயந்திரங்களுக்கு நூற்றுக்கு 15 வீதம் வரியென்று இருப்பதையும் பார்த்தால், இயந்திர சக்தியால் நடக்கும் பெருத்த தொழிற்சாலைகளுக்கு மட்டும் சகாயம் செய்ய வேண்டுமென்று நமது காருண்ய சர்க்கார் எண்ணுகிறார்களென்று ஏற்படுகிறது.

சுருட்டு வியாபாரம்

இங்கிலாந்தில் இந்திய சுருட்டு கிடைப்பது அரிது. இந்தியாவில் உற்பத்தியாகும் சுருட்டுகளின்பேரில் ஏராளமான இறக்குமதி விதிக்கப்பட்டிருப்பதால் இந்திய சுருட்டுகள் சீமையில் போய்ச் செலவழிய வழியில்லை. சுருட்டுகளின் எடையைப் பொறுத்து வரி ஏற்பட்டிருப்பதால், கனமான இந்திய சுருட்டுகள் இலேசான மணிலா ஹவானா சுருட்டுகளை விட அதிகமான இறக்குமதி வரி கொடுக்கவேண்டியிருக்கின்றன. ஆனால் சுமார் 50 லக்ஷம் ரூபாய் பெறுமான 167 லக்ஷம் ராத்தல் நிறையுள்ள புகையிலை மட்டும் சென்னை மாகாணத்திலிருந்து சீமைக்கு ஏற்றுமதி ஆகிறது.

நமது இறக்குமதிகள்

1925-26-ம் வருஷத்தில் இந்தியாவில் இறக்குமதியான சர்க்கரையின் கிரயம் சுமார் 16 கோடி ரூபாய். சீமை பீசு ஜவுளிகள் சீமை நூல் பெட்டிகள் இவைகளின் கிரயம் ரூ. 69 கோடி. இரும்பு, உருக்கு, தாம்பரம் துத்தநாகக் குழாய்கள், தகடுகள், ரூ. 15 கோடி. மண்ணெண்ணெய் பெட்ரோல் இவைகள் 11 கோடி, மோட்டார்கார் பஸ்கள். சைக்கிள் வண்டிகள் $5\frac{3}{4}$ கோடி. பிளானல் கம்பளி ஜவுளிகள் $5\frac{1}{2}$ கோடி, பட்டு நினுசுகள் $3\frac{3}{4}$ கோடி, ஆகாராதிகள் $4\frac{1}{2}$ கோடி, விஸ்கி சாராயங்கள் 334 லக்ஷம்.

நாணய மாற்று விகிதம்

பவுன் ஒன்று ரூபாய் 15 விலை யிருந்ததை, ஸர். பேசில் பிளாக்கெட் ரூபா 13—6—0க்கு குறைத்து விட்டார். ஆனால் மேற்படி மாற்றத்தை அனுசரித்து விலை வாசிகள் ஒழுங்குபடவில்லை. கடன் பத்திரங்களின் பேரில் வரவேண்டிய வட்டியையும் முதலையும் கணக்கிட்டுப் பார்க்க, ரூபாய் 1-க்கு 18 பென்சு விலை வைத்து கணக்குத் தீர்க்கும்படி பிறந்திருக்கும் உத்தரவு இதற்கு அத்தாட்சியாகும். இவ் விகிதத்தினால் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இருந்துவந்த நூல் வியாபாரம் அடியோடு போய்விட்டதென்று பம்பாய் ஆலைக்காரர்கள் முறையிடுகின்றனர். மேலும் ஜப்பான் துணிகள் இந்தியாவில் வந்து நமது தொழிலைக் கெடுத்து கவர்ன்மெண்டின் உதவியை எதிர்பார்க்கச் செய்துவிட்டது.

வேலையில்லாத் திண்டாட்டம்

படித்த வகுப்பாரில் உயர்தரக் கலாசாலை படிப்புவரை படித்து நடுத்தர வகுப்பாருடைய வேலையில்லாத் திண்டாட்ட விஷயமாய் எடுத்த கணக்கின்படி சர்க்கார் உத்தியோகம் முனிஸிபாலிட்டிகள் லோக்கல் போர்டுகள், வக்கீல்கள் உபாத்தியாயர்கள், கவர்ன்மெண்டு கிளார்க்குகள், அக்கவுண்டண்டுகள் இவர்களின் மொத்தம் லக்ஷத்து எழுபத்தையாயிரம். வருஷந்தோறும் காலியாகிற உத்தியோகங்கள் நூற்

றுக்கு நான்கு விதம். வருஷத்தில் 7000 உத்தியோகங்கள் காலியாகும். உயர்தர பீ. ஏ., வகுப்பு வரை படித்து பள்ளியை விட்டு வெளியே வரும் மாணாக்கர்களின் தொகை வருஷத்திற்கு 14000. ஒரு வேலை காலியானால் அதற்கு இரண்டுபேர் ஆஜரில் இருக்கிறார்கள். 10 வருஷத்தில் பீ. ஏ., படித்தவர்கள் இரண்டு பங்காகவும் இண்டர்மீடியேட் படித்தவர்கள் 3 பங்காகவும், எஸ். எஸ். எல். ஸி. படித்தவர்கள் $2\frac{1}{2}$ பங்காகவும் அதிகரித்திருக்கிறார்கள். இது உயர்தர கல்வி படித்த மத்திய வகுப்பாரின் கதி. படிப்பில்லாமல் வியாபாரம் செய்யும் கடைக்காரர்கள், விவேகமுள்ள வர்த்தகர்கள், யுக்தியுடன் விவசாயம் செய்யும் குடிகள் முதலான இவர்களின் நடுத்தர வகுப்பாருடைய திண்டாட்டத்தைப்பற்றி சர்க்கார் கவனிக்கவே இல்லை.

நாம் செய்யவேண்டிய வேலைகள்

ஒவ்வொரு ஜில்லாவிலும் வர்த்தக சங்கங்கள் ஏற்படுத்த வேண்டும். சரக்குகளின்மீது ஏற்படுத்தப்படும் கடல் சுங்கத் தீர்வை, இறக்குமதி வரி விகிதங்கள் முதலானவைகள் வர்த்தக சங்கங்களின் மெஜாரிடி அபிப்பிராயங்களின் பேரில் ஏற்படுத்தவேண்டும். அவர்கள் அபிப்பிராயப்படியே விகிதங்களை மாற்ற வேண்டும். இந்திய சர்க்கார் கைத்தொழில்களில் உபயோகிக்கப்படும் நெசவு இயந்திரங்கள், சாய இயந்திரங்கள் இவைகளின் மீது 100-க்கு 15 விதம் கடல் இறக்குமதி தீர்வை ஏற்படுத்தியிருப்பதை மாற்றி கைத்தொழிலில் உபயோகமாகக் கூடியதும், கை சக்தியினாலாவது, கால் சக்தியினாலாவது ஓட்டக்கூடிய எல்லா இயந்திரங்களின்மீதும் ஒருவிதமான இறக்குமதி வரியும் விதிக்கக் கூடாதென்று சட்டம் இயற்றப்பட வேண்டும். இந்திய வியாபாரத்தை சென்னை மாகாண சட்டசபையில் பிரதிநிதிப்பதற்காக வருமான வரி செலுத்தும் இந்திய வர்த்தகர்கள் எல்லோரையும் வடக்கு தொகுதி, தென் தொகுதி, மத்திய தொகுதி, மேற்கு தொகுதி என்று பிரித்து ஒவ்வொரு தொகுதிக்கும் பிரதிநிதியாக நான்கு பிரதிநிதிகளை சென்னை மாகாண வர்த்தகப் பிரதிநிதிகளாக சென்னை சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்க வேண்டும். வருமான வரி ஆபீசுகளில் வர்த்தகர்கள் காட்டும் கணக்குகளை ஒப்புக்கொள்ளாமல், வருமான வரி உத்தியோகஸ்தர்கள் மதிப்பின்பேரில் வரி விதித்தால் அப்படி வரி விதிக்கப்பட்ட அஸ்ஸெஸிகள், நியாய ஸ்தலங்களுக்குப் போய் தங்களுடைய கணக்குகள் உண்மையான கணக்குகள் என்று ஸ்தாபித்துக் கொள்ளும்படியான சுதந்தரம் இருக்கக்கூடியதாய் வருமான வரி சட்டத்தை மாற்றவேண்டும். சென்னை ராஜதானியில் செய்யப்பட்டுள்ள ஸ்டேட் எயிட இண்டஸ்டிரிஸ் ஆக்ட் என்று சொல்லப்படும் தொழிலுக்கு சர்க்கார் பண வுதவிச் சட்டத்தின்படி நியமிக்கப்படும் போர்டில் ஆங்கிலேய வர்த்தகர்கள் நிறைந்து இந்திய வர்த்தகர்களால் புதிதாய் ஸ்தாபிக்கப்பட்டு பொருள் உதவி கேட்கும் தொழில்களுக்கு இடைஞ்சல் செய்வதாய் இப்போது போர்டிலுள்ள இந்திய சட்ட சபை மெம்பர்களில் ஒருவர் மூலம் தெரிவதால், போர்டில் ஆங்கிலேய வர்த்தகர்கள் இருக்கக் கூடாதென்று சட்டம் ஏற்படுத்தவேண்டும்.

ஜனங்களை வர்த்தகப் படிப்பிலும், தொழில் படிப்பிலும் ஆசை காட்டித் திருப்பவேண்டும். சர்க்கார் அனுசரித்துவரும் படிப்பு முறைகளை உடனே மாற்றவேண்டும். கைத்தொழிற் பள்ளிக் கூடங்கள் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஏற்படவேண்டும். பிரான்ஸ் ஜெர்மனி, இத்தாலியா இவைகளில் கல்வி கற்றுக் கொடுக்கப் படுவதுபோல், ஜனங்கள் பிழைப்புக்கு ஏதுவான தொழில்களைக் கற்றுக்கொடுக்கும் படிக்கும், வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்ளும் படிக்கும் இந்திய நாட்டுப் படிப்பு முறைகளை மாற்றவேண்டும். பாங்கிகளை அதிகமாய் ஏற்படுத்த வேண்டும். பாங்கி நடத்தும் முறைகளை இந்திய மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். கப்பல் தொழிலிலும், ரயில்வேக்களிலும், ராணுவத்திலும் ஏராளமான இந்தியர்களை சேர்த்துக் கொள்ளவேண்டும். வர்த்தக உயர்வே, ராஜீய வாழ்விற்கு அடிப்படை. வர்த்தகத்தில் நாம் முன்னேறா விட்டால் அரசியல் வாழ்வில் நாம் முன்னேற முடியாது. வர்த்தகத்திற்காக வந்து நமது நாட்டைக் கைப்பற்றி நம்மை ஆண்டுவரும் பிரிட்டிஷார் காட்டிய வழியையே கடைப்பிடித்து நாமும் வர்த்தகத்தில் வளர்ந்தோங்கி விருத்தியடைய எல்லாம் வல்ல இறைவன் துணைசெய்வாராக!

வையத்தில் எல்லோரும் ஒரு போக்கு அல்ல.

275

பொறுக்கியெடுத்த உயர்தர நெல் வகைகளின் விதை சுத்தத்தைக் காப்பாற்றுவதெப்படி?

HOW TO PRESERVE PURITY IN IMPROVED AND SUPERIOR KINDS OF PADDY?

[ஸ்ரீமான் K. வேங்கடராமன், எம்., ஏ.,
உதவி நெல் நிபுணர், ஆடுதுறை.]

தஞ்சாவூர் ஜில்லாவில் ஸ்தாபித்திருக்கும் நெல் அபிவிருத்தி விவசாயப்பண்ணையில் விதை பொறுக்கி யெடுக்கும் முயற்சி 1922-ம் வருஷ முதல் இன்றும் நடைபெற்றுவருகிறது. இப்படி அநேக வருஷங்களாகச் செய்துவரும் வேலைகளின் பயனால் 9 வித உயர்தர நெல்வகைகள் ஸ்தாபிக்கப்பெற்றிருக்கின்றன. இந்த சுத்தமான நெல் வகைகளை காவேரிப் பாசனமுள்ள நிலங்களில் மிராசுதார்கள் சாகுபடி செய்வதினால் பெரும்பாலும் உபயோகித்துவரும் சாதாரண நெல்நினுசுகளைவிட அதிக மாகூல் அடைந்திருக்கிறார்கள். இந்த உயர்தர நினுசுகள் கதிர் விடுவதிலும், ஏககாலத்தில் முற்றுவதிலும் அதிக மகசூலைக் கொடுப்பதிலும் மிராசுதார்களால் சிலாகிக்கப்படுகின்றன. ஆகையினால் இவ் விதைகளுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டு மிராசுதார்களின் வேண்டுகோளுக் கிணங்க விதைகளைத் தயாரிப்பதுக் கொடுப்பது ஆடுதுறை சர்க்கார் பண்ணையில் சாத்திய மில்லாம லிருக்கிறது. இவ்வுயர்தர விதைகளின் சிலாக்கிய குணங்கள் விதை சுத்தத்தை பொறுத்தது. விதைக் கலப்பு ஏற்பட்டால் மாகூல் குறைவதுடன் ஒரேகாலத்தில் கதிர்வாங்கி முற்றும் குணங்களும் காணப்படமாட்டா. ஆதலால் விதை சுத்தத்தைப்பற்றி ஒவ்வொரு மிராசுதாரரும் அடியில் சொல்லப்பட்ட சில விஷயங்களைக் கவனிப்பது அத்தியாவசியம்.

ஒருவகை நெல் நினுசு, நான்கு காரணங்களினால் கலப்பு அடைந்து கெட்டுப்போகக்கூடும். (1) நாற்றங்கால்களில் கலப்பு அடையலாம். (2) நட்ட வயல்களில் கலப்பு அடையலாம். (3) களங்களில் அடிக்கும்பொழுது கலப்பு அடையலாம். (4) நெல்லை சேகரித்துவைத்திருக்கும் சாக்குகளிலும்; கோட்டைகளிலும், பட்டைகளிலும், குதிருகளிலும் கலப்பு அடையக்கூடும்.

(1) **நாற்றங்கால்களில்** முன்போகத்தில் சாகுபடி செய்யப்பட்ட நெல் நினுசுகளின் விதைகள் சிதறி வயல்களில் கொட்டுண்டு போகின்றன. அப்படிப்பட்ட விதைகளை மறுபடி புதுவிதை விடுவதற்குமுன் அழிப்பது அவசியம். இது எப்படியெனில் நாற்றங்கால்களுக்குத் தண்ணீர் நன்றாகப்பாய்ச்சி விதைகளை முளைக்கச்செய்து, மறுபடியும் தண்ணீர் கட்டி நன்றாக உழுதால் சிதறிக்கிடந்த விதைகள் முளைத்து தண்ணீரில் மடித்து அழுகிப் போய்விடும். தஞ்சை ஜில்லாவில் அநேகமாக சம்பா விதையை சேற்று நாற்று விடுவதினால், இப்படிச் செய்வதில் யாதொரு கஷ்டமும் இல்லை. ஆனால் புழுதியில் விடப்படும் குறுவை நாற்றங்கால்களில் இப்படிச்செய்ய சாத்தியப்படாது.

(2) **நடவுநட்ட வயல்கள்.** நடவுநட உத்தேசித்திருக்கும் வயல்களில்கூட முன் போகத்தில் சாகுபடிசெய்த நெல் நினுசுகளின் [illegible]கள் பூமியில் கரைந்து கிடக்கும். இவ்வயல்களில் தண்ணீர்விட்டு முளைக்கச்செய்து, முளைத்தவுடன் மறுபடியும் தண்ணீர்கட்டி மடக்கி உழுதால் அம்முளைகள் எல்லாம் மடித்து அழுகிவிடும். பிறகு இவ்வயல்களில் சுத்தமான நாற்றுகளை நடலாம். நெல் பயிர் கதிர்வாங்கும்

சமயங்களில் கவனித்தால் கலப்புக்கதிர்கள் தோன்றும். அப்படிப்பட்ட கதிர்களின் தோற்றத்தின் வேற்றுமையினால் சுலபமாக நீக்கப்படலாம். மேலும் காலத்திற்குப் பிந்தி வெளிப்படும் கதிர்களையும், காலத்திற்கு முன்னால் கதிர்வாங்கும்முதல்களையும் அப்புறப்படுத்தவேண்டியது. இவ்விதமாக ஒரு மிராசுதாரின் நிலம் முழுதும் செய்யவேண்டியது அவசியமில்லை. ஏனென்றால், ஒரு குறித்த நெல் தினுசில் விதைக்காக எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு மாசூலைக் கொடுக்கக்கூடிய விஸ்தீரணத்தில் மட்டும் பயிரை இப்படிச் சுத்தப்படுத்தினால் போதும். ஒருவருக்கு 20 ஏகரா நிலம் சாகுபடிக்கு ஒரு தினுசுவிதை வேண்டி இருந்தால் அத்தினுசு பயிரில் ஒரு மா விஸ்தீர்ணத்தில் இப்படிச் சுத்தம் செய்தால் போதுமான விதை அகப்படும்.

தவிர, மிராசுதார்கள் பெரும்பாலும் அநேக தினுசு நெல்களை பக்கத்திலிருக்கும் வயல்களிலாவது, அல்லது ஒரே வயலின் பாகங்களிலாவது சாகுபடி செய்கிறார்கள். இப்படிச் செய்வதில் இத் தினுசுகள் ஒன்றோடொன்று இயற்கையிலேயே கலப்பு அடைகிறது. இக்கலப்பானது கதிர் வெளி வாங்கும் காலத்தில் ஒரு தினுசு விதையின் மகரந்தமானது வேறு தினுசு அண்டகோசத்தில் சேருகிறபடியால் ஏற்படுகிறது. இவ்விதக் கலப்பை எப்படி நீக்குவதென்றால், ஒரு தினுசு நெல்பயிரின் பக்கத்தில் வேறுதினுசு சாகுபடியானால், அப்பயிரின் அருகாமையிலிருக்கும் கதிர்களை விதைக்காக அறுவடை செய்யாமலிருப்பதேதான்.

(3) **நெல் அடிக்கும் களங்கள்.** சாதாரண மிராசுதார்களின் களத்திலேயே அதிகக் கலப்பிற்கு ஹேது ஏற்படுகிறதென்றால் பொதுக் களங்களில் சொல்லவேண்டியதில்லை பெரும்பாலும் பற்பலதினுசுகள் ஒரேகளத்தில் அடிபடுவதாலும், களத்தில் சுத்த மின்மையாலும் கலப்பு ஏற்படுகிறது. இதனால் மண் களங்கள் கூடாதென்றும் விலைபெற்ற கல் களங்கள்தான் வேண்டுமென்றும் சொல்லவில்லை. சாதாரண மண் களங்களிலேயே சிறிது ஜாக்கிரதையினாலும், ஊக்கத்தினாலும், விதை சுத்தத்தைக் காப்பாற்றுவது சாத்தியம். விதைக்காக அறுக்கப்பட்டிருக்கும் கட்டுகளை அடிப்பதற்குமுன், களத்தை சுத்தமாகக்கூட்டிவிட்டு அக்களத்தின் நடுவில் விதைக் கட்டுகளை அடித்து சிதறிப் போகும் விதைகளை நீக்கி, நடுவிலிருக்கும் விதைகளைமட்டும் சேகரித்து வைத்தால் விதை சுத்தத்திற்கு பழுது ஏற்படாது. இப்படி இவ்வளவு ஜாக்கிரதையுடன் ஒரு மிராசுதார் எல்லா மாசூலையும் அடிக்கவேணுமென்பது கருத்தல்ல. விதைக்குப்போதுமான அளவே. இவ்வண்ணம் கட்டுகளை அடித்தல் அவசியம். வர்த்தகனுக்கு போடக்கூடிய நெல்லிற்கும், சாப்பாட்டிற்காக வைத்திருக்கும் நெல்லிற்கும், இந்த ஜாக்கிரதை வேண்டியதில்லை.

(4) **விதை சேகரித்து வைக்கும் சாக்குகள், கோட்டைகள்.** சாதாரணமாக விதையை வைக்கோலினால் செய்த நெல் சுருணைகளில் சேகரித்து வைப்பது பெரும்பாலும் தஞ்சை ஜில்லா மிராசுதார்களின் வழக்கம். இவ்வித நெல் சுருணைகளுக்கு கோட்டைகளென்று பெயர். சிலர் சாக்குகளிலும் சேகரித்து வைப்பதுண்டு. மேற்சொன்ன கோட்டைகளில் உபயோகப்படுத்தும் வைக்கோலானது எவ்வளவு நன்றாக அடிபட்டிருந்தாலும், சில தானியக்களுடன்கூட ஒட்டியிருக்கும் அந்த தானியங்கள் அரிசி நன்றாகப் பிடிபடாமல் கருக்காய் என்று வழங்கினாலும் நிலத்தில் முளைத்து வரக்கூடிய சக்தியுண்டு. ஆகையினால் சிறுமணியன் நெல்லை, செல்லூர்சம்பா அடித்த வைக்கோல் சுருணைகளில் கோட்டையாக கட்டிவைப்பதின் அபாயம் நன்குவிளங்கும். ஆகையால் கோட்டைகளேதான் விதை சேகரத்திற்கு வேண்டுமென்றால் ஒவ்வொரு நெல்தினுசுக்கும் அவ்வித வைக்கோலினால் செய்யப்பட்ட சுருணைகளில் வைப்பது அவசியம். விதை நெல்லை சாக்குகளில் சேகரித்து வைத்தால், அச்சாக்குகளின் மூலைகளிலும், சந்துகளிலும் இதர தினுசு நெல் விதை தங்கி இருக்காமல் பரிசோதனைசெய்து நீக்கிவிட்ட பிறகே விதைநெல்லை அச்சாக்குகளில் கட்டிவைக்கவேண்டும். விதை நெல்லை சேகரித்து வைத்திருக்கும் காலங்களில் பூஞ்சகாளம் அந்து இவைகள் அடையாமல் இருக்கும்பொருட்டு அடிக்கடி நன்றாக வெய்யிலில் உலற்றுவது வழக்கம். அப்படி உலற்றி எடுத்து வைக்கும் காலங்களில் ஜாக்கிரதையின்மையால் கலப்பு ஏற்படாமல் பாதுகாப்பது மிக்க அவசியமே.

வையம் பெரிதானாலும், வளமுள்ள இடம் கொஞ்சம்.

நாமகரணம்

NAMAKARANAM

[ஸ்ரீமான் வே நாராயணய்யரவர்கள்,
எம். ஏ., எல். எல்.]

பகவானுடைய பெயர்களை மக்களுக்கு இடுதல் இந்துக்களுள் எங்கும் வழங்கும் வழக்கமாக இருக்கின்றது. இவ்வகை வழக்கம் வேறு மதஸ்தர்களிடம் காணப் படுவதில்லை. கிறிஸ்தவர்கள் தங்கள் மதத்திலே பிறந்த பெரியார்களின் பெயரை இடுவதும், மகம்மதியரும் அவ்வாறே செய்வதும், இவ் வழக்கத்துக்கு ஒருவகையிலே ஒப்பாவன ஆயினும் ஹிந்துக்கள் மட்டுமே ஒருவர் பெயரை இன்னொருவர் வைத்துக் கொள்ளுதல் அடிமைக்கு அடையாளம் ஆகுமென்றும், அதுபற்றியே தெய்வதங்களின் பெயரைத் தம் மக்களுக்கு இட்டு அவ்வாறு இடப்பட்ட பெயராலேயே தமது மக்கள் அந்தத் தெய்வங்களின் அடிமைகளென்பதைக் குறிப்பதென்றும்கருதுகின்றனர். "தத்நாமகருஹணம் சைவத்ரிவிதம் தாஸ்ய லக்ஷணம்" என்னும் சுலோகப் பகுதி இவ் வுண்மையை விளக்குவது.

இவ்வாறு தெய்வங்களின் பெயரை மக்களுக்கு இடும் வழக்கம் ஹிந்துக்களுள் எப்பொழுது பாவியது என்பது ஆராய்ச்சிக் குரியதோர் விஷயமாகும். இராமாயண மஹாபாரத முதலிய வடமொழிப் புராணங்களிலே இவ்வகை வழக்கம் காணப்படுவதில்லை. பஞ்சதந்திரம், கதாகோசம், கதாஸரித் ஸாகரம் முதலிய நூல்களிலேயும் கதாபுருஷர்கள் ஸ்திரீகள் இவர்கள் தெய்வங்களின் பெயரைக் கொண்டவர்களாகக் குறிக்கப் படவில்லை. ஹிந்துப் பெரியாரில் மிகப் புராதனமானவர்கள் இவ்வகைப் பெயர்களைக் கொள்ளவில்லை என்பது ரிஷிகளின் பெயர்களினின்றும் சூரிய சந்திர அக்னி வமிச அரசர்களின் பெயர்களினின்றும் நாம் அறிந்த விஷயம்.

எனவே, சங்கரர், இராமாநுஜர், பாஸ்கரர் என்னும் பெயர்களே நமக்குக் கிடைத்திருக்கும் பெரியார்களின் பெயர்களும் மிகப் பழையவைகளான தெய்வ நாமங்கள் ஆகின்றன. மிகப் பழையனவாகிய தமிழ் இலக்கியங்களை ஆக்கியோர் பெயர்களிலே பல ஈசுவர நாமங்களாகக் காணப்படுகின்றன. பெருந்தேவனார், காமக் கண்ணியார், நல்லுருத்திரனார், உருத்திரங் கண்ணனார், கண்ணனார் முதலியன உதாரணங்களாவன. ஆயினும், இவ்வகைப் பெயர்கள் அந்நூல்களிலே காணப்படவில்லை. ஆகலின் இப்பெயர்கள் பிற்காலத்திலே இந்நூல்களைத் தொகுத்தவர்கள் அளித்த பெயர்களோவென்று சந்தேகிக்க இடம் உண்டு. இவ்வாறு மிகப் பழைய காலத்திலே ஈசுவரப் பெயர்களை மக்கட்கு அளிப்பது பெருகிய வழக்கு அன்றாயினும் சிற்சில அருகிய வழக்குகள்கூட அக்காலத்து இருந்தது இல்லை என்று உறுதிசொல்ல முடியாது.

இனி, இவ்வழக்கை அதிகம் தமிழ் நாட்டிலே வளர்த்ததற்குப் பயன்பட்டதாகக் கருதக் கூடிய சில அழகிய பாசுரங்கள் பெரியாழ்வார் திருமொழியிலே காணப்படுவன என்பது கவனிக்கத்தக்கது ஆகும். அக்காலத்திலே மன்னர் தனவந்தர் இவர்களுடைய பெயர்களை மக்களுக்கு இட்டு அவரிடம் சென்று உங்கள் பெயர் இட்ட குழந்தைகளை நீங்கள் ஆதரித்தல் வேண்டும் என்று வேண்டிப் பரிசில் பெறுவது வழக்கம். அவ்வாறின்றி, "காசும் கறையுடைக் கூறைக்கும் அங்கு ஓர் கற்றைக்கும் ஆசையினால் அங்கு அவத்தப் பேரிடும் ஆதர்காள்! கேசவன் பேரிட்டு நீங்கள் தேனித்து இருமினோ" என்று பெரியாழ்வார் பாசுரமிடுகின்றார்; பின்னும், "அங்கு ஒரு கூறை அரைக்கு உடுப்பதன் ஆசையால் மங்கிய மானிட சாதியின் பேரிடும் ஆதர்காள்! என் செய்வான் பிறர் பேரிட்டீர்? பிச்சைபுக் காகிலும் எம்பிரான் திருநாமம் நச்சுமின்" என்றும்; "மானிடசாதியில் தோன்றிற்று ஓர் மானிடசாதியை மானிட சாதியின் பேரிட்டால் மறுமைக்கு இல்லை" என்றும்; "மண்ணில் பிறந்து மண்ணாகும் மானிடப் பேரிட்டு அங்கு எண்ணம் ஒன்று எண்ணியிருக்கும் ஏழை மனிதர்காள்! கண்ணுக்கினிய கரு முகில் வண்ணன் நாமமே நண்ணுமின்!" என்றும், 'நம்பி பிம்பி என்று நாட்டு மானிடப் பேரிட்டால், நம்பும் பிம்பும் எல்லாம் நாலு நாளில் அழுங்கிப்போம்' என்றும், "ஊத்தைக் குழியில் அமுதம் பாய்வதுபோல் உங்கள் மூத்திரப் பிள்ளையை என் முகில் வண்ணன்

பேரிட்டுக் குணலம் ஆடித்திரிமினோ" என்றும் இவ்வாழ்வார் பாடியுள்ளார். எனவே, இவ்வாழ்வார் காலத்திலே கடவுளின் பெயர்களை மக்களுக்கு இடுவது பெருவழக்காகவில்லை. ஊரில் தனவந்தர் பெயரை மக்களுக்கு இடும் வழக்கம்மட்டும் அதிகம் இருந்தது. இவ்வாறான வழக்கம் ஒன்று அக்காலத்திலே தமிழ் நாட்டிலே பரவியிருந்தது என்பதற்குச் சில சாஸனங்களிலும் செப்புப் பட்டயங்களிலும் வரும் பெயர்கள் சிறந்த சான்றுகளாகின்றன. அவ்வழக்கு மாறி தெய்வப் பெயர்கள் இடும் வழக்கம் எங்கும் பரவுவதற்குப் பெரியாழ்வாரின் பாசுரங்கள் மிகவும் அநுகூலமாக இருந்திருக்க வேண்டும். இனி தந்தைவழியிலும் தாய்வழியிலும் உள்ள பாட்டன்மாரின் பெயர்களைப் பௌத்திர தௌஹித்திரர்களுக்கு இடும் வழக்கம் அக்காலத்திலே தொடங்கி இருந்ததாக நாம் சில சாஸனங்களினின்றும் செப்போடுகளினின்றும் அறிகின்றோம். இது பற்றியே பாட்டன் பௌத்திரன் இவர்களுக்குப் "போன்" என்ற பெயர் வழங்கப்பட்டது போலும். இவ்வாறே உருத்திரன் மகன் கண்ணன் என்று ஒருவன் இருந்தால் அவனை உருத்திரங் கண்ணன் என்றும், அவன் மகனுக்கு உருத்திரன் என்ற பாட்டன் பெயரையிட்டு கண்ணன் உருத்திரன் என்றும் அழைத்து வந்தார்கள் என்பதும் தெரியவருகின்றது.

இவ்வாறு ஆழ்வார்களும் நாயன்மார்களும் வற்புறுத்தி மக்களுக்கு தெய்வப் பெயர்களை இடும்படிச் செய்ததினின்றும், தேவாரம் திவ்வியப்பிரபந்தம் இவைகளிலே வரும் தெய்வப் பெயர்களாகிய சொற்றொடர்கள் சில பத்து பதினொன்று பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் வழங்கிய பெயர்களிலே காணப்படுகின்றன. 'நிகரில் முகில்வண்ணன், ஆநிரை மேய்த்தான் நம்பி, ஆராவமுதன், அடியார்க்கு நல்லான், நச்சினார்க்கினியன், மகர நெடுங்குழைக் காதன், மாயக் கூத்தன், குறுங்குடி நம்பி முதலிய பெயர்கள் காணப்படுவது கவனிக்கத்தக்கது. இம்மட்டோ? இவ்வாழ்வார்கள் நாயன்மார்கள் தங்கள் பாசுரங்களிலே இட்ட பெயர்கள் சில அவர்கள் பாடிய ஊரிலே கோயில் கொண்டுள்ள தெய்வங்களின் பெயர்களாயின. உதாரணமாக, ஆராவமுதன் என்று கும்பகோணத்திலுள்ள பெருமாளை நம்மாழ்வார் பாடியதினின்றுமே அம் மூர்த்தத்திற்கு 'அபரியாப்தாமிர்தன்' என்ற பெயர் அளிக்கப்பட்டது. அவ்வாறே தென் திருப்பேரெயிலிலே கோயில் கொண்டு வீற்றிருந்த திருக்கோலத்திற்கு மகரநெடுங்குழைக் காதன் என்றும், வடமொழியிலே மகர பூஷணன் என்றும் பெயராயிற்று. பெருங்குளம் என்ற தென் குளந்தையிலே நிற்கும் பெருமாளுக்கு மாயக் கூத்தன் என்றும், சோர நாட்டியன் என்றும் பெயராயிற்று. தொலைவில்லி மங்கலம் என்னும் இரட்டைத் திருப்பதியிலே ஆழ்வார் நாயகி பாவம் அடைந்து திருத்தாயார் சொல்லாகப் பாசுரமிடுகின்றார். அவ்வாறு பாடும்போது நாயகியைக் கருந்தடங்கண்ணி என்று சொன்னதினின்றும் அவ்வூர்ச் சிதேவிக்குக் கருந்தடங்கண்ணி என்று பெயராயிற்று. ஆழ்வாராகிய நாயகி அரவிந்த லோசனன், செந்தாமரைக் கண்ணபிரான், மணிவண்ணன், தேவபிரான் என்று கடவுளை அழைத்ததினின்றும் அவ்வூரிலுள்ள தெய்வ மூர்த்திகளுக்கும் அரவிந்த லோசனன், தேவபிரான், மணிவண்ணன் என்ற பெயர்கள் முறையே வழங்கப்பட்டன. இவ்வாறே தேவாரப் பதிகங்களினின்றும் பரமசிவ மூர்த்தங்களுக்குப் பெயர் வந்திருப்பதும் கவனிக்கத்தக்கது.

இவ்வாறு கடவுளின் பெயர்களை மக்களுக்கு இடுதற்கு வேறு ஒரு காரணமும் உள்ளது. மனத்தூய்மை நாக்குத்தூய்மை இவை இல்லையெனினும் தெய்வத்தைப் பற்றிய சிந்தையொன்றுமே இல்லையெனினும் தெய்வத்தின் பெயரை அடிக்கடி உச்சரித்தலால் புண்ணியம் கிடைக்கும் என்ற கொள்கை பிறகாலத்துப் பக்தி மார்க்கத்திலே புகுந்துகொண்டது. ஆதலின் ஒருவனுடைய அன்னை தன் மகனை நாமமாயிரம் ஏத்த நின்ற நாராயணனின் பெயர்களிலே ஒன்று இட்டு அழைத்தால் அவனை அழைக்கும்போது எல்லாம் கடவுளின் பெயரை அவள் உச்சரித்தாள் ஆக அதனால் வரும் புண்ணியமானது அவளை நரகம் புகாது தடுக்கின்றது. இவ்விதக் கொள்கையையே பெரியாழ்வார் மேற்சொன்ன பாசுரங்களிலே குறிக்கின்றார். "நாரணன் தன் அன்னை நரகம் புகாள்" என்று ஒவ்வொரு பாசுரமும் முடிகின்றது கவனிக்கத்தக்கது.

இனி, தமிழ் நாட்டார் தமது மக்கட்குப் பெயரிடும் வழக்கத்தைச் சற்று கவனிப்போம். அநேக குடும்பங்களிலே முதல் மகனுக்குப் பிதாமஹன் பெயரும், இரண்டாவது மகனுக்கு மாதாமஹன் பெயரும், அவ்வாறே பிதாமஹி மாதாமஹிகளின் பெயர்கள் பெண்களுக்கும் இடப்படுகின்றன. மக்கட்பேறு இன்றி இராமேசுவரம் சென்று, ஸர்ப்ப சாந்திகள் செய்தோ பெறும் ஆண் பெண் மகவுகளுக்கு இராமநாதன், இராமலக்ஷ்மி, சேஷன், சேஷி முதலிய பெயர்கள் இடப்பெறுகின்றன. வேறு மகவுகள் தாம் தாம் பிறந்த ஊரிலுள்ள தெய்வங்களின் பெயர்களைப் பெறுகின்றன, திருவல்லிக்கேணியிலே பிறந்தவர் பலரும் பார்த்தசாரதிகளாகவும், வேதவல்லிகளாகவும் அழைக்கப் பெறுகின்றனர். அவ்வாறே மயிலாப்பூரிற் பிறந்தோர் கபாலிகளும் கற்பகங்களும் ஆகின்றனர். இதுபோலவே வேறு ஊர்களிலே பிறந்தோர்களும். ஆதலின் பலருடைய பெயர்களினின்றுமே அவர் பிறந்த ஊரை ஊகித்தறிதல் கூடும். பெண்களின் நாமகரணத்தைப்பற்றி ஸ்மிருதிகளிலே காணப்படும் கொள்கைகள் சில இங்கு குறிப்பிடத்தக்கன. யாக்ஞவல்கியர் என்பார் நதி, மரம், மலை இவைகளின் பெயர்களையுடைய கன்னிகளை மணத்தல் கூடாது என்பர். அவ்வாறே வேறு சில ஸ்மிருதிகளும் விவாஹத்தை யொட்டிய ஸூத்திரங்களும் கூறுகின்றன. நாமகரணத்தை விதிக்கும் ஸூத்திரங்கள் பின்வருமாறு கூறுவன :—(1) குழந்தை பிறந்த பத்துநாளும் கடந்த இரண்டாநாள் அதனைப் பெற்றோர் அதற்குப் பெயரிடல்வேண்டும். அக்கினியின் முன்னிலையிலே குழந்தைக்குப் பெயர் கொடுத்தனர் என்பது வேறொரு மந்திரத்தால் தெரியவருகின்றது அந்த மந்திரமானது, "ஏ அக்கிதேவனே; எனக்கு முதன் முதலாக என் தாய் தந்தையர் உன் முன்னிலையிலே என்ன பெயர் கொடுத்தார்களோ அந்தப் பெயரானது" என்று தொடங்குவது (2) ஆண் மகவுகளின் பெயர்கள் இரண்டு எழுத்தினாலாவது நான்கு எழுத்தினாலாவது ஆதல் வேண்டும். வேறு சில நிபந்தனைகளும் விதிக்கப்படுகின்றன. அவ்விதிகளை மீறினால் 'ஸ' என்ற அக்ஷரத்தோடு சேர்ந்ததாகவாவது இருத்தல்வேண்டும்.

இவ்வித நாமகரண விஷயத்திலே போதாயனர்மட்டும் ஒரு விசேஷ விதியைக் குறிக்கின்றார். அதாவது குழந்தையின் பெயர் ரிஷியின் பெயராகவோ தேவதையின் பெயராகவோ வம்சத் தலைவர்களின் பெயராகவோ இருக்கலாம் என்பது. இவ்விசேஷ விதியே தற்காலத்தில் வழங்கப்படும் தெய்வப் பெயர்களுக்கும் ரிஷிகளின் பெயர்களுக்கும் பாட்டன்மார் பெயர்களுக்கும் ஆதாரமாகின்றது.

பெண் மகவுகளுக்கும் நாமகரணம் என்ற ஸம்ஸ்காரம் விதிக்கப்பட்டிருக்கிறது. பெண்களின் பெயர் ஒத்தைப்பட்ட எழுத்துக்களால் இருக்கவேண்டும். வேறு விதமான அக்ஷர நிபந்தனைகள் இல்லை. ஆயினும் அவைகளுக்கு விவாகம் நடத்த வேண்டுமென்று விரும்புகிற பெற்றோர் அவற்றிற்கு நதியின் பெயரையோ, மரத்தின் பெயரையோ, இடாதிருக்க வேண்டும் என்பது விவாக ஸந்தர்ப்பத்திலேயுள்ள ஸ்மிருதி வாக்கியங்களால் தெளிவாகின்றது. இவ்வகை விதிகளை மீறிய பெயர்களையுடைய பெண்களை மணந்து கொள்ளுதல் கூடாது என்ற ஸ்மிருதி வாக்கியங்களை இக்காலத்திலே பின்பற்றுவர் ஒருவருமே இல்லை.

நாமகரணத்தை யொட்டிய கதையொன்று சொல்லுவதுண்டு. ஒருவனுக்குப் பெயரிடும் காலத்திலே சுலோகத்திலே சுலபமாக இடமுடியாததோர் பெயரை பெற்றோர் இட விரும்பிய போது அது இறந்தக்கால் அதைப்பற்றிச் சரம சுலோகம் செய்வது கடினமாக இருக்கும். ஆதலால் அப்பெயரை இடவேண்டாமென்று அவ்வூர்ப் பண்டிதர் வேண்டினாராம். அவ்வாறின்றி அழகிய பெயர்கள் ஆயிரக்கணக்கான ஈசுவர நாமங்கள் இருக்கின்றன. அவனைப் புகழ்ந்து பாட விரும்பி எவ்வகைத்தான பாடல் தொடங்கினும் அதற்கிசைந்த ஈசுவர நாமம் ஒன்று கிடைக்கின்றது. இது பற்றியே நம்மாழ்வார், "சேரும் கொடை புகழ் எல்லையிலானை ஓராயிரம் பேரும் உடைய பிரானையல்லால் மற்று யான் கிலேன்" என்று 'ஓராயிரம் பேருமுடைய பிரான்' என்பதன் உரையிலே "கவிபாடுமிடத்தில் ஒன்றிரண்டு போராய் அதுதானும் "ஐலபில:"* என்றாற்

(இதன் தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க.)

* 'ஐலபிலன்' குபேரனுடைய பெயர்களிலே ஒன்று

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

ஸத்யவதி

[ஸ்ரீமதி விசாலாட்சி அம்மாள்]

VIII

மனோவியாதியே மனிதனைக் கொல்லும். ஸத்யவதி எப்பொழுதும் வருந்தியவண்ணமே இருந்தபடியால் அவளுடைய வியாதி அதிகரித்ததேயன்றிக் குறையவில்லை. அவளுக்கு, தான் இனி பிழைத்து சௌக்யமாகவும் ஆனந்தமாகவும் இருப்போமென்ற நம்பிக்கையே போய்விட்டது. கூடிய சீக்கிரத்தில் தான், இம் மண்ணுலக வாழ்க்கையை விட்டுச் செல்வோமென அறிந்தாள். தான் இறந்த பின் தன்னருமைக் குழந்தைகளை அன்புடன் ஆதரிப்பா சொருவருமில்லையே என இடைவிடாது வருந்தியவண்ணமே யிருந்தாள்.

ஒருநாள் அவள் தன் குழந்தைகளைத் தன்னருகில் அழைத்து, கட்டியணைத்து முத்தமிட்டு தன் சிறு குழவியை மார்புடனணைத்து மற்ற இருவர்களையும் கட்டிலில் தன்னருகில் உட்காரவைத்துக்கொண்டு, "நரேந்திரா! உன்னுடைய தாதா என்னை வரச்சொன்னார். ஆதலால் நான் இன்னுஞ் சில தினங்களில் அவரிடம் செல்வேன். நீ இச்சிறுவர்களான உன் தம்பிகளை அன்புடன் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுகிறாயா?" என வினவினாள். பால்மணம் மாறாத அச்சிறு பாலன் பின் வருமாறு மழலைச் சொல்லில் கேள்விகள் கேட்கலானான்:—

ந:—அம்மா! தாத்தா! எங்கே யிருக்காரம்மா?

ஸ:—மேலுலகத்தி லிருக்கிறார்.

ந:—நாங்களுங்கூட தாத்தாவை பார்க்கணுமம்மா! நாங்களும் வரட்டுமா? எங்களையும் கூட்டிப்போனால் தாத்தா சந்தோஷப்படுவார். என்ன? என கெஞ்சினான் சிறுவன்.

ஸ:—குழந்தாய்! மிகவும் கெடுதல். அது தப்பு. நீ அவ்விதம் சொல்லலாகாது.

ந:—அம்மா! அப்படியானால் எங்களை யாரிடம் விட்டுவிட்டுச் செல்வாய்?

என்று கூறின வார்த்தைகளைக்கேட்டு பதில் சொல்ல வகையறியாமல் ஸத்யவதி கண்ணீர் விட்டனள். அதைக்கண்ட சிறுவன் பரபரப்புடன் தன் கிழிந்த வஸ்திரத்தை எடுத்து அவள் கண்களை ஆதரவுடன் துடைத்து, "அம்மா! அம்மா! ஏன் அழுகிறாய்? நீ அழாதே, நீ எங்கும் செல்லவேண்டாம். நாங்களும் உன்னை விட்டு இருக்கமாட்டோம், தாதாவிற்கு வரவில்லை என்று சொல்லி யனுப்பிவிடு" என்றனன். பின்னும் கபடமற்ற அவ்வார்த்தைகளைக் கேட்டு தாயானவள் ஓவெனக் கதறி அழத் தொடங்கினாள். ஒன்றுமறியாச் சிறுவர்களும் கூட அழ ஆரம்பித்தனர். அவள் அழுததினால் இழும்பல் அதிகமாகி ரத்தமாக வாயிலெடுத்து அப்படியே மூர்ச்சையடைந்தனள். சிறுவன் நரேந்திரன் பன்முறை "அம்மா! அம்மா!" வென அழைத்தும் அவள் பதிலே பேசாததால் குழந்தைகள் பிரமித்து உட்கார்ந்திருந்தனர். இச்சமயத்தில் டாக்டரும் வந்து சேர்ந்தார். இத்தகைய கோரக் காட்சியைக் கண்ட டாக்டர் மிகவும் வருந்தியவராகிவிட்டார். அப்பொழுது நரேந்திரன், "டாக்டரே! எங்கம்மா! பேசவேயில்லையே. கொஞ்சம் பேசச் சொல்லுங்களேன்." என்று அவர் காலை கட்டிக்கொண்டு கெஞ்சினான்.

உடனே டாக்டர் குழந்தையை அன்புடன் எடுத்துக்கொண்டு "குழந்தாய் பயப்படாதே; உன் தாயார் பேசுவாள்," எனக்கூறி அவளருகில் சென்று அவளுக்கு தகுந்த சிகிச்சைகள் செய்து அவள் மூர்ச்சை தெளியும்படி செய்தார். அவள் கண் விழித்து டாக்டரையும், குழந்தைகளையும், மாறி மாறித் துக்கத்துடன் நோக்கினாள். அவளால் பேசவே முடியவில்லை. வைத்தியருக்கோ ஆரம்பமுதலே அவள் வியாதி குணப்படுமென்ற நம்பிக்கையே கிடையாது. ஆயினும் தன்னால் இயன்றமட்டும் முயன்று

(387-ம் பக்கத் தொடர்ச்சி.)

போலேயாய் ஒரு சந்தஸ்ஸிலே அடங்காதபடி இருக்கையன்றிக்கே. நினைத்தபடி பாசுரமிட்டுக் கவிபாடலாம்படி அநேகத் திருநாமங்களை யுண்டாக்கி வைத்த மஹோபகாரகன்" என்று விளக்கப்படுகின்றதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

பார்ப்போமென நல்ல மருந்துகளைக் கொடுத்து இரண்டு வேளையும் வந்து பார்த்துக்கொண்டிருந்தார். ஆயினும் என்ன பிரயோஜனம்? வியாதியைப் போக்க மருந்துண்டே தவிர மிருத்யுவைத் துரத்த மருந்தில்லை யல்லவா?

இவ்வளவு தினங்களாக டாக்டர் இரண்டு வேளையும் வந்துகொண்டிருந்தபோதிலும் ஒரு முறையாவது சுசீலனைக் கண்டதில்லை. அவர் இதற்குமுன்பே சுசீலனைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தார். அவர் அடிக்கடி, 'ஐயோ! குழந்தை ஸத்யவதியோ மரணத்திற்குத் தயாரா யிருக்கிறாள். அவளுக்குப்பின் தாயற்ற இச்சிறு குழந்தைகளின் கதி என்னவாகும்? என யோசித்து வருந்துவார்.' அவர் ஸத்யவதியைப் பார்க்கும்போது அவள் அக் குழந்தைகளை தன்னிடம் ஒப்புவிக்க பிரியப்படுவதுபோல் அவள் பார்வையிலிருந்து அறிந்துகொண்டார். அவள் ஏதோ பேச முயன்றனள், முடியவில்லை. அதை உணர்ந்த டாக்டர், "அம்மா! நீ பேசக்கூடாது சிரமபரிகாரம் செய்து கொள். இப்பொழுது நீ பேசினால் உன் உயிருக்கே அபாய முண்டாகும். நான் நாளைக் காலையில் வருகிறேன். உன் குழந்தைகளைப் பற்றி நீ கவலைப்படவேண்டாம். நானிருக்கும்போது அவர்களைப்பற்றி நீ கொஞ்சமேனும் வருந்தவேண்டாம்" என்று அவளுக்கு தேறுதல் கூறினார். ஸத்யவதியும் அவருக்கு தன் பார்வையினாலேயே நன்றி செலுத்தினாள். டாக்டரும் வீட்டிற்குச் சென்றார்.

சுசீலன் தன் பத்தினியை உதைத்துவிட்டுச் சென்ற பின்பு வீட்டிற்கே வரவில்லை. வீட்டை விற்ற பாக்கி 1800 ரூபாவையும் வாங்கி குணவதிக்கு நகைகள் செய்து கொடுத்து நிலையற்ற மாம்ச தேகத்தை அலங்கரித்தான். நிலையற்ற இப்பொருளின்மீது ஆசைகொண்டு விலையற்ற தங்கள் கற்பை இழக்கும் வேசிகளின் கபடவஞ்சக சூழ்ச்சியில் சிக்கி, தேனில் விழுந்த ஈயென மயங்கிக்கிடந்தனன் மூடன். அதற்கு முன்பு சுசீலனை திரஸ்கரித்த குணவதி அவனிடம் பணம் இருப்பதை அறிந்து அவனை மிகவும் நேசிப்பவள்போல் நடித்தனள். மூடனான சுசீலனும் அவளுடைய வஞ்சனையை யறியாமல் அவள் விரித்த வலையில் சிக்குண்டான்.

சுசீலனென்று இவனுக்கு ஏன் பெயர் வைத்தனரோ! சிறிதும் வெட்கமற்ற அவன், சிறிது நேரம் தனியே இருந்து சிந்தித்துப் பார்ப்பானாயின் அவன் குற்றம் அவனுக்குப் புலப்படும். ஸகல தேவதைகளின் சாக்ஷியாக அக்னியின் முன்பாக மணந்த தன்னுடைய தர்மபத்னி, பதிவ்ரதா சிரோமணி, தன் க்ருஹலக்ஷ்மி, ஹிந்துஸதீமணிகளுக்கு தலை மாணிக்கம்போன்ற ஸத்யவதி, தன்னுடைய அன்பை முற்றும் தன் பதியினிடம் ஸமர்ப்பித்து, தன் வயிற்றிலுதித்த சிசுக்களின் கதி யாதாகுமோ என வருந்த, சுசீலன் அதைப்பற்றிச் சிறிதும் கவலையின்றி உத்ஸாகமாக ஸ்திரீரூப பிசாசத்துடன் குலாவுவது மிகவும் இழிந்த செய்கை. இவ்வளவுக்கும் ஆதிகாரணம் மதுபானப் பிசாசமே யல்லவா? அக்கொடிய குடியை ஒழிக்க நம் தேசத்தில் மும்முறமாக முயற்சி செய்ய ஒருவராவது முன் வந்தவரில்லை. மதுவிலக்குப் பிரசாரம் வெகு தீவிரமாக நடந்ததொரு காலம். ஆனால் அவ்விதம் நடந்தும் குடி ஒழிந்தபாடில்லை. அந்நிய ஸ்திரீயை தன் ஸகோதரியாகவும் தாயாகவும் பாவித்து வந்த நம் இந்திய தேசம் கலியுக மகிமையினால் தலைகீழாகி விட்டது. எப்பிரதேசத்திலும் மதிகெட்ட வாலிபர்களே மலிந்து கிடக்கின்றனர். ஸ்திரீகளின் பதிவ்ரதாத் தன்மையே குறைந்து வரும் இக்காலத்தில் புருஷர்களைப்பற்றி கேட்பானேன்? நம்முடைய உயர்வுற்ற இந்தியாவானது இவ்வளவு கெடுதலுள்ள மக்களை அடைந்திருப்பதும் காலத்தின் கொடுமையே.

குணமணியான ஸத்யவதி தான் பிழைப்பது அரிதென அறிந்ததும், "ஐயோ! என் பிராணபதியை என் பிராணன் இவ்வுடலில் இருக்கும்போதே கடைசியாக ஒரு முறையாவது காணும்படியான பாக்கியம் எனக்குக் கிடைக்குமா? முன்பு அவர் எவ்வளவு உள்ளன்புள்ளவராக இருந்தார். பாழும் குடியே! நீ யல்லவா என் பதியை இக்கதிக் குள்ளாக்கினாய்? ஈசுவரி! அவருக்கு நல்ல மதியைக் கொடுத்து ரக்ஷிப்பாய்" என வேண்டினாள். பிறகு மெதுவாக எழுந்து பின்வருமாறு தன் கணவனுக்கு ஒரு கடிதம் எழுதினாள்:—

"அன்பு மிகுந்த ஆர்யபுத்ர! என்னை மிருத்யுவானது அணுகிவிட்டது. உங்களை ஒரு முறையாவது பார்க்கவேண்டுமென்று என்

ஏழை மனதானது துடிக்கின்றது. நான் எதாவது தெரியாமல் உங்களுக்கு அபராதம் செய்திருந்தபோதிலும் என்னைக் கருணையுடன் இச்சமயம் மன்னித்து தயவுசெய்து எனக்கு ஒரு முறை தரிசனம் கொடுங்கள். உங்களுடைய பாதங்களுக்கு கடைசி முறையாக நமஸ்கரித்து உயிரைவிடத் தயாராகயிருக்கும், உங்கள்

அடிமை, **ஸத்யவதி.**"

இக் கடிதம் குணவதியின் வீடே கதியாகக் கிடந்த சுசீலனிடம் சேர்ந்தது. அதைப் படித்த அவனுடைய மனது மிகவும் வருந்தியது. தன்னுடைய மனைவியைக் காண அவன் மதியற்ற அவ் வேசியை உத்திரவு கேட்டான். அவளும் தானும் கூடவருவதாகக் கூறி மாலையில் இருவரும் புறப்பட்டு ஸத்யவதியின் சிறு குடிசையை அடைந்தனர். வண்டி வாசலில் நின்றதும் குழந்தைகள் ஓடிவந்து "அப்பா! அப்பா! அம்மாவுக்கு உடம்பு சரியாயில்லை. வந்துபார்; ரொம்ப அழுருள்" என்று மழலைச் சொல்லால் கூறி அவன் முழந்தாட்களை கட்டிபிடிக்க ஓடிவந்தனர். சிறு குழந்தை "அப்பா! என்னை எடுத்துக்கோ" என்று கெஞ்சினன். அவன் தன்னரும் செல்வமான குழந்தைகளை எடுத்துக்கொண்டால் தன்னுடைய வெளுப்பான உடுப்புகள் கசங்கி அழுக்காகி விடுமென அவர்களை ஒதுக்கி உள்ளே சென்றனன்.

மக்கண் மெய்தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற் கேட்ட லின்பஞ் செவிக்கு

என்னும் திருக்குறளின் தெய்வவாக்கை இம்மூடன் எவ்வாறு அறிவான்? அவன் உள்ளே செல்லும்போது குணவதி, 'ஐந்து நிமிஷத்தில் திரும்பி வராவிட்டால் நான் சென்றுவிடுவேன்" என்று கூறி வண்டியிலேயே இருந்தாள். அவன் அதற்குப் பயந்து சீக்கிரமே வந்துவிடுவதாகப் பணிவுடன் விடையளித்து உள்ளே சென்றான்.

சுசீலன் உள்ளே வந்து தன்னருகில் உட்கார்ந்ததும் ஸத்யவதிக்கு அடக்கமுடியாத் துக்கம் பொங்கி யெழுந்தது. தன்னிரு கரங்களையும் அவனுடைய மடியில் வைத்து விக்கி விக்கி அழுதனள். சுசீலனுடைய ஹ்ருதயமானது முன்போலிருந்தால் அவனுடைய மனதானது அக்காட்சியைக் கண்டு உருகிப்போயிருக்கும். அவனுடைய அன்பு நிறைந்த ஹ்ருதயத்தை வேசியின் செய்கையும், குடியும் கல்லேபோல் கடினமாக செய்து விட்டனவல்லவா! சிறிது நேரங் கழித்து ஒருவாறாகத் தன்னுடைய துக்கத்தை அடக்கிக்கொண்டு, "நாதா! நான் இனி உயிருடன் அதிக நாள் இருக்கமாட்டேன். தயவுசெய்து இந்த உடலில் உயிருள்ளவரை என்னை விட்டு அகலாமல் என்னருகிலேயே இருக்கக்கூடாதா!" எனப் பரிதாபமாய்க் கெஞ்சினள்.

இச்சமயத்தில் குண சூன்யையான கொடிய வேசி, சுசீலன் உட்சென்று வெகு நேரமாகி விட்டதால் மிக்க கோப மடைந்து உள்ளே வந்தாள். வந்தவுடன் அந்தப் பரிதாபத்தைக் கண்டு மனமிளகுவதை விட்டு ரௌத்ராகாரமான கோபத்தை அடைந்து, 'சுசில! நீ இவ்விடமே இரு. இதுதான் ஐந்து நிமிஷமோ? நீ இனி என் வீட்டிற்கு வரவேண்டாம்" எனக்கூறி போவதற்கு திரும்பினள். அவன், "குணவதி! கோபம் கொள்ளாதே. இதோ வந்துவிட்டேன். என்னை விட்டு ஓடாதே" என மன்றாடினன்.

போவதற்காகத் திரும்பிய அவளுடைய கொடிய பார்வையில், ஸத்யவதி தன் மாதா பிதாக்களுடைய பிரதிபிம்பத்தை மிக்க விலையுயர்ந்த சட்டங்களில் அமைத்து தனக் கெதிரில் மாட்டியிருப்பது தென்பட்டது. உடனே அவள் சட்டென்ன திரும்பி சுசிலனைப் பார்த்து, "அச்சித்திரம் யாருடையது" என வினவினள். அவன் "அது என் மாமன் மாமி இவர்களுடையது" என்றனன். அதைக் கேட்ட அவள் பரிகாசமாக நகைத்து, "சீ! சீ! வெட்கம் வெட்கம்! இவ்வளவு விலையுயர்ந்த சட்டங்களில் இந்த அழகில்லாத மனிதர்களின் பிரதிபிம்பத்தையா வைப்பது? என்னிட மிருக்கும் அழகிய மனிதர்களின் படத்தை யல்லவோ இதில் வைக்கவேண்டும். ஆகையால் அதை உடைத்து அந்த சட்டங்களை என்னுடைய வீட்டிற்குக் கொண்டுவா" என்று அதிகாரமாகக் கட்டளையிட்டாள். அம் மௌட்டியனும் அவ்வாறே செய்யத் தொடங்கினன்.

இதுவரை பேசாமலிருந்த ஸத்யவதி மெதுவாகக் கட்டிலிலிருந்து எழுந்து அவனுடைய பாதங்களை பிடித்துக்கொண்டு, "ஜீவிதேசுவரா! இன்ன மிரண்டொரு நாள் பொறுத்துக்

கொள்ளுங்கள். என் உயிர் இருக்கும்போது அவ்வாறு செய்யவேண்டாம். பிறகு உங்களிஷ்டப்படி செய்யுங்கள்'' என்று கூறிக் கதறினாள். அந்நிலைமையைக் கண்டு கல்லும் கரையும். கல்லினும் கடிய அவன் மனம் கரையவில்லை. அவளை உதறித் தள்ளிவிட்டு அச் சட்டங்களைப் பெயர்த்து எடுத்துக்கொண்டு குணவதியுடன் அவள் வீட்டிற்குச் சென்றான்.

ஸத்யவதி கீழே விழுந்துகிடக்கும் தன் தாய் தந்தையரின் படங்களை எடுத்து தன் மார்புடன் சேர்த்தணைத்துக் கொண்டு சோகத்தினால் அப்படியே சுருண்டுவிழுந்து மூர்ச்சையடைந்தாள். அன்றிரவு முழுவதும் குழந்தைகள் மூவரும் அம்மா அம்மா என்று பலதரம் கூவியழைத்தும் அவளுக்கு தன் நினைவே யில்லாததால் அவள் பதில் கூறவேயில்லை. குழந்தைகள் இரவெல்லாம் கூப்பிட்டும் பிரயோஜனமில்லாமல் கடைசியில் ஆகாரமளிப்பவர்கள்கூட ஒருவருமில்லாததால் அலுத்துப்போய் அங்கேயே தங்களுக்குத் தோன்றிய இடத்தில் தரையில் படுத்து நித்திரை போயினர். அந்தோ! பரிதாபம்! அக்குழந்தைகளின் திக்கற்ற தன்மையையும், தீன ஸ்திதியையும் அங்கு விழுந்து கிடக்கும் அலங்கோலத்தையும் கண்டு கொலைபாதகனும் கண்ணீர் விடுவான். அந்தோ! பரிதாபம்! பரிதாபம்!

சூரியனும் உதயமானான். டாக்டரும் வந்து சேர்ந்தார். வந்ததும் அங்கு கிடக்கும் அலங்கோலத்தைக் கண்டு பதறி முதலில் ஸத்யவதிக்கு உயிரிருக்கிறதாவென கவனித்தார். மூச்சு மெதுவாக வந்துகொண்டிருந்தது. உடனே அவளுக்கு தகுந்த சிகிச்சை செய்து அவளை மெதுவாக எடுத்துக் கட்டிலில் கிடத்திவிட்டு, குழந்தைகளை எழுப்பி அவர்களுக்கு அன்புடன் ஆகாரமளித்தார். ஸத்யவதியும் கண் விழித்து டாக்டரைப் பார்த்து அவரை விட தனக்கு வேறு திக்கில்லை என்று அறிந்து அவரைப் பார்த்து இவ்வாறு கூறலானாள்.

“வைத்யரத்னமே! என் தந்தையே! உங்களைத்தவிர எனக்கு வேறு ஒருவரும் கதியில்லை. நான் இறப்பதற்காகக் கவலைப்படவில்லை. நான் இந்த இருபத்தைந்து வயதிற்குள்ளாக யாதொரு சுகத்தையும் அடையவில்லை. ஆகையால் எனக்கு இப்பூவுலக வாழ்க்கையே பிடிக்கவில்லை. நான் இறந்தபின் என் குழந்தைகளை ஐயோ! என் சின்னஞ் சிறு குழவிகளை யார் ஆதரிப்பார்களென்ற ஒரே விசனம் என்னை மிகவும் பீடிக்கின்றது. மற்றப்படி எனக்கு வேறே ஒரு சிந்தனையும் கிடையாது. நீங்கள் எவ்வாறு உத்திரவு செய்கிறீர்களோ அவ்விதமே செய்கிறேன். நீங்கள்தான் கதி. உங்களுக்கு மிகவும் புண்ணியமுண்டு'' எனக் கூறி கதறி அழுதுவிட்டனள்.

இதைப் பார்த்த வைத்தியரின் மனது துடித்தது. “அம்மா! நீ வருந்தாதே. நான் குழந்தைகளைக் காப்பாற்றுகிறேன்'' என்று வாக்களித்தார். உடனே அவள் அபரிமிதமான சந்தோஷத்தை யடைந்து மெதுவாக எழுந்து தன் பெட்டியைத் திறந்து அதிலிருந்து அவள் தந்தை எழுதிய மரண சாஸனத்தை எடுத்து அவரிடம் கொடுத்தாள். டாக்டர் அதை வாங்கிப் படித்தார். அதில் முகுந்தநாதர் தன் பேரன்களுக்கு ஒவ்வொருவருக்கும் தனித்தனியே பதினாயிரம் ரூபாய் ஆஸ்தி எழுதி வைத்திருந்தார். ஸத்யவதி தன் குழந்தைகளின் சொத்திலிருந்து வட்டியைக்கூட எடுக்காமல் அப்படியே காப்பாற்றி வைத்திருந்தாள். அவள் பெயரிலிருந்த ரொக்கத்தில் இப்பொழுது ஐயாயிர ரூபாயே மீதி இருந்தது. அதை வைத்யருக்கே வெகுமதியாக எடுத்துக்கொள்ளும்படி கூறினாள். அம் மரண சாஸனத்தை தன் கணவன் பெயரால் மாற்றிவிடுவதாகக் கூறினாள்.

அதைக் கேட்ட டாக்டர், “உன்னுடைய மரணத்திற்கே காரண பூதனான அந்நீசனுக்கு உன் சொத்தை அளிப்பாயாகில் அவ்வளவும் நாசம் செய்துவிடுவான், வேண்டாம்'' என்றார். அதற்கு ஸத்யவதி அவரைப் பார்த்து, ‘‘ஐயா! என் கணவர் முதலில் மிகவும் யோக்யராகயிருந்தார். குடிக்கும் வழக்கத்தினால்தான் இந்த ஸ்திதியை அடைந்தார். எந்தக் காலத்திலாவது அவருக்கு நல்ல காலம் வந்து அவருடைய புத்தி திரும்புமானால் அவர் மறுபடியும் முன்னிருந்த குணத்தை யடைவார். எப்படிப்பட்ட துன்மார்க்கனும் ஒரு சமயத்தில் நல்ல குணவானாக ஆகலாம். ஈசன் செயல் யாரறிவார்? என்னுடைய மரணம் அவருக்கு புத்தியைக் கொடுக்கட்டும். என் நம் இந்தியாவிலுள்ள சகலமான மதுபான லோலர்

களுக்கும் என்னுடைய சீர்குலைந்த குடும்பம் ஞாபகமாகயிருந்து நல்ல புத்தியை யளிக்கட்டும். எவ்வளவோ ஒற்றுமையுடனும், ஆனந்தத்துடனும் ஐசுவரியத்துடனும் நான் அனுபவித்த சுகமானது மதுவினால் தொலைந்ததென்பது வெள்ளிடை மலை. அவர் குடியை ஒழித்து நல்ல நிலைமைக்கு வருவதை நானிருந்து பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. அது என் பாபம். அவர் குணவான். ஆதலால் நீங்கள் அவரிடம் வெறுப்புக் கொள்ளாமல் உங்களால் இயன்றவரை அவரை நல்ல வழிக்கு கொண்டுவர முயற்சி செய்யவேணும். இன்னுமொரு விஷயம்; தயவுசெய்து நீங்கள் கேட்கவேண்டும். அதாவது என்னுடைய பர்த்தா அக்குடியை முற்றும் ஒழிக்கும் வரை இந்த மரண சாஸனத்தை அவருக்குக் காண்பிக்கவே கூடாது'' என்று மிக்க கஷ்டத்துடன் கூறி முடித்தனள்.

இவைகளைக் கேட்ட வைத்தியர் ஆச்சர்யத்தில் மூழ்கினர். "ஆஹா! இவளுடைய பக்தியே பக்தி. தன் பதி மதுபான பிசாசத்தினால் பிடிக்கப்பட்டுத் தன்னையும் தன் குழந்தைகளையும் மிகவும் குரூரமாக நடத்தி பிராணன் போகும் சமயத்திலுங்கூட வந்து பாராமல் வேசிகளுடன் உல்லாசமாய்த் திரிய, இவள் மாத்திரம் அவன்மீது கோப மடையாமல் இன்னமும் அவன் ரூபத்தையே தன் மனதில் வைத்து பூஜிப்பது கொண்டாடத் தக்கதே. ஆஹா! ஸத்யவதி! நீயே பாரததேச பதிவ்ரதா ஸ்திரீகளுக்குள் முதன்மையானவள். உன் கீர்த்தியை எடுத்துரைக்க என்னால் இயலாது. ஓ! ஸாத்வீமணீ! பாரத ஹிந்து சகோதரிகளுக்கு உன் பாதிவ்ரத்யமும் உன்னுடைய பரிதாபகரமான முடிவையுடைய இக் கதை, மதுவினால் மதி கெட்டுத் திரியும் மானிடர்களுக்கும் உதாரணமாக சந்திர சூர்யர்களுள்ளவரை பிரகாசிக்கட்டும். ஆஹா! உன்னைத் தெய்வமாக வன்றோ வணங்கவேண்டும்'' என்று நினைத்து ஆச்சர்யமடைந்தார். வைத்யருக்கு அவளிடம் ஏற்பட்ட கௌரவமானது சொல்லத்தரமல்ல.

"அம்மா என்னாலியன்றவரை உன் கணவரை கொடிய வழக்கத்திலிருந்து மீட்க பிரயத்தனப் படுவேன்'' என்று உறுதிமொழி யளித்தார். ஸத்யவதி நிர்மலமான மனதுடன் கடைசியாக தன் பதிக்கு ஒரு கடிதம் அனுப்பினாள். அது வருமாறு :—

"அன்பரே! என்னுடைய துர்திர்ஷ்டமுள்ள தேகத்தை விட்டு நிர்மலமான ஆத்மா பரமாத்மாவுடன் சலக்கப்போகிறது. இனி எனக்கு சாந்தி எற்படும். இந்த ஜீவன் என்னை விட்டுச் செல்லுமுன், என் தெய்வமாகிய உங்களை, ஒருமுறையாயினும் கண்டானந்திப்பேனென்கிற நம்பிக்கை எனக்குக் கிடையாது. நான் செல்லுகிறேன். நான் சென்றபின் நம்முடைய சிறு குழந்தைகளை ஆதரவுடன் அருகிலழைப்பவர்கள் உங்களைத்தவிர வேறு யாரிருக்கிறார்கள்?

பரப்ரம்ம ஸ்வரூபமான சிறு குழந்தைகளை ஆதரவுடன் காப்பாற்றுங்கள். குடியை ஒழியுங்கள், வேசியை மறவுங்கள். இவைகளே என்னுடைய கடைசியான பிரார்த்தனை. நான் இறந்தபின் குழந்தைகள் மூவரும் தரையிலும் என்மேலும் விழுந்து அம்மா! வெனக் கதறியழுதுகொண்டிருக்கும் போதாவது தாங்கள் தயதுசெய்து வந்து அவர்களை எடுத்து அன்புடன் ஆறுதல் கூறுங்கள்.

இப்படிக்கு,

ஸதா உங்களையே ஹிருதயத்தில் வைத்து பூஜிக்கும், **நிர்பாக்யசாலியான ஸத்யவதி''**

இக்கடிதத்தை அனுப்பிய பிறகு தன் குழந்தைகளை அருகிலழைத்து அவர்களுடன் விளையாடிக் கொண்டும், கதைகளைச் சொல்லிக் கொண்டும் ஆனந்தமாய்ப் பொழுதை போக்கினாள். அப்பொழுது நரேந்திரன், "அம்மா! நீ அழுவதை விட்டு தினமும் இம்மாதிரியே வேடிக்கையாய் இருக்கமாட்டாயா?'' என்றான்.

(ஸத்யவதி அடுத்த சஞ்சிகையில் முடிவுபெறும்.)

ஷண்முகசுந்தரம்.—சில நவீன நாவல்களில் காணப்படும் அருவருக்கத்தக்க வர்ணனைகளும், புத்தியைக் கெடுக்கக்கூடிய கற்பனைகளுமின்றி, இப்புத்தகமானது ஆரம்பம் முதல் அந்தம் வரையில், சன்மார்க்கங்களைப் புகட்டும் விதமாக எளிய நடையில் படிப்போர் பலனுறுமாறு எழுதப் பெற்றிருக்கிறது. கண்ணைக்கவரும் 8 ஆப்டோன் படங்கள் கொண்டது விலை ரூ. **2.**

நமது சிறு கதை

OUR SHORT STORY

[ஸ்ரீமான் T. R. வேங்கடராமய்யர், பி.ஏ.,பி.எல்.]

மூன்று ஸஹோதரர்களும், மூன்று குட்டிப்பேய்களும்

I

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லாம்
தொழுதுண்டு—பின் செல்பவர்"—திருக்குறள்

முன்னொரு காலத்தில் பயிர்ஜீவனம் செய்து கொண்டு குடியானவனொருவ னிருந்தான். அவனுக்கு சாம்பன், தாரன், ஜீவன் என்னும் மூன்று குமாரர்க ளிருந்தனர். அன்றியும், விவாஹமாகாப் பெண்ணும் ஒருத்தியிருந்தாள். அவள் பெயர் மரகதம்.

மூத்தவனான சாம்பன் ராணுவ வேலைப் பயிற்சியினால் அரசர்களை அடைந்து போர் வீரனெனப் பேர்பெற்று ஒரு தேசத்தில் சேனைத்தலைவனாக நியமிக்கப்பட்டு ஏராள மாய்ப் பணம் சம்பாதித்துவந்தான். சம்பாத்தியத்தைக்கொண்டு அவன் ஒரு பெரிய ஜமீனை யும் வாங்கி, தன் ஸ்திதிக்குத் தக்கபடி ஒரு சீமானுடைய பெண்ணையும் மணந்தான்.

தாரனும் அம்மாதிரியே ஒரு வியாபாரியிடம் சேர்ந்து பணக்காரனாகி ஒரு தனிகனான வியா பாரியின் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு உன்னத ஸ்திதியில் இருந்துவந்தான்.

ஜீவனோ வென்றால் ஊரிலேயே இருந்து கொண்டு சோம்பலற்று நிலத்தில் வேலைசெய்து தாய் தந்தையர்களைத் தெய்வமெனக் கருதி, அவர் மனம் கோணாது சிசுருஷை செய்து வந்தான். கிடைத்ததைக் கொண்டு எப்பொழுதும் சந்துஷ்டனாகவே யிருந்துவந்தான்.

சாம்பனுடைய மனைவி, தான் பெரிய சீமானுடைய பெண்ணென்ற கர்வத்தினால் அளவுக்கு மிஞ்சி செலவிட்டுவந்தாள். ஆகவே, இருவரும் வருமானம் போதாது வருந்தினர். கவலை மேலிடவே, சாம்பன் தன் ஜமீனில் ஏதாவது வசூல் செய்து வரலாமென்று புறப் பட்டுப்போனான். குடிகளெல்லாம் ஒன்று சேர்ந்து சாம்பனை நோக்கி, "ஐயா! எங்களை எவரும் கவனிப்பாரில்லை. நிலம் மாத்திரம் இருந்தால் பயிர் ஏறிவிடுமா? மாடு, கலப்பை, ஏற்றம், சால் முதலிய பயிரிடும் கருவிகள் இருந்தாலல்லவா பயிரிடமுடியும்? நாங்கள் எத்தனை முறை உங்களிடம் முறையிட்டும், தாங்கள் பணமில்லை யென்றும், தங்களுடைய செலவுக்கே போதுமான வரும்படி யில்லை யென்றும் சொல்லிவிட்டீர்கள். நாங்கள் என்ன செய்வோம்? நிலம் எல்லாம் அப்படியே இருக்கிறது பாருங்கள். எங்களுக்கு கஞ்சிக்குக்கூட இல்லாமல் தவிக்கின்றோம்" என முறையிட்டுக் கூறினர்.

இதைக்கேட்ட சாம்பன் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து வீட்டிற்குத் திரும்பினான். வாடின முகமாயிருக்கும் சாம்பனைப் பார்த்து அவன் மனைவி அதற்குக் காரணம் என்னவென்று வினவி, பணமில்லாமையெனத் தெரிந்து கொண்டாள். உடனே அவள் மனதில் ஒரெண்ணம் உண்டாயிற்று.

"ஊரிலிருக்கும் உமது தாய்தந்தையர்களுக்கும் ஜீவனுக்கும் அவ்வளவு ஆஸ்தி எதற்காக? அவர்கள் பயிரிட்டு ஜீவிப்பவர்கள். நாகரிக வாசனையே தெரியாதவர்கள். எவ்விதமாவது ஒரு பாகம் பிரித்தெடுத்து வந்துவிட்டால் நம் சொத்தோடு சேர்த்து சுகமாக ஜீவிக்கலாம்" எனத் தன் கணவனுக்கு யுக்தி சொல்லிக் கொடுத்தாள்.

சாம்பனும் தன் மனைவியின் தீக்ஷ்ண புத்தியை மெச்சி ஊருக்குப் புறப்பட்டான். இரண்டொரு நாளில் ஊர்போய்ச் சேர்ந்து, ஜீவனால் காப்பாற்றப்பட்டு சுகமாக காலங்கழிக்கும் தன் தாய் தந்தையர்களைக் கண்டான். "இந்தக் கிழங்களுக்கு இவ்வளவு போகமா?" என எண்ணி, அவர்களுடைய சுக ஜீவனத்தை அவனால் கொஞ்சமேனும் சகிக்க முடியவில்லை. எனவே, சொத்தில் மூன்றில் ஒரு பங்கு பாகித்துக் கொடுக்கும்படிக் கேட்டான்.

தகப்பனார்: "நானோ வயது முதிர்ந்த கிழவன். ஜீவனும் மரகதமும் இரவும் பகலும் உழைத்துப் பெருக்கிய சொத்தை பாகிப்பதற்கு எனக்கென்ன உரிமை? இருந்தாலும், அவர்கள் வந்ததும் அவர்களைக் கேட்போம்."

சாம்பன்: "ஜீவன் ஒரு சுத்த மடையன். மரகதத்திற்கோ காது செவிடு, வாய் ஊமை. இருவர்களுக்கும் கனவிலும் கல்யாணம் ஆ

காது. இவர்களுக்கு ஆஸ்தி அனவசியமல்லவா? நான் ஒரு நாகரிகமான சீமாட்டியை மணம் புரிந்திருக்கிறேன். எனக்குத் தான் எவ்வளவு இருந்தாலும் போதாது. மரியாதையாய் பாகித்துக் கொடுத்தால் சரி. இல்லையேல் என் சுயரூபத்தைக் காண்பிக்கிறேன்'' என பயமுறுத்தினன்.

இங்ஙனம் இவ்விருவரும் பேசிக்கொண்டிருக்கும்போதே கலப்பையைத் தோள்மேல் சுமந்துகொண்டு மாடுகளை ஓட்டிக்கொண்டு, தன் ஸஹோதரி பின் தொடர, வீட்டிற்கு வந்து சேர்ந்தான் ஜீவன்.

“அப்பா! உன் தமையன் சாம்பன் வந்திருக்கிறான். அவனுக்கு நம் சொத்தில் மூன்றில் ஒரு பங்கு வேண்டுமாம். நீ என்ன சொல்கிறாய்?'' என்று ஜீவனை அவன் தந்தை வினவினர்.

“வேண்டியதை எடுத்துக் கொள்ளட்டுமே'' என்று சொல்லிவிட்டு, ஜீவன் சாம்பன் வேண்டுவதையெல்லாம் கொடுத்து ஊருக்கு அனுப்பினன்.

சாம்பன் தான் எடுத்துவந்த ஆஸ்தியையும், மற்றும் பல பயிரிடும் கருவிகளையும் தன் ஜமீன் மானேஜரிடம் ஒப்புவித்துவிட்டு தன் மனைவியிடம் போய்ச் சேர்ந்தான்.

தாரனும் அவன் மனைவி அதிகச் செலவிட்டதால் பொருள் போதாமல் வருந்தி, அண்ணன் சாம்பனைப்போல் ஒரு பங்கு பிரித்துக் கொண்டு அவன் மனைவியிடம் போய்ச்சேர்ந்து சுகமாயிருந்தான்.

ஜீவன் தாராள சித்தமுடையவன். எவர் எதைக் கேட்டாலும் தட்டாமல் கொடுக்க சம்மதிப்பான். இளகிய ஹ்ருதயமுள்ளவன். வெளுத்ததெல்லாம் பால், கறுத்ததெல்லாம் நீர் என எண்ணக்கூடியவன். சுய நலமே முதல் தெய்வமாகக் கொண்டாடும் இவ் வுலகிற்கு மாறான நடையுடை பாவனைகள் உள்ளவனவன். அவனது செயல்களே, “மஹா மூடன்'' எனும் பட்டத்தை அவனுக்கு சம்பாதித்துக் கொடுத்தன.

தன் சகோதரர்களுக்கு சொத்தையெல்லாம் பிரித்துக் கொடுத்தும் கொஞ்சமேனும் வருந்தினனில்லை. தாயைவிடச் சிறந்த பூமா தேவியும் தன் தேகபலமு முள்ளவரை தனக்கொன்றும் குறைவில்லை யென்றெண்ணி வழக்கம் போல் பயிரிட்டு பெற்றோரையும் மற்றோரையும் காப்பாற்றி சந்தோஷமாய் ஜீவித்துவந்தான்.

II

நண்பர்களே! இவ்வுலகம் தோன்றியது முதல் நன்மையும் தீமையும் பரஸ்பரம் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறது. இதையே தேவாஸுர யுத்தமென புராணங்கள் கூறுகின்றன. இத்தகைய யுத்தம் இப்பொழுதுதான் முடியுமென எவர் கூறக்கூடும்? உலகமுள்ளளவும் இது இருந்துதான் தீரும். நன்மை, ஸதாசாரம், தெய்வபக்தி இவைகளையெல்லாம் தொலைக்க நம் காலத்திலேயே எத்தனை இயக்கங்கள் தோன்றிவருகின்றன. இவைகளைத்தான் அஸுராம்சம், பேய்க் குணமென்பார் பெரியோர்.

பெருந் தனிகர்களா யிருந்தும் சாம்பனும் தாரனும், அன்றன்று கஷ்டப்பட்டு ஜீவிக்கும் ஜீவனிடம் சென்று பாகம் கேட்டார்களே! யாது காரணமென அறிவீர்களா? இதெல்லாம் அஸுராம்சம் நிறைந்த ஒரு பேயின் வேலையாம். இச் சகோதரர்கள் ஒருவரோடொருவர் சண்டை யிட்டுக்கொண்டு அதர்ம வழியில் செல்ல வேண்டுமென்ற எண்ணத்துடன் அப்பேய் செய்த வேலையாம் இது.

இப் பெரும் பேய்க்கு மூன்று குட்டிப் பேய் வேலைக்காரர்களுண்டு. அதற்கு இம் மூன்று சகோதரர்களும் அந்நியோந்யமாய் வாழ்வது கொஞ்சமேனும் பிடிக்கவில்லை. ஆகையினால்றான் இவர்களைப் பங்கு பிரித்துக் கொள்ளும்படி ஏவிற்று.

மூடனை ஜீவன் பேயினது பேராசையைப் பாழாக்கிவிட்டான். எள்ளளவும் போரின்றி பாகத்தைப் பிரித்துக் கொடுத்தது பேய்க்கு பெருங் கோபத்தை மூட்டியது. உதடு துடித்தது. கண் சிவந்தது. இம்மூட ஜீவனை இப்படியே விடுவதில்லை. கேவலம் பயனற்ற புத்தியில்லா மனிதப் பதரிடமா நாம் தோல்வியடைவது என்று ஆக்ரஹமடைந்தது.

உடனே மூன்றுக் குட்டிப் பேய்களையும் கூப்பிட்டது. “என்னருமைக் குழந்தைகாள்! நம் குலத்திற்கே வந்தது பெரும் அவமானம்.

சீ என்ற வீட்டிலே பேயும் நுழையாது.

அதை நாம் பொறுத்துப் போவோமானால் விரைவில் நமது வம்சம் நாசமாகும். இதுவரை தூங்கிக்கொண்டிருந்ததுபோல் உறங்க இது காலமல்ல. கலி முற்றிவிட்டது. உங்களுக்கு மூன்று சகோதரர்களைப்பற்றி முன்னமே சொல்லியிருக்கிறேனல்லவா? அவர்களைப் பாகம் பிரித்துக்கொள்ளும்படி தூண்டினேன். சாதாரணமாய் அவர்கள் அப்போது போர் புரிந்திருக்க வேண்டும். அம்மூட சிகாமணியான ஜீவன் நமது காரியம் முழுமையும் கெடுத்து நமக்கு அவமானத்தை விளைவித்தான். மனிதரிடமா நாம் அபஜயமும் அவமானமும் அடைவது? இந்த நெருக்கடியான காலத்தில் நீங்களெனக்கு உதவி புரியவேண்டும். இம் மூவர்களும் எப்படியாவது சண்டையிட்டு குடுமியைப் பிடித்துக்கொண்டு நடுத்தெருவிற்கு வரவேண்டும். காரியத்தில் கண்ணாயிருங்கள். தோல்வியடைந்து வந்தால் உங்கள் உயிர் உங்களுடையதல்ல. ஜாக்கிரதை" என்று ஒரு சிறு உபதேசம் செய்தது.

"இதுதானா ஒரு பிரமாத காரியம்! தேசத்தையே நாசம் செய்துவரும் எங்களுக்கு இந்த அல்ப காரியம் எவ்வளவு? மலைவிழுங்கி மஹாதேவனுக்கு கதவு ஓர் அப்பளமல்லவா? ஒரு நாட்டார் மற்றொரு நாட்டாரை எவ்வகையாலோ ஜயித்து, பசி பிணி முதலியவைகளால் வருந்தச்செய்வதும், அந்த நாட்டுத் தொழிலை அழித்து தந்நாட்டுத் தொழிலை வளர்ப்பதும் அவர்களை ஏழைகளாக்கி தாங்கள் தனிகராவதும், அவர்களது கஷ்டத்தினால் தாங்கள் சுகம் பெறுவதும், விழித்தெழுந்தாரை வாய்திறக்கவிட்டாது அடக்குவதும் இதுபோன்ற மற்ற வேலைகளும் எங்களுடைய சாமர்த்தியத்தினாலென மஹாராஜன் அறியாரோ? இதில் சந்தேகம் வேண்டுவதில்லை. உத்தரவு கொடுங்கள். ஒரு நொடியில் ஜயக் கொடியுடன் திரும்புகிறோம்" என குட்டிப் பேய்கள் கூறின.

"நல்லது! எங்ஙனம் வேலை ஆரம்பிக்கப் போகிறீர்கள்" எனப் பெரும்பேய் வினவ, "இது என்ன மஹாராஜா! மிகச் சுலபமான காரியம். நம் நண்பர் வறுமையை உதவிக்கு அழைப்போம். அதனால் ஆகாததென்ன? மானம் போகும். குலத்தை மறப்பான். குணத்தை விடுவான். பெற்றோரையும் மனைவியையுங்கூட விரோதிகளாக மாற்றிக் கொள்வான். எங்களுக்கு ஒரு கஷ்டமுமில்லை. சாம்பனையும், தாரனையும் சொத்தை இழக்கும்படி செய்கிறோம். பணமற்றவன் பிணமன்றோ! அதன்பின் யாது நடக்குமென மஹாராஜனே உணரக்கூடும்" என்றன.

மஹத்தான சந்தோஷமடைந்தது மஹாராஜப்பேய். "பேஷ்! வெற்றி மாலையுடன் ஜய பேரியுடன் திரும்புங்கள். ஒருவர்க்கொருவர் பிடுங்கித் தின்னும்படி செய்யுங்கள். தோல்வியடைந்தால் தோலை உரித்துவிடுவேன்" என்று அம் மூன்று பேய்களையும் ஏவிச்சென்றது. (தொடரும்.)

சிறுவர்க்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

மகாத்மா காந்தி

உத்தமனாய் இரு. இது ஔவை வாக்கு. பூமண்டலத்திலே 150 கோடி மக்கள், நம் இந்தியாவிலோ 33 கோடி; எல்லாரிலும் உத்தமன் யார்? மகாத்மா காந்தியே. அவரே கலி காலத்தில் கண் கண்ட தெய்வம்; கதி தரும் கடவுள்; கருணை வள்ளல்; சாந்த மூர்த்தி; தெய்வப் பிறவி; அவதார புருஷன்.

அகதிக்கு ஆண்டவன் துணை; ஏழைகளுக்கோ காந்தியே துணை. எளியவர் வருந்தின் காந்தி கதறுவார்; கண்ணீர் விடுவார். அவர்கள் துயரைப் போக்கிய பின்பே புசிப்பார். உயிர் என்றால் எல்லாருக்கும் வெல்லம். காந்திக்கு அப்படி அன்று. ஏழைகள் சுகம் அடைய, அவர் தம் உயிரையும் கொடுப்பார்.

படத்திலே அவரது முகத்தைப் பாருங்கள்; கண்ணில் கருணை, பார்வையில் பிரியம் நிரம்பியிருக்கும்; பேச்சிலே அன்பு சொட்டும்; அவரைப் பார்த்திருந்தால் பசி தீரும்; காத்திருந்தால் கலி நீங்கும்; சொல் கேட்டால் சுகம் பெறலாம்.

பம்பாய் மாகாணத்தில் போர்பந்தர் என்னும் இடம் அவரது ஊர். அவரது தந்தை பெரிய பணக்காரர்; மந்திரியாக இருந்தவர். காந்தியோ பெரிய பாரிஸ்டர். படிக்க அவர் சீமைக்குப் போனார். அப்போது, மாமிசம் புசிக்காதே, கள் குடிக்காதே என்று தாயார்

சீவன் போனால் சீர்த்தியும் போமா?

சொன்னாள். தாய் சொல்லை அவர் தட்டி நடக்கவில்லை. தாயினும் சிறந்த தெய்வம் உண்டோ ?

பாரிஸ்டர் பட்டம் பெற்றதும், மாதம் ஆயிரம் ஆயிரமாகப் பணம் தேடினார்; பரம சுகத்தில் இருந்தார்; நம்மவரிலே பலர் இங்கே பிழைப்பு இல்லாமல், தென் ஆபிரிக்கா போயுளர்; அங்கே அவர்கள் அதிக கஷ்டம் அடைந்தனர். காந்தி அதை அறிந்தார்; உடனே தென் ஆபிரிக்கா போனார். அவர்களது கஷ்டங்களைப் போக்கப் பாடுபட்டார். அதிகாரிகள் பிடித்துச் சிறையில் போட்டனர் மூன்று முறை அவர் சிறையில் கிடந்தார். அடி பட்டார்; உதை பட்டார்; எல்லாம் எதற்காக? ஏழைகள் நலம் அடைவதற்காக; தாம் கஷ்டப்பட்டு ஏழைகளின் கண்ணீரைத் துடைத்தார்.

மகாத்மா காந்தி

பின்பு, ஏழைகளுக்கு உழைக்க அங்கே ஓர் ஆசிரமம் ஏற்படுத்தினார். பிறருக்கு உதவி புரிவதே அந்த ஆசிரமத்தின் நோக்கம். இன்றும், பலர் அங்கே பரோபகாரம் செய்து வருகின்றனர். அங்குள்ள நம்மவரின் கஷ்டம் தீர்ந்ததும், அவர் இத்தேசம் வந்தார்; அல்லும் பகலும் ஏழைகளுக்கு உழைக்க முற்பட்டார்.

பம்பாயிலே ஏழைத் தொழிலாளர் அதிகம். அவர்களுடைய கஷ்டம் கண்டு காந்தி சகிக்கவில்லை; மூன்று நாள் பட்டினி கிடந்தார். ஏழைகளின் துன்பத்தைப் போக்கினார். பின்பு, ஏழைக் குடியானவருக்கு ஊழியம் புரிந்தார். அதில் கஷ்டமும் நஷ்டமும் வந்தும், அவர் கவனிக்கவில்லை. தான் துன்பம் அடையினும் பிறர் சுகப்பட்டால் போதும் என்பதே அவர் கருத்து.

கோபம் என்பது அவரிடம் கிடையாது. பகைவனிடமும் அவர் அன்பு காட்டுவார்; யாவரையும் நோகச் செய்யார்; அன்பினால் அனைவரையும் வசம் செய்வார்; தீமை செய்தவனுக்கும் நன்மையே செய்வார். இது கண்டு உலகத்தார் அனைவரும் அவரை ஈசுவர அவதாரம் என்று ஏத்துகின்றனர்; தொழுகின்றனர்; எனவே, கல் நெஞ்சனும் அவரது குணம் கண்டு மனம் கரைவான்; கள்வனும் கை எடுத்துக் கும்பிடுவான்; கரடி, புலி முதலிய துஷ்ட மிருகங்களும் அவரைக் கண்டு அடங்கி நிற்கும்.

நம் தேசத்திலே பலருக்குக் கட்டத் துணி இல்லை. அது கண்டு அவர் மனம் இளகினார்; சட்டையும் குட்டையும் வேண்டாம் என்றார்; முழத் துணியே கட்டிக் கொண்டிருக்கிறார். ஏழைகளுக்கு நன்மை கிடைக்க, ராட்டையில் அவர் நூல் நூற்கிறார்; கதர் ஆடையே கட்டுகிறார்; கருணை வடிவாய் விளங்குகிறார்.

ஒரு சமயம் இங்கே அவரை ஆறு வருஷம் சிறையில் போட்டனர். தண்டனை கொடுத்த அதிகாரியே அவரை மகான் என்று பேசிப் புகழ்ந்தார். ஆங்கில ராஜாங்கமும் அவரிடம் மதிப்பு வைத்தது. காரணம், அவரது அருங் குணமே. எங்கேனும் அவர் போனால், தேர், திருநாள் போல் ஜனங்கள் கூடுவர், அவரைத் தரிசித்து வணங்குவர்.

நாளது அக்டோபர் 2உ புதன் கிழமை அவருக்கு அறுபது வயது நிரம்பி 61 வது வயது பிறக்கின்றது. அந்த தினம் நம் இந்தியா முழுவதும் சுப தினமாய்க் கொண்டாடப்பட்டது.

சுக்கு அறியாத கஷாயம் உண்டா?

நல்லாரைக் காண்பதுவும் நன்றே! நலம் மிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே!—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே!

அல்லவா? ஆதலால் தான் அவர் திருநாளை நம் தேசம் எங்கும் கொண்டாடினர். கொண்டாடினால் மாத்திரம் போதுமா? அவரைப்போல் எல்லாரும் நல்லவராய், உத்தமராய் இருக்கவேண்டும்; உயர் குணம் கொள்ளவேண்டும்: அனைவரிடமும் அன்பு காட்டவேண்டும்; யாருக்கும் உதவி புரியவேண்டும்; அவரைப் பின்பற்றி நடந்து மேலான நிலை பெறவேண்டும். அவரது முழுப் பெயர் **மோகனதாஸ் கரம் சந்திர காந்தி**. அவர் நீடூழி வாழ்க!

வாழ்க காந்தி வாழ்கவே!

அருள் வேண்டுதல்

PRAYER FOR GRACE

[சுவாமி சுத்தானந்த பாரதியார் பாடியது]

---

1. அம்மாவுன் னன்பினில்யான் கரைந்துருக வேண்டும்!
அருட் சுடருன் திருவடிக்கே யாளாக வேண்டும்!
பொய்மாய வருட்குலங்கள் பொன்றிடவே வேண்டும்!
பொருளாய காட்சியினிற் பொருந்திடவே வேண்டும்!
இம்மணிற் பொன்னுலகம் இலங்கிடவே வேண்டும்!
எவ்வுயிரும் என்னுயிர்போல் இரங்குமனம் வேண்டும்!
உன் மயத்தை யிவ்வுலகம் உணர்ந்துசம ரஸத்தில்
ஓர் குலமாய், சுதந்திரமாய் உவந்திருத்தல் வேண்டும்!

2. அறமொன்றே மக்கள்மத மாகிடுதல் வேண்டும்!
அருட்பணியே மெய்த்தவமாய் ஆற்றிடுதல் வேண்டும்!
நிறைவான பேரின்ப நிலை யருளல் வேண்டும்!
நோக நீயென்முன் னின்றிலக வேண்டும்!
இறவாமற் பிறவாமல், இருந்திடவே வேண்டும்!
என்றுமுன்றன் திருக்கருணைக் கெனையாளல் வேண்டும்!
திறமையுடன் உன்னன்பைச் செய்திடவே வேண்டும்!
தெவிட்டாமல் தென்றமிழில் உனைப்புகழ வேண்டும்!

3. ஆயா யான் உன்மடிமேல் ஆடிடவே வேண்டும்!
அணுகாமற் பிணியிருளே யாண்டருள வேண்டும்!
ஓயாமல் என்னுடன்நீ யுரையாடல் வேண்டும்!
ஒளியாமல் உனையென்முன் ஒளிர்ப்பித்தல் வேண்டும்!
காயாமல் யான் ஞானக் கனி பழுத்தல் வேண்டும்!
கவலாமல் உன் களிப்பிற் காதல்கொள வேண்டும்!
தோயாமற் புன்விழையில் தூய நிலை வேண்டும்!
சுத்த சுதந்திரச் சுடராய்த் துலங்குதலே வேண்டும்!

4 தாயேயென் காதல்முறை தந்திடுதல் வேண்டும்!
தணியாத சக்திபெறுந் தவச்சுடரே வேண்டும்!
வாயார உனைப்பாடி மனமகிழ வேண்டும்!
வன்றெண்டும் பாட்டுடனே வாழ்வினுற வேண்டும்!

நோயற்றுப் புவியுய்ய நன்றுணையே வேண்டும்!
நோவுறினும் நோவீயா நன்பொறுமை வேண்டும்!
தேயாமல் என்னாட்டின் திருவிளங்க வேண்டும்!
சேயாக நீ யென்னைச் சீராட்ட வேண்டும்!

5. அன்னாய் என் பசிக்கமுதம் அளித்திடுதல் வேண்டும்!
அழியாத யாக்கையொடு யமரநிலை வேண்டும்!
மன்னுலகிற் றூய்மையெனும் மணிவிளக்கை யேற்றி
மாந்தரையுன் மனதாற மகிழ்விக்க வேண்டும்!
என்னாவிக் கமுதாக நீயிலங்க வேண்டும்!
எந்நாளும் உன்னன்பில் இளமையுற வேண்டும்!
உன்னாணைத் தொண்டினிலே யுழைத்திடவே வேண்டும்!
உன்கருவி யுன்குழந்தைக் குன்றுணையே வேண்டும்!

6. உன்பெயரால் உழைத்தப்பயன் உன்னருளே வேண்டும்!
உனைநம்பி யுண்டதெல்லாம் மருந்தாக வேண்டும்!
உன்பெயரால் உரைத்தது மந்திரமாதல் வேண்டும்!
உனையெண்ணு மெண்ணமுயர் தவமாதல் வேண்டும்!
உன்னையலா லுளும்புறமும் காணாமை வேண்டும்?
உவப்புடனுன் னுணர்ச்சியிலே யுயிர்குளிக்க வேண்டும்!
உன்சக்தி யோடிருந்தே யுலகாடல் வேண்டும்!

ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தித் தாயே!

குயிற் கண்ணி

மேனி கறுத்தாலும் வேடஞ் சிறுத்தாலுங்
கானங் கறுக்குமோடீ—குயிலே வீரஞ் சிறுக்குமோடீ!
பார்க்கக் கறுப்பாகப் பாங்கா யிருந்தாலுங்
காக்காயுனைப் போலுமோ—குயிலே காணந்தினை யாகுமோ!
சாதி மதமுண்டோ சச்சர வுண்டோவுன்
வேதப் பெருக்கினுக்கே—குயிலே வீங்குஞ் சமரஸமே!
எங்கு மிருப்பவனின் ஏவலால் என்னுள்ளந்
தங்கு முயிர்க்கிளியை—குயிலே தாஸனாய்க் கொள்வாயடீ!
நித்திய மாகின்ற நெஞ்சகச் சோலையிலே
சுத்தம் சமத்வ மென்றே—கிளியே சுதந்திர மாய்ப்பாடுவாய்!

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS AND NOTES

✓காலஞ் சென்ற ஸ்ரீமான் மகேச குமார சர்மா

"மகேச குமார சர்மா என்னும் புனைப் பெயர் பூண்ட ஸ்ரீமான் ம. குப்புசாமி ஐயரை அறியாத தமிழ் மக்கள் மிகச் சிலரே. இப் பெரியாரது மரணம் தமிழுலகிற்கே நிரம்பவும் துக்ககரமான சம்பவமாகும். அவர் தமிழுல கிற்குப் புரிந்திருக்கும் நன்மைகள் பல. ஆங் கிலத்திலும் வடமொழியிலும் நிகரற்ற புலவர். மற்றும் வங்காளி முதலிய பல மொழிகளிலும் நல்ல பயிற்சி பெற்றவர்.

தேசபக்தியிற் சிறந்த வங்க நாட்டுச் சிங்க மாகிய பங்கிம் சந்திர சட்டர்ஜீ அவர்களின் தேசபக்தி புகட்டும் அரிய நூல்களை தமிழில் மொழிபெயர்த்து தேசபக்தி என்னும் விதை யை இத்தமிழ் மக்களின் உள்ளமாகிய வயலில் விதைத்தவர் இவரே. அவற்றுள் முக்கிய மானவை, ஆனந்த மடம், சந்திரசேகரன் என் பவைகள்.

சென்ற, இரண்டாண்டுகளாக அவரால் விவேக போதினியில் எழுதப்பெற்ற 'ஸம்ராட் அசோகன்' என்னும் சரித்திர சம்பந்தமான கதை முடிவுற்று நாட்டாற்றில் விட்டதுபோல் நிற்கிறது. அதன் நடையழகும் சொற் சுவை யும் பொருட் சுவையும் வேறொருவரும் அதைத் தொடரவோ பூர்த்தி செய்யவோ முடியாதவாறு, அருட்கவியின் வாக்கினின் றும் பெருகும் இன்பப் பெருக்காய் அமைந் திருக்கிறது. அக் கதையை எவரேனும் தொடர்ந்தெழுதின் அவர் மாட்டுத் தமிழுலகம் எல்லையற்ற நன்றி பாராட்டக் கடமைப்பட் டிருக்கிறது.

சிந்தாமணிப் பத்திரிகையில் இவர் எழுதி யுள்ள 'பர்வத குமாரி' என்பதும் இதே நிலையிற் றானிருக்கிறது. எவரேனும் மொழிபெயர்த் தெழுதின் சிந்தாமணி அபிமானிகளுக்கு நிரம் பவும் பயன்படும்.

இதுபோலவே முன்னர் ஒரு முறை ராஜ மய்யர் (கமலாம்பாள் சரித்திர ஆசிரியர்) எழு திய உண்மை உயர்வு அல்லது வாஸுதேவ சாஸ்திரி என்பதும் தொடர்வாரின்றி நசித்து விட்டது.

இவருடைய வயதையேனும் ஜீவிய சரிதை யையேனு மறிந்தவர் இங்கொருவரு மிலர்; சென்ற ஒருவருடகாலமாய் சித்தப்பிரமையாய் இருந்ததாய்க் கேள்வி. செப்டம்பர்மீ 23உ திங்கட்கிழமை (23-9-29) சிங்கப்பூரிலுள்ள அவரது கிரகத்தில் அவர் மனைவியையும் இரண்டு புதல்வரையும் ஒரு புதல்வியையும் பரி தவிக்க விட்டு இம்மண்ணுலக வாழ்வை நீத்துப் பொன்னுலக மடைந்தார். இப்பெரியாரது ஜீவியசரிதை பத்திரிகாபிமானிகள் எவ ருக்கேனும் தெரிந்தால் எழுதுவார்களென நம்புகிறேன்" என ஸ்ரீமதி குஹப்ரியை எழு துகிறார்.

* * *

செயற்கை ரத்னங்கள்

லூயிகோலே எனும் பிரஞ்சு ரஸாயன வித்து வான், மாணிக்கங்கள், வைடூரியங்கள், ரத்னங் கள் முதலியவைகளை செயற்கையாய் ஆராய்ச்சி சாலைகளில் தயார் செய்யக்கூடிய முறை ஒன் றைக் கண்டு பிடித்திருக்கிறார். இம்முறையால் செய்யப்படும் கற்கள் எவ்விதத்திலும் இயற் கைக்கற்களைப் போன்றேயிருக்கும். அவை கள் மனிதனால் செய்யப்பட்டவை யென்ற வித்தியாசத்தைத் தவிர வேறெதிலும் அவற் றைக் குறைகூற முடியாது.

* * *

இஷ்டப்படி இளைக்கவும் பெருக்கவும்

பிரொபஸர் கிரந்தால், பிரொபஸர் கிராப் எனும் இரண்டு வைத்திய நிபுணர்கள், மூளை யினுட் புறத்தில் ஒரு நுட்பமான நரம்பைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இந்நரம்பானது சரீரம் உட்கொள்ளும் ஆகாரத்தின் சத்தை சரியானபடி உபயோகிக்க உதவுகிறதாம். அதன் செய்கைகளைச் சரியானபடி திருத்தினால் பருமனு யிருப்பவர்கள் இளைக்கவும், இளைத் திருப்பவர்கள் பருமனுகவும் கூடுமாம். மேற் சொன்ன இரண்டு வைத்தியர்களும், மூளை முதலிய ஸூக்ஷ்மமான பிரதேசங்களில் உள் ளவைகளை ஆபரேஷனின்றி, ரஸாயனப் பொருள்களைக் கொண்டே அறியக்கூடிய வழி ஒன்றைக் கண்டுபிடித்திருக் கின்றனராம்.

* * *

பனிக்கட்டிக் கிணறுகள்

கனடா முதலிய குளிர்த்தேசங்களில், மாரி காலத்தி லேற்படும் அபரிமிதமான குளிரை, கோடைகாலத்தில் உபயோகப்படுமாறு பின் வருமாறு உபயோகப்படுத்திக் கொள்ளுகின்றனர். பனிகாலத்தில் ஒரு கிணற்றை வெட்டி அதில் தினந்தோறும் கொஞ்சம் ஜலம் கொட்டி வருவார்கள். அக்கிணற்றின் வாய் காற்றுக்கூடப் போகமுடியாது அவ்வளவு சமமாய் மூடப்பட்டிருக்குமாம். அம்மாதிரி செய்வதால், வெளியிலுள்ள குளிரினால் உள்ளேயுள்ள ஜலம் உறைந்து விடுகிறது. இங்ஙனம் கொஞ்சம் கொஞ்சமாய் ஜலம் உள்ளே கொட்டிவந்தால், தினந்தோறும் பனிக்கட்டியின் பருமன் அதிகரித்துவரும். கிணறு நிரம்பிவிட்டபோது அழுத்தி மூடிவிட்டால், அக்கிணறு நிறைய பனிக்கட்டி தங்கிநிற்கும். கோடைகாலத்தில் குளிர்ந்த பானங்களோ, அல்லது குளிர்ந்த பதார்த்தங்களோ வேண்டியபோது, மூடியைத் திறந்து அவற்றைக் கிணற்றினுள் பனிக்கட்டியின்மீது கொஞ்ச காலம் வைத்திருந்து எடுத்தால், அவை சீதளமாய் விடுமாம். இம்மாதிரி மாரிகாலத்தின் சீதளத்தை கோடை காலத்துக்கு வேறு வழிகளில் உபயோகிக்க, அமெரிக்கர்கள் முயற்சி செய்துகொண்டிருக்கின்றனர். மேற்சொன்னபடி செய்யப்பட்ட கிணறு ஒன்றில் 400 பவுன் பனிக்கட்டி உறைந்திருந்ததாம்.

* * *

சூரிய வெளிச்சம்

அமெரிக்காவிலுள்ள நியூயார்க் நகரத்தில், வியாதி வராமல் வீடுகளை வைத்துக்கொள்ள வேண்டிய முறைகளைக் கண்டறிய ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. அவர்கள் செய்துள்ள பல வேறு பரீக்ஷணங்களில், சூரிய வெளிச்சத்தைப் பற்றியவை கவனிக்கத் தக்கது. ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு அறையும் அரைமணி நேரமாவது சூரிய வெளிச்சமானது படுமானால், அவ்வீடும் முன்னைக் காட்டிலும் எவ்வளவோ சுகாதாரமாயிருக்குமென்று கூறுகின்றனர். சூரிய வெளிச்சத்துக்கு கிருமிகளைக் கொல்லும் சக்தியுண்டென்பது உலகமறிந்த விஷயம். அச்சக்தி சூரியன் உச்சியிலிருக்கையில் மிகவும் அதிகமாகவிருக்கும். நேர் சூரிய வெளிச்சமின்றி, ஆகாயத்தால் திருப்பி யனுப்பிக்கப்படும் சூரிய வெளிச்சத்துக்கும் இச்சக்தி உண்டென்று மேற்சொன்ன கமிட்டியார் கண்டுபிடித்திருக்கின்றனர்.

* * *

பிராண வாயு

நியூமோனியா முதலிய ஜுரங்களில் பிராண வாயுவை உட்செலுத்த, ஒரு ஆஸ்திரேலிய டாக்டர் நூதனமான முறை ஒன்றைக் கண்டு பிடித்திருக்கின்றார். சாதாரணமாய் பிராண வாயுவைச் செலுத்தும் முறைகள் அவ்வளவு சரியாய் வேலை செய்வதில்லை; ஏனெனில் அவைகளால் பிராண வாயு பாதிக்குமேல் நஷ்டமாகி ஆகாயத்துடன் கலந்துவிடுகிறது. இப்புதிய முறையால் அது முடியாது. ஒரு "ஹைபோ டெர்மிக்" ஊசியால் மார்பின் கீழ்ப்புறத்தில் பிராண வாயுவை உட்செலுத்த, அது ரத்தத்துடன் சுலபமாய்க் கலந்து, முன்னினும் பன்மடங்கு வீரியத்துடன் வேலைசெய்யுமாம்.

* * *

ஜ்வலிக்கும் எழுத்துகள்

இரவில் திடீரென நினைத்தபோது விளக்கின் வெளிச்சமின்றி எழுத ஒரு கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அது ஒரு சாதாரண பென்ஸில்மாதிரி செய்யப்பட்டு அதற்கென அமைக்கப்பட்ட ஒரு அட்டையோடு பொருத்தப்பட்டுள்ளது. இப் பென்ஸிலால் அட்டையின் மேல் எழுதிக்கொண்டு வந்தால், எழுதும்போதே எழுத்துகள் ஜ்வலித்துக்கொண்டு வருமாம்.

* * *

அழகிய ஸ்திரீ:—உலகத்திலுள்ள ஸ்திரீகளில் யார் மிக அழகு வாய்ந்தவர் என்று நிர்ணயிக்க ஐரோப்பா கண்டத்தில் ஒரு போட்டி நடைபெறுவது வழக்கம். இவ்வருஷம் நடைபெற்ற போட்டிக்குப் பதினொருபேர் பிரசன்னமாயிருந்தனர். பிராலின் கோல்டார் பீடர் என்ற ஓர் ஆஸ்திரிய மாது, இப் போட்டியில் கெலித்தாள். இவளுக்கு இரண்டாயிரம் பவுன் பரிசாகக் கிடைத்தது. உலகத்திலுள்ள ஸ்திரீகளில் பதினொரு பேரே போட்டி போட விரும்பினர்போலும்!

* * *



ஸ்ரீ காளத்தி மலை

கண்ணப்பர் பக்தி பரவசம்